
# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை

தேசம் □ இதழ் 21 □ ஜனவரி 05 - பெப்ரவரி 05 □ ISSN 1474 - 8770



TRO நிதி : சர்வதேச நாடுகள் அழுத்தம்




எச்சரிக்கை சுனாமி




எம் கெ ஸ்ரீ அன்கோ நம்பகமற்றது : தீர்ப்பு



## தமிழ் வர்த்தகர் வீட்டில் கள்வர்கள் கைவரிசை

ஜன 23 நடு இரவில் ஈஸ்ற்ஹாம் பெட்பேர்ட் வீதியில் உள்ள வர்த்தகர் பார்த்தீபன் (அப்பன்) வீட்டில் புகுந்த கறுப்பினத்தவர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி உள்ளார்கள். வீட்டில் இருந்த பார்த்தீபனையும் அவரது மனைவி மற்றும் நண்பர் ஒருவரையும் கட்டிப் போட்டுவிட்டு பணம், நகைகள் என எல்லாவற்றையும் சுருட்டிச் சென்றுள்ளார்கள்.

ஆசிய நாட்டவர் ஒருவர் கதவைத் தட்டி முகவரி விசாரிப்பது போல் பாவனை செய்ய பதுங்கி இருந்தவர்கள் வீட்டினுள் நுழைந்து துப்பாக்கி மற்றும் கத்திகளைக் காட்டி மிரட்டி வீட்டை சூறையாடி உள்ளார்கள். ரில்பறியில் உள்ள தனது கடைகளின் வெள்ளி, சனி, ஞாயிறு வியாபாரப் பணத்தை வீட்டில் வைத்திருந்தார் பார்த்தீபன். மேலும் நண்பர் இன்னொருவருக்கு வழங்கிய பணம் £4,000 வீட்டில் இருந்தது. தற்போது அனைத்தும் பறிபோயுள்ளது. மொத்த இழப்பு £50,000 வரை இருக்கும் என்கிறார் அவரது நண்பர் ஜெயதேவன்.

சுனாமிக்கு முன் வடக்கு லண்டனிலும் தமிழர் ஒருவரின் வீடு மாலை ஏழு மணியளவில் கொள்ளையிடப்பட்டது. மேலும் தென்மேற்கு இலண்டனில் உண்டியல் குகன் என்பவரின் வீட்டில் பொலிஸ் உடையில் வந்த திருடர்கள் பட்டப்பகலில் பெரும் தொகைப் பணத்தை கொள்ளையடித்துச் சென்றமை தெரிந்ததே.

### சிறைவாசம் ஆரம்பம்

தனது மூன்று குழந்தைகளுக்குத் தாயான 39 வயது மனைவியை கொலை செய்ய 9 தடவைகள் கத்தியால் குத்திய கணவன் பாலச்சந்திர மூர்த்தி யோகச்சந்திரன் (40) தனது சிறைவாசத்தை ஜனவரி 27ல் ஆரம்பிக்கிறார். இவர்கள் தென்மேற்கு இலண்டனில் மோர்டனில் பிளாற்றில் வசித்து வந்தனர். திருமதி யோகச்சந்திரனும் அவருடைய 15 வயது மகளும் சாட்சியமளிக்கையில் சம்பவம் நினைவில் இல்லை என்றும் இப்போதும் யோகச்சந்திரனில் அன்பு செலுத்துவதாகவும் அவரை வீட்டுக்கு அழைத்துச் செல்ல விரும்புவதாகவும் தெரிவித்திருக்கின்றனர்.

## போஸ்ட் ஒபிஸில் £90,000 பணம் கையாடல் போஸ்ட் மாஸ்டருக்கு சிறை

கனகரட்ணம் தனபாலசிங்கம் என்ற போஸ்ட்மாஸ்டருக்கு ஜன 27 முதல் சிறைத்தண்டனை ஆரம்பிக்கிறது. பெட்போர்ட் ஹிச்சின் பகுதி தபாலகத்தில் மகன் சுதர்சனுடன் சேர்ந்து காசு புத்தகங்களில் மோசடி செய்ததற்காக இவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. இவர்கள் இருவரும் களவாடப்பட்ட காசுப் புத்தகங்களைப் பயன்படுத்தி பொதுப்பணத்தை மோசடி செய்துள்ளனர்.

பொலிசார் தந்தையையும் தனயனையும் டிசம்பர் 18ல் விசாரணைக்கு அழைத்திருந்தனர். ஆனால் தந்தை மட்டுமே சென்றிருந்தார். விசாரணைகளின் போது மோசடி இடம்பெற்றது தனக்குத் தெரியும் என்று ஒத்துக்கொண்ட கனகரடணம், அதில் தனக்கு எந்தத் தொடர்பும் இல்லை எனத் தெரிவித்திருந்தார். தனது மகனின் கவனக்குறைவால் இது இடம்பெற்றதாக கனகரட்ணம் பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

இவ்விருவரும் அல்லது இருவரில் ஒருவர் வேலை செய்யும் போது வழமைக்கு மாறாக பணம் செலுத்தப்பட்டு உள்ளது. இந்த மோசடி ஒக்ரோ பர் 2001ல் இடம்பெற்றது. சிறிது காலத்தின் பின் ஒக்ரோபர் 2002ல் மீண்டும் இடம்பெற்றது.

கேம்பிரிட்ஜ் கிரவுண் கோட்டில் ஜனவரி 13ல் கனகரட்ணத்துக்கு தண்டனை வழங்கப்பட்டது. சுதர்சன் தற்போது தலைமறைவாகி உள்ளார்.

## இலங்கைக்கு திருப்பி அனுப்புவதை நிறுத்தவும்

இலங்கைத் தீவு முழுவதையும் பாதிக்கப்பட்ட பிரதேசமாக கருத்தில் எடுத்துள்ளது ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் (UNHCR). அதனால் தஞ்சம் மறுக்கப்பட்டவர்களை இலங்கைக்கு பலவந்தமாகத் திருப்பி அனுப்ப வேண்டாம் என ஜனவரி 6ல் வெளியிட்ட செய்திக் குறிப்பில் அரசுகளை UNHCR கேட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாலும் அங்குள்ள கட்டமைப்புகள் சீரகுலைந்துள்ளதாலும் பல பாகங்களுக்கு இன்னும் மனிதாபிமான உதவிகள் சென்றடையாத நிலையில் இருப்பதாலும் திருப்பி அனுப்புவதை இடைநிறுத்தும்படி UNHCR வேண்டுகோள் விடுத்து உள்ளது. மேலும் அங்குள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிலையில் திருப்பி அனுப்பப்படுபவர்களின் சுமை அவர்களின் வேலைப்பழுவை அதிகரிக்கும் எனவும் UNHCR தெரிவித்து உள்ளது.

பிரித்தானிய தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிலர் சுனாமி அனர்த்தத்தை அடுத்து விடுவிக்கப்பட்டு உள்ளனர். சுனாமிக்குப் பின் யாரும் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தகவல்கள் கிடைக்கவில்லை.

## சோதிலிங்கம் கொலை வழக்கில் தீர்ப்பு

சுகந்தன் நடராஜா (24), சாந்தன் (விஜயகுமார்) தர்மலிங்கம் (28), ரஞ்சன் சண்முகநாதன் (26), சசிகரன் செல்வரட்ணம் (21) ஆகிய நால்வருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. ஒக்ரோபர் 28 2003ல் குறொய்டனில் திருக்குமார் சோதிலிங்கத்தை கொலை செய்த குற்றத்திற்காக இவர்களுக்கு இத்தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. மேலும் குற்றம்சாட்டப்பட்ட மற்றுமொருவரான மோகனராஜா தங்கராஜா (28) வுக்கு எதிரான குற்றச்சாட்டு மார்ச் மாதம் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது



சுகந்தன் நடராஜா | சசிகரன் செல்வரட்ணம் | ரஞ்சன் சண்முகநாதன் | சாந்தன் தர்மலிங்கம்

உள்ளே :

சுனாமிக்குப் பின் சமாதானம் 01
அவசியம் அரசியல் நாகரீகம் 02
சண்றைஸ்வானொலி தமிழ் சேவை கைமாறுகிறது 03
தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீது அழுத்தம் 04
செய்திச் சுருக்கம் 05
எச்சரிக்கை சுனாமி 06
சுனாமிக்குப் பின் தேசிய வாதத்தின் பிடி தளர்கிறது 11
பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து 15
ஸ்ரீ அன்கோவை நம்ப நீதிமன்றம் தயாரில்லை 16
இருண்ட எதிர்காலம் 18
மதுதூம் சாயபு ~ ஆசிரியர் : சிங்கைநேசன் 21
ஈராக் : அமெரிக்க பயங்கரவாதம் 23
தமிழர் வாழ்வியல் தாலி 26
கவிதை 28
மலேசியத் தமிழ் நூல்கள் 29
நூல் வெளியீடு 32
காஞ்சிப் பெரியவர் ஜெயந்திரர் சாமியா? ஆசாமியா? 33
கடலே கடல் அலையே
கவிதை 35

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Siruvar Thesam : S Gauthaman
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
London, UK,
E11 3JX.

# சுனாமிக்குப் பின் சமாதானம்

சுனாமியால் இலங்கையில் 30,000க்கும் அதிகமானோர் உயிரிழந்த பின்னும் இலங்கையில் சமாதானம் என்பது தொடர்ந்தும் கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் இணைந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுகின்றனர். ஆனால் தமிழ் - சிங்கள அரசியலிலும் ஊடகங்களிலும் ஆளுமை செய்யும் தேசியவாத சக்திகள் சமாதானத்தைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக ஒருவரை ஒருவர் சமாதானத்தின் எதிரியாகவே சித்திரிக்கின்றனர். மேலும் மூவின மக்களும் நெருங்கி வந்துவிடக் கூடாது என்பதில் அவர்கள் உறுதியாகவே உள்ளனர்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு சட்ட விதிகளுக்கு அமைய நாட்டை ஆளும் அரசுக்கே அதிகம். வி.புலிகள் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக் கொள்வதால் அம்மக்களின் சமாதான வாழ்வுக்கு அவர்களும் பொறுப்புடையவர்களே. ஆகவே ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி தமது பொறுப்புகளை தட்டிக் கழிக்காமல் நேரடியாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பிரச்சினைகளைத் தீர்க்க முயல்வது அவசியம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதனது கூட்டாளிக் கட்சியான ஜேவிபியும் வி.புலிகள் சமாதானத்தை விரும்பவில்லை என்று நொண்டிச்சாட்டுச் சொல்லி காலம் கடத்தத் தேவையில்லை. தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய உண்மையான அதிகாரங்களை வழங்கக் கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றை அறிவித்தால் வி.புலிகள் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்

வி.புலிகள் என்ற அமைப்பு உருவாகி இவ்வளவு தூரம் வளர்வதற்கு காலத்துக்கு காலம் இலங்கையை ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசுகள் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட ஒடுக்கு முறையே காரணம். ஒடுக்கு முறை என்ற இந்தக் காரணியை அகற்றினால் தமிழ் மக்களின் நம்பிக்கையை அரசால் வென்றெடுக்க முடியும். அப்படி ஒரு நிலை ஏற்படும் பட்சத்தில் தமிழ் மக்களுக்கு வி.புலிகள் என்ற அமைப்பு தேவைப்படாது.

ஆனால் இச்சூழலை உருவாக்க சிங்கள தேசியக் கட்சிகள் வளர்த்துவிட்டுள்ள குறும் தேசியவாதக் கருத்துகள் பெரும் தடையாக உள்ளன. ஆளும் கட்சியும் அதன் கூட்டாளிக் கட்சியும் ஒருவரை ஒருவர் கவிழ்க்கும் தமது குறுகிய இலாபங்களைக் கைவிட்டு தமிழ் மக்களுக்கான சரியான தீர்வை முன்வைத்தால் வி.புலிகளின் தளம் ஆட்டம் காணும். ஆனால் தேசியக் கட்சிகள் தொடர்ந்தும் மக்கள் நலன்களை கணக்கில் எடாமல் தமது குறுகிய அரசியல் நலன்களை பேண நினைத்து செயற்படுவது எப்போதும் வி.புலிகள் பலமாக இருப்பதற்கு காரணமாக உள்ளது.

தமிழ் மக்கள் இன்றும் இலங்கை அரசை நம்பத் தயாராக இல்லை. இந்த நிலையை மாற்ற ஆளும் கூட்டணி உறுதியுடன் முன் வரவேண்டும். தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற அன்றாடப் பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றை உடனடியாகத் தீர்க்க ஆவன செய்ய வேண்டும். அடுத்து தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய, உண்மையான அதிகாரங்களை வழங்கக் கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றை முன் வைக்க வேண்டும். இவற்றைச் செய்வதற்கு அரசாங்கம் வி.புலிகளிடம் அனுமதி பெற வேண்டியதில்லை. இப்படிச் செய்யும் பட்சத்தில் வி.புலிகள் அதனை ஏற்றுக் கொள்வது தவிர்க்க முடியாதது.

இலங்கையில் உள்ள இனப் பிரச்சினை ஒன்றும் எந்த நாட்டிலும் காணப்படாத அபூர்வமான பிரச்சினை அல்ல. ஏற்கனவே பல நாடுகள் இவ்வாறான பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் கண்டு இன்று முன்னேறிச் செல்கின்றன. சுனாமிக்குப் பின் மக்களிடையே மனிதாபிமானம் மேலும் தளைத்து உள்ளது. மக்கள் நலன்களை முன்நிலைப் படுத்தும் பட்சத்தில் சமாதானத் தீர்வு ஒரு பிரச்சினையே அல்ல.

# மக்கள் இரண்டாம்பட்சம்

இந்த ஆசிரியர் தலையங்கம் எழுதப்படும் போது சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து சரியாக. ஒரு மாதம் ஜனவரி 26. சுனாமியின் தொடக்கப் புள்ளிக்கு அருகில் இருந்த பண்டா ஆச்சே இன்று இல்லை. அங்கு பலியானவர்களின் எண்ணிக்கை 225,000. இலங்கையில் பலியானவர்களின் எண்ணிக்கை 40,000 ஆக அதிகரித்து உள்ளது.

ஆனால் இந்த உண்மைக்குப் புறம்பாக இலங்கையில் தெற்கிலா? வடக்கிலா? கிழக்கிலா? அழிவு அதிகம் என்று இன்னமும் தமிழ் ஊடகங்கள் தமது விசாரணைகளை முடிக்கவில்லை. அதற்குள் ஒரு மாதம் ஓடிவிட்டது. இலங்கையில் இருந்து குறிப்பாக கிழக்கில் இருந்து கிடைக்கும் தகவல்களின் படி அங்கு பருப்பும் சோறும் தான் தினம் தினம். எம்மைப்போல் அவர்களும் அன்று காலை விழித்தெழுந்தார்கள். ஆனால் இன்று அவர்களுக்காக யாரும் இல்லை. அவர்களிடமும் எதுவும் இல்லை.

சுனாமி அடித்துச் சென்றதை விதி என்று சொல்லலாம். ஆனால் அந்த மக்களுக்காக உலகமெல்லாம் சேர்க்கப்பட்ட உதவிகள் அம்மக்களுக்கு ஏன் இன்னமும் கிடைக்கவில்லை. அம்மக்களைப் பொறுத்தவரை இது பெரும் சதி. அரசாங்கத்துக்கும் வி.புலிகளுக்கும் இடையேயான அதிகாரப் போட்டியில் இடையில் இருந்த மக்கள் இரண்டாம் பட்சமாக்கப்பட்டனர். இந்த அதிகாரப் போட்டி இல்லாமல் இருந்திருந்தால் இன்று இந்த மக்கள் ஓரளவு நல்ல நிலையில் இருந்திருப்பார்கள்.

அதிகாரத்தை வைத்திருக்கும் அரசாங்கமும் வி.புலிகளும் போட்டி போட வடக்கு கிழக்கில் உள்ள குட்டி அதிகாரிகள் தங்கள் பாடு. இந்தக் குட்டி அதிகாரிகளை முழுமையாக குற்றம் சுமத்த முடியாது. அவர்களிடம் என்ன அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளது என்பது மக்களுக்குத் தெரியாது. ஆனால் வடக்கு கிழக்கு பகுதிகளுக்குச் சென்ற நிவாரணங்களில் பெரும் பகுதி மக்களிடம் போய்ச் சேரவில்லை என்பது உறுதியாகி வருகிறது. நேரடியாக தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட உதவிகளே மக்களைச் சென்றடைந்து உள்ளது. சிலஇடங்களில் உதவிகளை வழங்க முன்வரும் பலரும் தங்களுக்கூடாகவே வழங்க வேண்டும் என்று கட்டுப்படுத்தப்பட்டு உள்ளனர்.

தமிழ் பகுதிகளில் நிவாரணப் பணிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மட்டுமே மேற்கொள்ளும் என்று கூறப்பட்டு உள்ளது. ஏனைய தமிழ் உதவி அமைப்புகள் செயற்படுவதற்கு உத்தியோகபூர்வமற்ற தடை காணப்படுகிறது. இந்நிலையில் வடக்கு, கிழக்கில் நிவாரண நடவடிக்கைகளில் உள்ள குறைபாட்டுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகமே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வி.புலிகளுக்கு பலமான ஆதரவு இல்லாத பகுதிகளை புறக்கணிப்பதாகவும் எதிர்த் தரப்பில் குற்றம்சாட்டப்படுகிறது. மீள்கட்டுமான நடவடிக்கைகளிலும் இச்செயன்முறை காணப்படலாம் என்றும் இம்மக்களின் எதிர்காலம் நெருக்கடியானதாக அமையலாம் எனவும் அஞ்சப்படுகிறது. இக்குற்றச்சாட்டுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு உண்டு. ஏனெனில் மக்கள் மக்களுக்காகக் கொடுத்த பணம் சரியான முறையில் பாரபட்சமின்றி பயன்படுத்தப்பட்டது என்பதை அவர்கள் மக்களிடம் ஒப்புவிக்க வேண்டும். இல்லாவிட்டால் இன்னொரு சமயத்தில் உண்டியல் குலுக்க முடியாது.

இந்த அனர்த்தத்தில் இலங்கைக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு உள்ளது. சர்வதேச உதவிகள் வந்து சேருகின்றன. ஆனால் உள்ளூரில் 'குரங்கு அப்பம் பிரித்த கதை'யாக உள்ளது தமிழ் மக்களின் நிவாரணம். நாம் மற்றவர்கள் மீது குற்றம்சாட்டுவதை நிறுத்திவிட்டு இந்த மக்கள் இழந்ததில் ஒரு சிறு பங்கையாவது பெற்றுக் கொடுக்க முயற்சிக்க வேண்டும். இவ்வாசிரியர் தலைப்பை மீள்பிரசுரம் செய்ய வேண்டி வராது என நம்புவோம்.

### கட்டுரையாளர்களுக்கு அன்பான வேண்டுகோள்

தேசம் சஞ்சிகை வெவ்வேறு தளங்களில் இருந்தும் ஆக்கங்களை எதிர்பார்க்கிறது. ஆனால் கட்டுரையாளர்கள் தங்கள் சொந்தப் பெயர்களிலேயே ஆக்கங்களை எழுதி வழங்க வேண்டும். கட்டுரையுடன் புகைப்படம் ஒன்றையும் இணைத்து அனுப்ப மறவாதீர்கள்.

வடிவமைப்பு, தெளிவுபடுத்தல் நோக்கங்களுக்காக, கருத்தில் மாற்றம் செய்யாமல் சில மாற்றங்களை தேசம் ஆசிரியர் குழுவினர் மேற்கொள்வார்கள் என்பதை தாழ்மையுடன் தெரிவிக்கிறோம்.

ஆக்கங்கள் விஞ்ஞானபூர்வமாகவும் ஆதாரங்களுடனும் அமைவது மிகவும் அவசியமானது. தகுந்த காரணங்களின்றி இணைய ஊடகத்திலோ அச்சு ஊடகத்திலோ வெளியான ஆக்கங்கள் மீள்பிரசுரம் செய்யப்படமாட்டாது.

உங்கள் ஆக்கங்கள் 750 சொற்களுக்கு மேற்படாமல் (தேசம் சஞ்சிகையில் 2 பக்கங்களுக்கு உட்பட்டதாக) அமைதல் வேண்டும். ஆக்கங்கள் கணணிப்படுத்தப்பட்டு மின் அஞ்சல் வாயிலாக அனுப்பப்படுவதை வரவேற்கிறோம். கையெழுத்துப் பிரதிகளை அனுப்புபவர்கள் தயவு செய்து தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதி அனுப்பவும்.

தேசம்
வளர்ந்துவரும் ஒரு சஞ்சிகை.
உங்கள் ஒத்துழைப்பு
இன்றியமையாதது.

**நீங்கள் படித்துக் கொண்டிருப்பது சண்றைஸ் வானொலியின் தமிழ் சேவை. செய்திகள் : வழங்குபவர் ரி கொன்ஸ்ரன்ரைன்.**



# சண்றைஸ் வானொலியின் தமிழ் சேவை கைமாறுகிறது

16 ஆண்டு காலமாக லண்டனிலிருந்து ஒலிபரப்பாகி வரும் சண்றைஸ் வானொலி தமிழ் சேவையின் வரலாற்றில் தற்போது ஒரு திருப்பம் ஏற்பட்டு உள்ளது. சண்றைஸ் வானொலி தமிழ் சேவையை ஆரம்பித்து நிர்வகித்து வந்த டாக்டர் ரத்தினம் நித்தியானந்தன், ஆரம்ப காலத்தில் இருந்து அதில் முக்கிய உறுப்பினராக இருந்து வரும் நடா மோகனிடம் தமிழ்சேவையைக் கையளித்துள்ளார். புலம் பெயர்ந்த தமிழர்களின் வரலாற்றில் தொடர்ச்சியாக ஏறக்குறைய 90 வீதமான தனது முதல் உறுப்பினர்களையே கொண்டு நடத்தப்பட்ட ஊடகம் சண்றைஸ் தமிழ் வானொலி என்று கூறினால் அது மிகையாகாது.

முதலில் எல்லோரும் சேர்ந்து ஒரு விடயத்தை ஆரம்பித்து பின்னர் பல பிரிவாக பிரிந்து, இறுதியில் அனைத்தும் அழிவது தான் ஈழத் தமிழரின் வரலாறு. ஆனால் சண்றைஸ் வானொலி 16 ஆண்டு காலமாக இயங்கி, பின்னர் அதன் முக்கிய தூணாக இருந்த நடா மோகனிடம் கையளிக்கப்பட்டுள்ளது. டாக்டர் நித்தியானந்தனுடன் கருத்து ரீதியாக மோதிவரும் நடா மோகன் அவரின் அனுசரணையுடன் சண்றைஸ் வானொலியை பொறுப்பேற்று நடத்துவது புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் ஒரு பரிணாம வளர்ச்சியைக் காட்டுகிறது. இது ஊக்கப்படுத்தப்பட வேண்டிய விடயம். எமது சமுதாயத்தைப் பொறுத்தவரை இது ஒரு சாதனை தான்.

செய்தி மற்றும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கு ஓரளவு மட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரம் கொடுக்கப்பட்டு ஒலிபரப்பாகும் வானொலி, சண்றைஸ் தமிழ் வானொலி. சண்றைஸின் முக்கிய தூண்களான டாக்டர் நித்தியானந்தன், நடா மோகன், ஜனார்த்தன், மோகன் ராஜா, ஸ்ரீரங்கன், ஆனந்தராணி பாலேந்திரா ஆகிய அனைவரும் வெவ்வேறு அரசியல் பின்னணியும் வெவ்வேறு நம்பிக்கைகளும் உடையவர்கள். இவர்கள் அனைவரும் ஒரே குடையின் கீழ் இத்தனை வருட காலமாக இயங்கக் கூடியதாக இருந்தது இவ்வானொலியின் வெற்றி என்றே கூறவேண்டும். அதற்காக சண்றைஸ் வானொலி ஒரு ஜனநாயகத்தின் இருப்பிடம் என்று யாரும் தவறாகக் கருத வேண்டாம்.

வானொலியின் வெற்றியை நாம் பெருமையுடன் பார்க்கும் அதேவேளை அதன் பின்னடைவுகளையும் ஆராய்வது அவசியம். கானக்குயில் என்ற பதத்தை முதன் முதலில் கண்டுபிடித்து 2000 பார்வையாளர்கள் முன்னிலையில் அந்நிகழ்ச்சியை அரங்கேற்றி வெற்றி கண்டவர்கள் சண்றைஸ் தமிழ் வானொலி உறுப்பினர்கள். ஆனால் சண்றைஸ் வானொலியில் இருந்து பிரிந்து போன ஒரே ஒரு அறிவிப்பாளரான யோகா தில்லைநாதனிடம் இக்கானக்குயிலைப் பறி கொடுத்தனர். இது சண்றைஸ் வானொலியின் குறிப்பாக டாக்டர் நித்தியானந்தனின் ஆளுமைக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் வைக்கப்பட்ட ஆப்பு. 12 உறுப்பினர்களையும் எதிர்த்து, அதிலும் முக்கியமாக 1997ம் ஆண்டில் தமிழ் மக்களின் ஏகோபித்த ஒரேயொரு தமிழ் வானொலியாக இருந்த சண்றைஸ் வானொலியையும் எதிர்த்து நின்று கானக்குயில் நிகழ்ச்சியை தனதாக்கிக் கொண்டவர் யோகா தில்லைநாதன்.





பொறுப்பேற்கும் நடா மோகன் ஒய்வுபெறும் நித்தியானந்தன்

யோக தில்லைநாதனின் பலம் சன்றைஸின் பலவீனம். இப்பலவீனங்களுக்குக் காரணம் சன்றைஸ் உறுப்பினர்களிடையே கூட்டுவேலைத் திட்டம் செயற்திறனற்று இருந்ததே. ஆரம்பத்தில் டாக்டர் நித்தியானந்தனும் யோக தில்லைநாதனும் மட்டுமே கானக்குயிலில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டனர். கானக் குயில்கள் பொன் முட்டை இட்டதால் வழமையான பிளவு நிகழ்ந்தது. ஆரம்பத்தில் இருந்தே ஏனைய உறுப்பினர்களையும் கூட்டுச் சேர்த்துக் கொள்ளாததால் பிரச்சினை ஏற்பட்டதும் அவர்கள் அக்கறை காட்டவில்லை. பொன்முட்டை இடும் கானக்குயில்கள் இன்று கூடுவிட்டுக் கூடுசென்று பொன் முட்டை இடுகின்றன.

இவ்வாறான தவறுகள் மீண்டும் இடம்பெறாமல் இருக்கச் செய்வதும் கூட்டுப் பொறுப்பையும் ஒத்துழைப்பையும் பெறுவதும் நடாமோகன் மீதுள்ள முக்கிய பொறுப்புகளாகும். டாக்டர் நித்தியானந்தனின் நிர்வாகத்திறனும் நிர்வாக ஆளுமையும் சன்றைஸ் தமிழ்ச் சேவையை 16 ஆண்டுகளுக்கு நிலைப்படுத்தியது. அன்று முதல் நடா மோகனின் குரல் வளமும் அதற்கு உறுதுணையாக இருந்தது. அறிவிப்பாளராக, நிகழ்ச்சித் தயாரிப்பாளராக

இருந்த நடா மோகன் நிர்வாக இயக்குநராகி உள்ளார். அவரது வேமும், உணர்வும், நேர்மையும் நிர்வாகத்துக்கு எப்படிப் பங்களிக்கப் போகிறது என்பதில் தான் வானொலியின் எதிர்காலம் தங்கி உள்ளது.

இதுவரை சன்றைஸ் வானொலியில் பணிபுரிபவர்கள் அனைவருமே தமது அதம திருப்தியின் அடிப்படையி லேயே பணியாற்றுகின்றனர். அறிவிப்பாளர்கள் யாருக்கும் சம்பளம் வழங்கப்படுவதில்லை. விளம்பரங்களில் பெறப்படும் பணம் வானொலிக்கான கட்டணத்தக்கே போதுமானதாக உள்ளது. வியாபாரரீதியில் இதனை வெற்றிகரமாக்கும் பாரிய பொறுப்புடன் நடா மோகன் தனது பொறுப்புகளை ஏற்கிறார். கடந்த இரண்டு தசாப்தங்களாக வானொலிக்குள்ளேயே வாழும் இவர் பல நூற்றுக்கணக்கான வானொலி நிகழ்ச்சிகளை தயாரித்துள்ளார். சன்றைஸை இன்னும் வளர்த்தெடுப்பார் என்ற நம்பிக்கை பரவலாக அனைவரிடமும் உள்ளது.

### எவ்வளவு நிதி சேர்த்தீர்கள் ? என்ன செய்யப் போகிறீர்கள் ?

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீது அழுத்தம்

சுனாமியைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO) நிதி சேகரிப்பில் சாதனை நிகழ்த்தியுள்ளது. புலம் பெயர்ந்த மக்கள் தங்களது இயல்புக்கு சற்று அதிகமாக வே தமது பங்களிப்பை வழங்கி உள்ளனர். சுனாமி அனர்த்தம் நடந்த சில மணி நேரங்களிலேயே நிதி சேகரிப்புப் பணி முடுக்கி விடப்பட்டது. இலண்டனில் தமிழர் புலம்பெயர்ந்த் நாடுகள் அனைத்திலும் கடைகளிலும் தெருவிலும் ஆலயங்களிலும் எழுந்தமான மாக நிதி சேகரிப்பு நடைபெற்றது. அமைப்புகளும், தனி நபர்களும் உணர்ச்சிகளை உண்டியலில் கொட்டும் படி கேட்கப்பட்டனர். அவர்களும் வாரி வழங்கினர்.

ஆனால் அனர்த்தம் நிகழ்ந்து ஒரு மாதகாலம் ஆகியும் சேகரிக்கப்பட்ட நிதி பற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. TRO இது பற்றி தொடர்ந்தும் மௌனமாகவே இருந்து வருகிறது. TROதுக்கு அல்லாமல் நிதி சேகரிப்பிலும் நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டவர்கள் அழுத்தங்களுக்கு உள்ளாகி உள்ளனர். ஆகையால் ஆலயங்கள், பொது அமைப்புகள் என தமிழ் மக்கள் மத்தியில் திரட்டப்பட்ட நிதி பெரும்பாலும் TROதுக்கே வழங்கப்பட்டு உள்ளது. மேலும் வி.புலிகளின் தலைவரது நிதியிலிருந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு $294,000 டொலர்கள் வழங்கப்பட்டு உள்ளது.

இதற்கிடையே சிறுவர் நலன்களுக்காக TROதுக்கு கடந்த ஆண்டு வழங்கப்பட்ட $1.3 மில்லியன் டொலர்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்றும் குற்றம்சாட்டப்பட்டு உள்ளது. (Sri Lanka : Living in Fear; Human Right Watch Report page 57) தற்போது சேகரிக்கப்பட் நிதி பற்றிய விபரங்களை TRO வெளியிட வேண்டுமென ஜேர்மன், டென்மார்க் அரசுகள் கேட்டுள்ளன.

வெளிநாடுகளில் சேகரிக்கப்ட்ட பணம் இலங்கையில் உள்ள TROதுக்குச் செல்லவில்லை என்று குற்றச்சாட்டப் படுகிறது. TRO தனது தன்மீதுள்ள குற்றச்சாட்டுகளை களையாது போனால் அதன் நம்பகத்தன்மை மிகவும் பாதிக்கப்படும் நிலையில் உள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் எவ்வளவு தொகைப் பணம் சேகரிக்கப்பட்டது. என்ன திட்டங்களுக்கு அது பயன்படுத்தப்படப் போகிறது என்ற விடயங்களை வெளியிடுமாறு அழுத்தங்கள் பலதரப்பிலும் வழங்கப்படுகிறது.

தற்போது அளிக்கப்பட்டு வரும் நிவாரணங்கள் சர்வ தேச அமைப்புகளால் வழங்கப்பட்டவையே. புலம்பெயர்ந்த தமிழர்கள் $2 மில்லயன் டொலர்களுக்கு அதிகமான பொருட்களை அனுப்பி உள்ளதாக தமிழர் தகவல் நடுவம் தெரிவிக்கிறது.

## நிதி சேகரிப்பில் குளறுபடி

சுனாமி ஏற்பட்டு ஓரிரு தினங்களில் இலண்டனில் நிதி சேகரப்பில் ஈடுபட்ட சிலர் பொலிசாரால் விசாரிக்கப் பட்டனர். விசாரணைகளில் நிதி சேகரிப்பு அமைப்புகளில் மாறாட்டம் காணப்பட்டது வெளிச்சத்துக்கு வந்தது. நிதி சேகரிப்பில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் தமது உண்டியலில் உள்ள விபரத்தை கிழித்தெறிந்து, உண்டியலை ஒப்படைத்துவிட்டு உடனடியாக அவ்விடங்களை விட்டு ஓடுமாறு அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

TRO சில ஆண்டுகளுக்கு முன் நிதி கையாட லில் தவறிழைத்ததை அடுத்து பிரித்தானிய செயரிற்றி கொமிசனால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. அதனால் இலண்டனில் TROக்கு சேகரிக்கப்படும் பணம் செயரிற்றி கொமிசனின் அறிவுறுத்தலின் படியே பயன்படுத்த முடியும். அதனால் இலண்டன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை வெட்டி ஓட வெண்புறா என்ற அமைப்பு முதன்மைப்படுத்தப் பட்டது. ஏனைய நாடுகளில் TRO மட்டுமே நிதி சேகரிப்பில் ஈடுபட்டது.

இச்சம்பவம் நடந்தபோது வெண்புறா அமைப்பு செயரிற்றி கொமிசனில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் வெண்புறா அமைப்புக்கு செயரிட்டி பதிவு இலக்கம் இல்லை. அதனால் பொது மக்களிடம் நிதி சேகரிக்கும் தகமை வெண்புறா அமைப்புக்கு இல்லை. ஆனால் வெண்புறா அமைப்பினர் 1066824 என்ற பதிவு இலக்கத்தை நிதி சேகரிப்புக்கு பயன்படுத்தி வந்தனர். இப்பதிவு இலக்கம் வெண்புறாவினுடையது அல்ல. அது Medical Institute Of Tamils (MIOT) என்ற அமைப்பினுடையது. இதுவே அக்குழப்பத்துக்கு காரணம்.

( ஜனவரி 2ல் தேசம் சஞ்சிகையால் வழங்கப்பட்ட மருந்துப் பொருட்களுடனும் சிறுதொகை நிதியுடனும் அம்பாறை சென்று ஜனவரி 20ல் இலண்டன் திரும்பிய விமல் குழந்தைவேலின் நேரடி அனுபவம். )

**சுனாமிக்குப் பின் கிழக்கு மாகாணம் அம்பாறையில் இன உறவுகள் :**

# மனிதன் அழிந்த நேரத்தில் மனிதம் தளைத்திருக்கிறது

இந்த மக்கள் எப்படி உயிருக்குப் போராடினார்கள், எதையெல்லாம் இழந்தார்கள் என்பது எங்களுக்குத் தான் தெரியும். நாங்களும் மனிதர்கள் தானே. ஆனால் கட்டளைகளை நிறைவேற்றும் உத்தியோகத்தர்கள். இன்று நாங்கள் காப்பாற்றிய இதே மக்களுக்கு எதிராக துப்பாக்கி நீட்டும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் எவருமே மன்னிக்கப்பட முடியாதவர்கள் என்று கண் கலங்கினர் தமிழ் மக்களுடன் பேசிக் கொண்டிருந்த இராணுவத்தினர்.

அனர்த்தம் நடந்த அடுத்தடுத்த நாட்களுக்கெல்லாம் அம்பாறை, மாந்தோட்டம், 10ம் கட்டை ... போன்ற இடங்களுக்கெல்லாம் நடந்து போய் உணவு கொடுத்திருக்கிறார்கள் சிங்களப் பெண்கள்

தங்கள் அகதிகளை விட தமிழ் அகதிகளை மேலாகவே கவனித்திருக்கிறார்கள் முஸ்லீம்கள். அகதிகளாகச் சென்ற பெண்கள் மனதளவில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடுமென்பதால் தங்கள் பெண்களை அவர்களிடம் போய் ஆறுதல் வார்த்தை பேசும்படி பள்ளிவாசல் ஒலிபெருக்கியில் சொல்லியிருக்கிறார்கள்.

கடல் அடித்து ஆற்றில் விட்ட உடல்களை அள்ளிக் கரை சேர்த்து அடக்கம் செய்தவர்களில் அனேகமானோர் முஸ்லீம் இளைஞர்கள். சுன்னத்து வைத்ததா, முக்காடு போட்டதா என்று மையத்துக்களை பார்க்க இது நேரமல்ல. மனிதன் அழிந்த நேரத்தில் தான் மனிதம் தளைத்திருக்கிறது. அரசியல் தலையீடுகள் இல்லாத பட்சத்தில் தமிழ் - முஸ்லீம் வளரும் என்கிறார் அவ்விளைஞர்களில் ஒருவர்.

ஊரைக் கிழித்து, பிரித்துப் புரட்டிப்போட்டு விட்டுப் போன சுனாமி சொல்லாமல் கொள்ளாமல் பலரின் சுயரூபங்களையும் வெளிக்காட்டி இருக்கின்றது. தாங்கள் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டிருந்த வி.புலிகள், மக்களோடு நெருங்கி அவர்களை அனைத்து ஆறுதல் சொல்லக் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தை துஸ்பிரயோகம் செய்துவிட்டார்கள். மட்டு அம்பாறை மாவட்டங்களில் அனர்த்தம் நடந்து மூன்று நாட்களின் பின் வந்தவர்கள் தங்கள் அதிகாரத்தை காட்டி மிரட்டி நிர்வாகம் செய்ய முற்பட்ட போது மக்களின் கண்டிப்புக்கும் விமர்சனத்துக்கும் ஆளாகி இருக்கிறார்கள்.

ஆனால் இராணுவம் மக்களுடன் நட்புரீதியில் அவர்களுக்கு உதவியது. அதனால் மக்கள் மத்தியில் அவர்களுக்கு ஆதரவு இருந்தது. இது ஒரு மனிதாபிமான, மனநெகிழ்வில் செய்யப்பட்ட உதவி.

இராணுவத்தினர் அலை அடித்துச் சென்ற பலரைக் காப்பாற்றி இருக்கிறார்கள். அலையின் வேகத்தில் ஆடை அவிழ்ந்து நின்ற பெண்களுக்கு தங்கள் சீருடையை கொடுத்திருக்கிறார்கள். முதல் 24 மணிநேரத்தில் பசித்தவர்களுக்கு தங்களால் முடிந்த அளவு உணவு கொடுத்திருக்கிறார்கள். தமிழ் அகதிகளுக்காக உணவு கேட்டுச் சென்றவர்கள் கண்கலங்கிய சம்பவங்களும் நடந்திருக்கின்றன. இப்போது அகதிமுகாமில் உள்ள சிறுவர்களோடு கிரிக்கட் விளையாடுகிறார்கள். அச்சிறார்களின் கவலையை, ஏக்கத்தை சிறிது நேரம் மறக்கச் செய்கிறார்கள்.

ஏன் எம்மவர்களால் இதைச் செய்ய முடியவில்லை. காரணம் மாற்றுக் குழுப்பயம். இந்த நேரத்திலும் மக்களிடம் ஒரு அன்பான வார்த்தையோ ஒரு புன்னகையோ செய்யாமல் அவர்களைத் தீண்டத் தகாதவர்கள் போல் நடத்துகிறார்கள். இராணுவம் செய்த உதவிகளை தங்கள் வாழ்நாளில் மறக்க மாட்டோம் என்கிறார்கள் மக்கள்.

தமிழ் - முஸ்லீம் - சிங்களம் என்ற பாகுபாடற்ற ஒற்றுமையான சமூகக் கட்டுக்கொப்பொன்றை சுனாமி ஏற்படுத்தி இருப்பது பலர் வயிற்றிலும் புளியைக் கரைத்திருப்பது உண்மையே. இந்த இன ஒற்றுமைக்கு கொடுத்த விலை மிக அதிகம். இருந்தும் அது தொடர்ந்தும் காப்பாற்றப்படுமா என்ற அச்சமும் உள்ளது.



# சுனாமி எச்சரிக்கை



த ஜெயபாலன்

டிசம்பர் 26 2004க்கு முன் இலங்கையில் யாரும் சுனாமி என்பதை கேள்விப்பட்டிருக்கவில்லை. ஆனால் அதன் பின் அதனைத் தெரியாதவர்கள் யாரும் இல்லை. பல்லின மக்களும் இயற்கையின் இந்த கோரத்துக்கு பலியாகி உள்ளனர். இலங்கையிலும் இந்தியாவில் பெரும்பாலும் தமிழ் நாட்டிலும் ஏற்பட்ட இந்த இயற்கை அனர்த்தத்தால் முஸ்லீம்கள் உட்பட தமிழ், சிங்கள மக்கள் தமது வரலாற்றில் அறிந்திராத இழப்பைச் சந்தித்து உள்ளனர். தமிழர்களின் வரலாற்றில் அவர்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பு இது. தமிழகத்திலும் இலங்கையிலும் சேர்த்து பலியான தமிழர்களின் எண்ணிக்கை 30,000க்கும் அதிகம்.

இவ்வாறான இயற்கை அனர்த்தங்களில் இருந்து தப்பிக்கும் அளவுக்கு மனித இனம் கூர்ப்படையவில்லை. அதனை தவிர்க்கும் அளவுக்கு அதன் தொழில் நுட்பம் வளரவில்லை. இது போன்ற இயற்கை அனர்த்தங்கள் தவிர்க்க முடியாதவை. ஆனால் இவ்வாறான அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்பை கட்டுப்படுத்தம் அளவுக்கு மனிதகுலம் ஆற்றலைப் பெற்று உள்ளது. இந்த ஆற்றல், தொழில்நுட்ப அறிவு டிசம்பர் 26ல் ஏன் பயன்படாமல் போனது என்பதை அராய்வதும் படிப்பினைகளைப் பெறுவதும் மிக முக்கியமானது.

## சுனாமி :

பூமிப் பந்தானது பல பாறைகளால் இணைக்கப்பட்டு ஈர்ப்பு சக்தியால் வலம்வருகிறது. இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவுக்கு அருகில் இயூரேசியன் - ஒஸ்ரேலியன் பாறைகள் இணையும் இடத்தில் கடலினுள் பெரும் பூவி நடுக்கம் (9 ரிச்ரர் அளவு) ஏற்பட்டது. இதன் விளைவாக பாறைகள் 10 மீற்றர் வரை மேல் கீழாக நகர்ந்து உள்ளது. இந்நகர்வினால் பல நூற்றுக் கணக்கான கனவளவு நீர் உந்தப்பட்டு ராட்சத அலைகள் - சுனாமி ( Tsunami ) உருவானது.

கடல் நிலமட்டத்துக்கு 50கி.மீ (30 மைல்) க்கும் குறைவாக 6.5 ரிச்ரர் அளவு அல்லது அதற்கு மேல் புவி நடுக்கம் ஏற்படும் போது இந்த சுனாமி என்கின்ற அகோரமான அலைகள் உருவாக்கப்படுகிறது. கரையோரப் பகுதியில் அல்லது கடற்படுக்கையில் ஏற்படும் நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு என்பனவும் சுனாமி ஏற்படவதற்குக் காரணமாகும்.

Tsunami என்பது ஜப்பானிய பதம். (Tsunami) சு, நாமி என்பதன் சேர்க்கை. சு என்பது துறைமுகம் எனவும் நாமி என்பது அலை எனவும் பொருள்படும். ஜப்பானிய மொழியில் சுனாமி என்பது துறைமுக அலை. தற்போது நிகழ்ந்ததைப் போன்று மோசமான சுனாமி 1703ல் ஜப்பானின் அவா பகுதியை தாக்கியதில் 100,000 பேர் பலியாகினர்.

கடல் நீர் உள்ளிளுக்கப்பட்டு கடல் நிலப்பரப்பு வெளித்தெரியும். இது சுனாமி வரப்போவதை முதலில் தெரியப்படுத்தும். போர்த்துக்கல்லின் லிஸ்பன் துறைமுகத்தில் 1755 நவம்பர் 1 ம் திகதி இது நிகழ்ந்தது. இந்த அதிசயத்தைப் பார்க்க மக்கள் கடலுக்கு விரைந்தனர். சில நிமிடங்களில் வந்த சுனாமி அவர்களை கடலினுள் அமிழ்த்தியது. இதுவே 2004 இலும் நடைபெற்று உள்ளது.

நீருக்கடியில் கரக்கட்ருவத் தீவில் இடம்பெற்ற எரிமலை வெடிப்பினால் 1883 ஓகஸ்ட் 26, 27ல் கிழக்கிந்திய கரையோரங்களில் 35 மீற்றர் (115 அடி) உயரத்துக்கு கடல் அலைகள் எழுந்து 36,000க்கும் அதிகமான மக்களைப் பலிகொண்டது. கடந்த 100 அண்டுகளில் கரையோரப் பகுதிகளில் வாழும் 50,000 பேர் சுனாமிக்கு பலியாகி உள்ளார்கள்.

## சுனாமி - 2004 :

கிரீனிச் நேரப்படி இரவு ஒரு மணிக்கு நீருக்கடியில் புவி நடுக்கம் இடம்பெற்றது. 15 நிமிடங்களில் ஹவாயில் உள்ள பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் (Pacific Tsunami Warning Centre) புவி நடுக்கம் ஏற்பட்ட செய்திக்குறிப்பை வெளியிட்டது. அப்போது புவிநடுக்கத்தின் அளவு 8.5 என ரிச்சட் அளவில் பதிவாகி இருந்தது. ஆனால் சுனாமிக்கான எச்சரிக்கையை அம்மையம் வெளியிடவில்லை.

புவி நடுக்கம் இடம்பெற்ற 15 நிமிடங்களில் சுனாமி முழுப்பலத்துடன் சுமாத்திரா தீவைத் தாக்கியது. 30 நிமிடங்களில் அந்தமான் நிக்கோபார் தீவுகள் தாக்கப்பட்டது. புவி நடுக்கம் ஏற்பட்டு 50 நிமிடங்களுக்குப்




பின் சுனாமி ஏற்படும் அபாயம் இருப்பதை பசுபிக்கில் உள்ள சுனாமி எச்சரிக்கை மையம் அறிவித்தது. புவி நடுக்கம் ஏற்பட்டு 90 நிமிடங்களுக்குப் பின் தாய்லந்து சுனாமியால் தாக்கப்பட்டது. இந்த கொடிய சுனாமி 2 மணிநேரங்களின் பின் இலங்கை, இந்திய குறிப்பாக தமிழக கரையோரங்களைத் தாக்கியது. மூன்றரை மணித்தியாலத்துக்குப் பின் மாலைதீவுகள் சுனாமியினால் தாக்கப்பட்டன. புவி நடுக்கம் ஏற்பட்டு 7 மணித்தியாலங்களுக்குப் பின் கிழக்கு ஆபிரிக்க கரைகளைத் தாக்கி தனது பயணத்தை சுனாமி நிறுத்திக் கொண்டது. கிழக்கு ஆபிரிக்காவில் குறிப்பாக சோமாலியா கடுமையாக பாதிக்கப்பட்டது.

## உயிர்காப்பு முயற்சி :



தாய்லாந்தின் கரையோரத்தில் தனது விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்த பிரித்தானியாவைச் சேர்ந்த ரில்லி சிமித் (படம்) என்ற 10 வயதுச் சிறுமி கடல்நீர் உள்ளிளுக் கப்பட்டதும் சுனாமி வரப்போகும் எச்சரிக்கையை கரையோரப் பகுதியில் இருந்த உல்லாசப் பயணிகளுக்கு தனது தாயார் மூலம் வழங்கியுள்ளார். அதனால் உடனடியாக அப்பகுதியில் இருந்தவர்கள் கடற்கரையை விட்டு வெளியேறினர். சில நிமிடங்களில் அக்கரையைத் தாக்கிய சுனாமியால் யாரும் உயிரிழக்கவில்லை. ரில்லி 1950ல் ஹவாயில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் பற்றி இரு வாரங்களுக்கு முன்னர் படித்திருந்தார். அதுவே நூறுபேரைக் காப்பாற்றியது. பாண்டிச்சேரியில் இருந்த ஒரு கரையோரக் கிராமமும் இவ்வாறு காப்பாற்றப்பட்டது. இந்தோனேசியாவில் அனர்த்தம் நிகழ்ந்ததைக் கேள்விப்பட்ட அவ்வூரைச் சேர்ந்தவர் சிங்கப்பூரில் இருந்து தொலைபேசி மூலம் வழங்கிய சுனாமி பற்றிய எச்சரிக்கையை அடுத்து அவ்வூர் மக்கள் அங்கிருந்து வெளியேறினர். அவ்வூர் அழிக்கப்பட்ட போதும் நூற்றுக்கணக்கான அவ்வூர் மக்கள் உயிர் பிழைத்தனர்.

சுனாமி எச்சரிக்கையால் பொருளிழப்புகளை தடுத்து நிறுத்தியிருக்க முடியாது. ஆனால் பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் காப்பாற்றி இருக்க முடியும் என்பது மேற்படி சம்பவங்களால் உறுதியாகிறது. பூமி நடுக்கம் இடம்பெற்ற சுமாத்திரா தீவைச் சேர்ந்த மக்களை சுனாமியில் இருந்து காப்பாற்றி இருக்க முடியமா என்பது நடைமுறையில் சற்று கடினமானது. புவிநடுக்கம் இடம்பெற்று 15வது நிமிடத்தில் சுனாமி சுமாத்திரா தீவைத் தாக்கியது. ஆனால் ஏனைய தெற்காசிய நாடுகளில் இடம்பெற்ற உயிரிழப்புகளை பல ஆயிரங்களால் தவிர்த்து இருக்க முடியும்.

## சுனாமியின் அளவீடு :

கடற்படுக்கையில் அல்லது கரையோரப் பகுதிகளில் ஏற்படும் புவி நடுக்கம், நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு ஆகியவற்றை தொடர்ந்து சமுத்திரங்களில் வட்டவடிவில் அலைகள் உருவாகும். ஆழமான பகுதிகளில் அலை வேகம் அதிகமாகவும் (850km/hr), அலைகளின் நீளம் 100 - 200 கி.மீ (60 - 125 மைல்) வரையும் இருக்கும். இந்த அலைகளின் உயரம் ஆழமான பகுதிகளில் ஒன்று அல்லது இரண்டு அடிகளாகவே இருக்கும். ஆழம் குறைந்த கரையோரப் பகுதிகளில் அலை வேகம் குறைய, அலை நீளம் குறைந்து அலையின் உயரம் அதிகரிக்கிறது. 10 - 15 நிமிடங்களில் 30 மீற்றர் (100 அடி) வரை உயரம் அதிகரிக்கிறது.


இலங்கையின் தென்பகுதியில் 1500 பயணிகளை ஏற்றி ஓடிக்கொண்டிருந்த ரெயில் தூக்கி வீசப்பட்டு உள்ளது என்றால் வந்த அலையின் வேகத்தையும் அதன் பலத்தையும் நாம் என்ன என்பது.

இதனை $c=\sqrt{gD}$ என்ற ஒரு சமன்பாட்டின் மூலம் கணிப்பிடுகிறார்கள். c - wave velocity, g - acceleration of gravity, D - water depth. இந்தச் சமன்பாடு நடைமுறையில் புவிநடுக்கம், சுனாமி போன்றவற்றை ஆராயும் விஞ்ஞானிகளுக்கு மிகவும் அவசியமானதாக உள்ளது. புவிநடுக்கம் ஏற்பட்டவுடன் சுனாமி தாக்குவதற்கு பல மணிநேரங்கள் முன்னதாகவே பாதிக்கப்படப்போகும் கரையோரப்பகுதிகள் பற்றிய எச்சரிக்கையை வழங்க இது உதவுகிறது.

## சுனாமி எச்சரிக்கை :

1948 முதல் சுனாமி வரப்போவதை முன்கூட்டியே அறியவும் கண்காணிக்கவுமான மையம் பசுபிக்கில் ஆரம்பிக்கப்பட்டது. இதுவே பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் (Pacific Tsunami Warning Centre). இம்மையம் புவி நடுக்கத்தை அறிவதுடன் அது எங்கு ஏற்பட்டு உள்ளது என்பதையும் கண்டுபிடிக்கும். இப்புவிநடுக்கம் சுனாமியை ஏற்படுத்துமா என்பதை இந்த எச்சரிக்கை மையம் தீர்மானிக்கும். உடனடியாக குறித்த நேரத்தில் தகவல்களையும் எச்சரிக்கையையும் வழங்கி சுனாமியால் ஏற்படும் பாதிப்பைக் கட்டுப்படுத்தும். இம்மையத்தின் தேவை தற்போது தென்னாசியாவிலும் அவசியமாகிறது.

புவிநடுக்கம், சுனாமி ஏற்பட்டதற்கான தகவல்கள் பசுபிக்கில் உள்ள 70 seismic (புவியியல் அம்சங்களை ஆராயும்) and 30 tide (அலைகளை கடல் நிலையை ஆராயும்) நிலையங்களால் பதிவு செய்யப்படும். புவி நடுக்கம் ஏற்பட்டது உடனடியாகப் பதிவாகும். ஆனால் சுனாமி அலைகள் குறிப்பிட்ட நிலையத்தை அடையும் போதே பதிவு செய்யப்படும். புவிநடுக்கம் ஏற்பட்டதும் அவ்விடத்துக்கு அருகில் உள்ள tide நிலையம் உஷாராக்கப்பட்டு அலைகள் கண்காணிக்கப்பட்டு சுனாமி அவதானிக்கப்பட்டால் எச்சரிக்கை வழங்கப்படும்.



இத்திட்டம் நீர்மட்டத்தில் ஏற்படும் மாற்றத்தை உணர்ந்து எச்சரிக்கை சமிக்ஞையை வழங்கும். இச்சமிக்ஞை சற்லைட்டினூடாக சுனாமி எச்சரிக்கை மையத்திற்கு உடன் அனுப்பப்படும். THRUST திட்டத்தின் உபகரணச் செலவு $15,000 டொலர்களே. இந்து சமுத்திர பிராந்தியங்களுக்கான சற்லைட் ஒன்றைப் பயன்படுத்தி சுனாமி எச்சரிக்கையை வழங்க முடியும். பொருளாதார விருத்தி அடையாத நீண்ட கரையோர தென் அமெரிக்க நாடான சில்லியில் இந்த வகையான எச்சரிக்கை முறையே காணப்படுகிறது.

சமுத்திரத்தின் அடியில் அமுக்கத்தை உணரும் கருவி பொருத்தப்படும். இது தனக்கு மேலுள்ள நீரின் நிறையை அளக்கும். சிறிய ஒரு சென்றி மீற்றர் நீர்மட்ட வித்தியாசத்தையும் இது உணரும் திறனுடையது. சுனாமி இந்தக் கருவியைக் கடக்கும் போது அமுக்கம் அதிகரிக்கும். அமுக்கத்தை உணரும் அக்கருவி நீர்மட்டத்தில் உள்ள கருவிக்கு தகவலை வழங்கும். அத்தகவல் சற்லைற்றினூடாக மனிதர்களின் கட்டுப்பாட்டில் உள்ள எச்சரிக்கை மையத்துக்கு வழங்கப்படும்

புவிநடுக்கத்தின் அளவு அதிகமானதாக இருந்தால் 750கி.மீ சுற்றாடலுக்குள் உள்ள கரையோரப் பிரதேசங்களுக்கு உடனடியாக எச்சரிக்கை வழங்கப்படும். சுனாமி ஏற்படப்போகும் அபாயத்தை ஒரு மணி நேரத்துக்குள் இவர்கள் அறிவிப்பார்கள். 1952 முதல் Japanese Meteorological Agency புவி நடுக்கம் ஏற்பட்டு 20 நிமிடங்களுக்குள் 600கி.மி பகுதிக்குள் சுனாமி எச்சரிக்கையை வழங்கக் கூடியவர்களாக உள்ளனர்.

1964ல் அலஸ்காவில் ஏற்பட்ட சுனாமியை அடுத்து Alaska Tsunami Warning Cente (ATWC) உருவாக்கப்பட்டது. இவ்வமைப்புகள் Alaska, Canada, Washington, Oregon and British Columbia ஆகிய பிரதேசங்களுக்கு சுனாமி எச்சரிக்கையை வழங்குகின்றன. ATWC அலஸ்காவில் 16 remote seismic stationகளையும் 8 tide gauge station களையும் கனடாவின் மேற்குக் கரையிலும் அமெரிக்காவிலும் 11 seismic stations களையும் 9 tide gauge station களையும் கொண்டுள்ளது. ATWC, PTWC போலல்லாது சுனாமியை ஏற்படுத்தக் கூடிய புவிநடுக்கம் ஏற்பட்டதுமே சுனாமிக்கான எச்சரிக்கையை வழங்குகிறது.

தற்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட அபிவிருந்தி அடைந்துவரும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நம்பகமான செலவு குறைந்த சுனாமி எச்சரிக்கை கருவிகள் அவசியமாகின்றன. THRUST (Tsunami Hazard Reduction Utilising Systems Technology) என்ற

மேலும் இந்த அனர்த்தத்தால் ஏழை, பணக்காரர் மற்றும் எந்தப் பாகுபாடும் இன்றி மக்கள் பலியாகி உள்ளனர். தெற்காசியாவில் ஏற்பட்ட இந்த அனர்த்தத்தால் தெற்காசியாவுக்கு வெளியே மேற்கு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான உல்லாசப் பயணிகள் பலியாகி உள்ளனர். இந்த தெற்காசிய நாடுகள் பொருளாதார வளர்ச்சி குன்றியமையால் இந்த மேற்கு நாடுகளும் கடந்த காலங்களில் இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளுக்கான சுனாமி எச்சரிக்கை மையத்தை நிறுவ உதவியிருக்க முடியும். ஆனால் அப்பிராந்திய நாடுகளே அத்திட்டத்தை முட்டாள்தனமானது என்று கூறியிருக்கும் போது மேற்கு நாடுகளைக் குற்றம் சுமத்துவது பொருத்தமாக இராது.

## மக்களுக்கான சுனாமி எச்சரிக்கை :

PTWC, ATWC ஆகியவற்றில் இருந்து தொலைபேசிமூலமாக எச்சரிக்கை வழங்கப்பட்டதும் Provincial Emergency Program (PEP) அப்பகுதி மக்களுக்கு எச்சரிக்கை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்கும். சுனாமி வரப்போவதை அறிந்தாலும் அந்தத் தகவல்களை பாதிப்புக்கு உள்ளாகப் போகும் மக்களுக்கு எடுத்துச் செல்வதே மிக முக்கியமானது.

தாய்லாந்தில் சுனாமி எச்சரிக்கையைப் பெற்ற ஆராய்ச்சியாளர்கள் அதனை உறுதிப்படுத்துவதற்கான சாதனங்களைக் கொண்டிருக்கவில்லை. தவறான எச்சரிக்கையை வழங்கி மக்களை வெளியேற்றினால் பொருளாதாரமும் உல்லாசப் பயணத்துறையும பாதிக்கப்படும் என்பதால் அவர்கள் எச்சரிக்கையை விடவில்லை. 1986ல் ஹவாயில் சுனாமி வரப்போகிறது என்ற தவறான எச்சரிக்கையால் மக்கள் வெளியேற்றப்பட்டனர். வெளியேற்றச் செலவு 30 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். வர்த்தகம், உல்லாசப் பயணத்துறை என்பனவற்றுக்கு ஏற்பட்ட நஸ்டம் இதற்கு மேல்.

தென்கிழக்கு ஆசியாவைத் தாக்கிய சுனாமி பற்றிய எச்சரிக்கை மக்களுக்கு வழங்கப்படாதது இப்பிராந்திய நாடுகளின் நிர்வாகத்தினது செயல்திறனின்மையை மிகத்

தெளிவாகக் காட்டி உள்ளது. இவர்கள் தம்மிடம் நவீன தொழில்நுட்பங்கள் இல்லை என்ற குற்றச்சாட்டை வைத்தாலும் இவ்வாறான ஆபத்துக்காலங் களில் எப்படித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது என்ன செய்ய வேண்டும் போன்ற அடிப்படை அறிவு இருக்கவில்லை.

புவி நடுக்கம் ஏற்பட்டு 50 நிமிடங்களில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தை சுனாமி தாக்கும் வாய்ப்பு இருப்பது தாய்லாந்து, இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளுக்கு தொலைபேசி அழைப்புகள் மூலம் தெரிவிக்கப்பட்டது. பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையத்தில் இருந்து பாதுகாப்புப் படைகள், அரச கட்டுப்பாட்டு மையங்கள், தூதரகங்கள் என்பனவற்றின் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் மேற்கொண்டு எதுவும் செய்யப்படவில்லை. ஆனால் தாய்லாந்தில் ஒரு பத்துவயதுச் சிறுமி சில நிமிடங்களில் நூறுபேரைக் காப்பாற்றி உள்ளாள். ஒருவரின் தொலைபேசி அழைப்பின் மூலம் பாண்டிச் சேரியில் ஒரு கிராமமே காப்பாற்றப்பட்டு உள்ளது.

ஆனால் பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையத்திலி ருந்து தகவலைப் பெற்றவர்கள் அதன் தாக்கத்தினை உணராமல் அசமந்தமாக இருந்துள்ளனர். இவர்களது செயல்திறனின்மையும் சோம்பேறித்தனமும் பல்லாயிரம் உயிர்களைப் பறித்து உள்ளது. இவர்கள் உடனடியாக செயற்பட்டு இருந்தால் பல்லாயிரம் உயிர்களைக் காப்பாற்றி இருக்கலாம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள மீனவக் கிராமங்கள் வானொலியில் தங்கி உள்ளவை. அவர்க ளுக்கு காலநிலை அறிவிப்புகள் அவசியமானவை. இவ்வாறான எச்சரிக்கையை வானொலி மூலம் உடனடி யாக வழங்கி இருந்தால் உயிரிழப்புகளை வெகுவாகக் கட்டுப்படுத்தி இருக்க முடியும். வானொலி, தொலைக் காட்சிகள் என சகலவிதமான ஊடகங்களுக்கு ஊடா கவும் உடனடியான அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருக்க முடியும். ஆனால் அது செய்யப்படவில்லை.

நவீன தொழில்நுட்பத்திறன் உடைய சாதனங்க ளைப் பொருத்தி சுனாமி வரப்போவதை அறிவது ஒன்றும் கடினமமான விடயமல்ல. அந்தத் தகவல் கரையோரங்க ளில் எந்த நவீன வசதிகளும் தொடர்புகளும் இல்லாமல் வாழும் குக்கிராமங்களுக்கு பரப்பப்பட வேண்டும். அதுவே கடினமான பணியாக அமையும். டிசம்பர் 26 சுனாமி வரப்போவது தெரிந்திருந்தும் அந்தத் தகவலை கொண்டு செல்வதற்கான திட்டம் இருந்திருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

## சுனாமியும் இந்தியாவும்

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தன்னை ஒரு வல்லரசாக்கிக் கொண்ட இந்தியா, சுனாமி எச்சரிக்கை பற்றி கவனம் செலுத்தாதது அதன் குறுகிய பார்வையை யே காட்டி உள்ளது. மேலும் புவிநடுக்கம் ஏற்படக் கூடிய பகுதியான அந்தமான், நிக்கோபார் தீவுகளைக் கொண்ட இந்தியா அங்கு ஒரு படைத்தளம் ஒன்றையும் கொண்டிருந்தது. இத்தளம் தற்போது முற்றாக அழிக்கப் பட்டு உள்ளது.

இந்த சுனாமி அனர்த்தம் இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளினது பாதுகாப்பு மற்றும் இராணுவச் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. உடனடியாக இங்கு ஒரு பாதுகாப்புப் பிரச்சினை ஏற்படாது போனாலும் இந்தியா எச்சரிக்கை மையம் ஒன்றைக் கொண்டிராததும் இவ்வாறான அழிவுக்குத் தன்னை தயார்படுத்தி இராததும் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் பிரசன்னத்துக்கு வித்திட்டு உள்ளது. தனது இராணுவ கட்டுமானத்தை வளர்ப்பதிலும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதிலும் ஆர்வம் காட்டிய இந்தியா இது போன்ற அறிவியல் விடயங்களில் கோட்டை விட்டது மிகுந்த அவமானகரமானது.

## சுனாமி எச்சரிக்கையின் எதிர்காலம்

எதிர்காலத்தில் உலகின் அனைத்து கரையோரப் பிரதேசங்களிலும் இவ்வாறான சுனாமி எச்சரிக்கை மையங்கள் உருவாக்கப்படுவதும் அவ்வெச்சரிக்கையை உடனடியாக மக்களுக்கு அறிவிக்கக் கூடிய நடைமுறைத் திட்டங்களைக் கொண்டிருப்பதும் அவசியம். சுனாமி வரப்போவதை அறிவதற்கு நவீன தொழில்நுட்பம் மிக அவசியம்.

ஆனால் அந்த எச்சரிக்கையை காவிச்செல்வதற்கு அத்தகைய தொழில்நுட்பம் அவசியமில்லை. பங்களாதேசில் சூறாவளியால் ஏற்படும் இழப்புகள் வெகுவாகக் குறைக்கப்பட்டு உள்ளது. அதிகாரிகள் சூறாவளி வரப்போவதை சைக்கிளில் சென்று விசில் ஊதி அறிவிக்கின்றனர். அதனால் மக்கள் உடனடியாக சூறாவளி பாதுகாப்பு இடங்களுக்கு சென்று தஞ்சம் அடைகின்றனர். இதே போன்று தகவல் தொடர்பு சாதனங்கள் அனைத்தையும் பயன்படுத்தும் அதே வேளை இவ்வாறான அபாய அறிவிப்புகளை வழங்க உள்ளூர் பொலிஸ் நிலையங்கள், தபாலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் என்பனவற்றையும் பயன்படுத்தக்கூடிய வினைத்திறனுடைய கட்டமைப்பு இருக்க வேண்டும். கரையோரக் கிராமங்களில் இலகுவாக எச்சரிக்கையை வழங்கக் கூடிய அபாய ஒலியை ஒலிக்கும் கருவிகள் நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டும். கடலுக்கு சென்றவர்களுக்கும் இத்தகவல்கள் வழங்கப்படக் கூடிய நடைமுறைச் சாத்தியமான செயற்திட்டங்கள் பற்றி ஆராய வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக மக்களுக்கு இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இப்போது எல்லோருக்கும் இந்த அனர்த்தத்தின் கொடூரம் தெரிகிறது. கமராக்கள் வேறுபக்கம் மெல்ல மெல்லத் திரும்ப மக்களும் அந்த அனர்த்தத்தின் தாக்கத்தை மறந்துவிடு





வார்கள். அதானல் இது பற்றிய விழிப்புணர்வை பாடசாலைகள், ஊடகங்களுக்கூடாக தொடர்ச்சியாக ஏற்படுத்த வேண்டும். ஆண்டு தோறும் இந்நினைவு தினங்களை நிகழ்த்தி மக்களுக்கு இந்த அனர்த்தம் பற்றிய விழிப்புணர்வை வழங்க வேண்டும். இவ்வகையான அனர்த்தம் நிகழ்வதற்கான அறிகுறிகள் என்ன? அப்படி அறிகுறிகள் தென்பட்டால் என்ன செய்ய வேண்டும் போன்ற அடிப்படை விடயங்கள் கற்பிக்கப்பட வேண்டும்.

இந்தப் பாரிய இழப்புக்குப் பின்னும் நாம் தற்காப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்தா விட்டால் அது மன்னிக்க முடியாத குற்றமாகும். இக்கட்டுரையை நீங்கள் வாசிக்கும் போது கமராக்கள் வேறு விடயங்களுக்குச் சென்று விடும். வானொலிகள் வேறு உரையாடல்களுக்குச் சென்றுவிடும். பத்திரிகைகள் வேறு தலைப்புகளை எடுத்துக் கொள்ளும்.

ஆனால் உறுதி அளிக்கப்பட்டுள்ள சுனாமி எச்சரிக்கை மையங்கள் அடுத்த ஆண்டு உருவாக்கப்படுமா ? அந்த எச்சரிக்கையை மக்களிடம் கொண்டு செல்வதற்கான தகவல் கட்டமைப்புகள் உருவாக்கப்படுமா ?/தகவல் கட்டமைப்புகளை உருவாக்க அடுத்த ஆண்டு வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லையே. சுனாமி எச்சரிக்கையை பசுபிக்கில் உள்ள மையங்கள் தரத் தயாராக உள்ளன. ஏற்கனவே தந்தும் உள்ளது. ஆகவே தகவல் கட்டமைப்புகள் முதலில் உருவாக்கப்பட வேண்டும்.


# S . SATHA & Co

## SOLICITORS

*IMMIGRATION - CONVEYANCING - INJUNCTIONS*
*CRIMINAL - DIVORCE - LEGAL AID WORK*

Community Legal Service

Specialist Help Point Immigration Crime

376 - 378 High Street North,
Manor Park, London E12 6PH

Criminal Defence Service

ILPA

**Tel : 020 8471 9484 Fax : 020 8471 9485**

த ஜெயபாலன்

# சுனாமிக்குப் பின்

# தேசியவாதத்தின் பிடி தளர்கிறது

சுதந்திர இலங்கையின் பாராளுமன்ற அரசியல் இனவாதத்தின் தளத்திலேயே கட்டமைக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு சிங்கள தேசியக் கட்சிகளும் இனவாதத்தின் அடிப்படையிலேயே வாக்குப் பெட்டிகளை நிரப்பி வந்தன. தூரநோக்கற்ற தமிழ் தேசியக் கட்சியாக உருவாகிய தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஏட்டிக்குப் போட்டியாக இனவாதத்தை கக்கி இளைஞர்களைத் தூண்டிவிட்டது. எழுபதுக்களில் இடதுசாரிகளும் இத்தேசியக் கட்சிகளில் தொங்கிக்கொண்டு அரசியல் நடத்த முற்பட்டு இறுதியில் காணாமல் போயினர்.

எதிர்காலத்திட்டம் எதுவும் இல்லாது பாராளுமன்ற ஜனநாயகத்தை நம்பி தமிழ் இளைஞர்களைத் தூண்டி விட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அந்த இளைஞர்களின் கையாலேயே பலியானது. இன்று 57 ஆண்டுகள் சுதந்திரத்துக்குப் பின்னும், மூன்று தசாப்தகால விடுதலைப் போராட்டத்துக்குப் பின்னும் இலங்கையில் உள்ள எந்த இன மக்களும் சமாதானத்துடனும் நம்பிக் கையுடனும் இல்லை. அவர்களிடையே காலம் காலமாக ஊட்டி வளர்க்கப்பட்ட இனவாதம் கூர்மையடைந்து இனங்க ளிடையே நம்பிக்கையின்மையையும் சந்தேகத்தையுமே வளர்த்து வந்தது.

## தேசியவாதத்தை உலுப்பிய மனிதநேயம் :

டிசம்பர் 26 2004ல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத் துக்குப் பின் இனங்களிடையேயான முரண்பாடு தளர்ந்து மனித நேயமும் இன ஒருமைப்பாடும் ஏற்பட்டு வருகின்றது. இந்த அனர்த்தம் தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் என்று எந்த பேதமும் பார்க்கவில்லை. அனைவரையும் பாதித்து உள்ளது. இதில் யார் அதிகம் பாதிக்கப்பட்டனர் என்றோ யாருக்கு ஆதரவு கொடுப்பது என்றோ பாதிக்கப்பட்ட மக்கள் ஆராய்ச்சி செய்யவில்லை.

சுனாமி அனர்த்தத்தினால் இலங்கையில் வரலாறு காணாத அவலம் நிகழ்ந்து உள்ளது. யாருக்கு உதவி தேவையோ அவர்களுக்கு மக்கள் உதவினர். யார் உதவி செய்யத் தயாராக இருந்தார்களோ அவர்கள் உதவிக ளைச் செய்தனர். தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள்,

STF படையினரால் நிர்வகிக்கப்படும் மட்டக்களப்பு, கோமாரி அகதிமுகாம். அன்று இராணுவம் இன்று உயிர்காத்த நண்பர்கள்.



புலிகள், இராணுவம் என்றெல்லாம் சிந்திப்பதற்கு அப்போது நேரம் இருக்கவில்லை. இது மனிதத் தூண்டலினால் இயல்பாக எழுந்த செயற்பாடு இதில் அரசியல் இல்லை.

வடமராட்சியில் இராணுவ வீரர்களை விடுதலைப் புலிகள் மீட்டெடுத்து இராணுவத்திடம் ஒப்படைத்ததை கடற்புலிகளின் தளபதி சூசை செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார். திருமலையில் இராணுவம் தமிழ் மக்கள் பலரையும் மீட்டெடுத்து காப்பாற்றியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் பிபிசிக்கு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளில் பணி புரிவதற்காக சிங்கள மருத்துவர்களும் தாதிகளும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு விரைந்துள்ளனர். அவர்களது உதவியை விடுதலைப் புலிகள் நன்றியுடன்



ஏற்றுக் கொண்டு அவர்களை பாதிக்கப்பட்ட வெவ்வேறு பிரதேசங்களுக்கும் அனுப்பி வைத்தனர்.

## ஊடகங்களின் தீவிர இனவாதம் :

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலமை இவ்வாறு இருக்க சில ஊடகங்களில் செய்திகள் முற்றிலும் திரிபுபடுத்தப்பட்டு இனவாதச் சாயம் பூசப்பட்டே வெளியிடப்பட்டது. களத்தில் இன முரண்பாடு மழுங்கி பரஸ்பர மனிதாபிமான உணர்வு மேலோங்குவது தமிழ், சிங்கள தேசியவாதத்தின் தூண்களாக தங்களைக் காட்டிக்கொள்ளும் சக்திகளுக்கு மிகுந்த அச்சத்தை ஊட்டி உள்ளது. இன முரண்பாட்டை கூர்மைப்படுத்தாமல் அவர்களால் அரசியல் செய்ய முடியாதாகையால் இன முரண்பாட்டை கூர்மைப்படுத்தும் நடவடிக்கைகளை தாங்கள் சார்ந்த ஊடகங்களுக்கு ஊடாகச் செய்ய தேசியவாதிகள் முற்பட்டு உள்ளனர்.

தமிழ் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் சிங்களவர்களால் தடுக்கப்பட்டு தென்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டது போன்ற செய்திகள் காட்டுத் தீ போல் பரவியது. தமிழ் கிராமங்களுக்கு மீட்புப் பணிகளில் ஈடுபடச் சென்ற சிங்கள, முஸ்லீம் இனத்தவர்களை குடியேற்றத்துக்காக கொண்டுவரப்பட்ட காடையர்கள் என சில தமிழ் ஊடகங்கள் பிரச்சாரம் செய்தன. குறிப்பாக சில தமிழ் இணையத்தளங்கள் இந்த இனவாதப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டன.

மறுபக்கம் தமிழ் மக்களுக்கு கொண்டு செல்லப்பட்ட நிவாரணப் பொருட்களை வி.புலிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் பதுக்குவதாகவும் கடத்துவதாகவும் சிங்கள ஊடகங்கள் எதிர்ப் பிரச்சாரத்தில் இறங்கின. அவை ஒருபடி மேலே சென்று பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை பிரபாகரன் பார்க்கவில்லை என்றும் அவரை கடல்கொண்டு சென்றுவிட்டது என்றும் பொய்ப் பிரச்சாரம் செய்தன.

ஆனால் இந்த வகையில் இலவசமாக இயங்கும் வெக்ரோன் தொலைக்காட்சி சுனாமி பாதிப்பை காட்சிப்படுத்திய முறைமை நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டும். இலங்கையில் பாதிக்கப்பட்ட சகல பகுதிகளுக்கும் தனது குழுவை அனுப்பி காட்சிகளைப் பதிவு செய்தது. தமிழகத்துக்கும் அவர்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தை வழங்கி இருந்தனர். மேலும் தகவல்கள், பேட்டிகள் என்பன தமிழ், சிங்களம், தெலுங்கு போன்ற மொழிகளிலும் ஒளிபரப்பப்பட்டது. தீபத்தில் எம் என் எம் அனஸின் சுனாமி பற்றிய பதிவுகள் குறிப்பிடத்தக்கதாயிருந்தது.

ரிரிஎன் தொலைக்காட்சி சுனாமியின் முழுமையான தாக்கம் வெளிவருவதற்கு முன்னரேயே, சம்பவம் நிகழ்ந்து சில மணி நேரத்திலேயே நிதிசேகரிப்பில் குதித்தது. திரையில் வந்த மக்களது அவலங்கள், புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக்கணக்கை உயர்த்தியது. நிதியைக் கேட்பதில் காட்டிய அக்கறை உதவிகளை பரந்து விநியோகிப்பதில் காட்டப்படவில்லை எனவும் திரட்டப்பட்ட நிதி பற்றி தொலைக்காட்சி தொடர்ந்தும் மௌனமாகவே இருப்பதாகவும் பரவலாகக் குற்றம்சாட்டப்படுகிறது. மேலும் உள்ளூரில் செயற்பட்ட பல்வேறு சிறு அமைப்புகளின் பங்களிப்புகள் ரிரிஎன் இல் இருட்டடிப்பு செய்யப்பட்டது எனவும் சுட்டிக் காட்டப்பட்டது. குறிப்பாக 'உதவி' எனும் அமைப்பு மட்டக்களப்பின் பின்தங்கிய பகுதிகளில் செய்த பங்களிப்புகள் பற்றி ஒருவர் பேட்டியில் தெரிவித்த பகுதிகள் நீக்கப்பட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சேவைகள் மட்டும் ஒளிபரப்பப்பட்டுள்ளதாக 'உதவி' அமைப்புக்கு ஜேர்மனியில் நிதி வழங்கியவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் கோரமான காட்சிகள் எவ்வித எச்சரிக்கையும் இன்றி காண்பிக்கப்பட்டது. சிறார்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், இதயநோயுடையவர்கள் மற்றும் பலவீனமான மனநிலை உடையவர்கள் இக்காட்சிகளால் பாதிக்கப்படுவார்கள் என்கிற சிந்தனையே இன்றி காண்பிக்கப்பட்ட இக்காட்சிகள் பலரினை தற்காலிக உளவியல் பாதிப்புக்கு உள்ளாக்கி உள்ளது.

மரணம் என்பது மிக, மிகத் துன்பகரமானது. மரணித்தவர்களை சந்தைப்படுத்துவது போன்ற வேலையை தொலைக் காட்சிகள் மேற்கொண்டது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. நிர்வாண உடல்களின் பாலியல் உறுப்புகளை மறைத்துவிட்டு உடலைக் காட்சிப்படுத்துகிறார்கள். அந்த உயிரற்ற உடல்களைக் காட்சிப்படுத்தும் இத்தொலைக்காட்சிகள் மானுடவிழுமியங்களை சற்றும் மதித்திருக்கவில்லை.

## சுனாமி நிவாரணத்தில் அரசியல் :

சுனாமிக்குப் பின் இலங்கை அரசியலில் ஒருவித போட்டி நிலை உருவாகி உள்ளது. இந்த சுனாமியை அரசியல் மயப்படுத்தும் தீவிர நடவடிக்கையில் அரசாங்கமும் வி.புலிகளும் ஈடுபட்டு உள்ளனர்.

மக்கள் வேதனையின் விளிம்பில் நிற்கும் இத் தருணத்தில் அவர்களுக்கு நிவாரணத்தை அள்ளி வழங்கி அம்மக்களின் இதயங்களையும் எண்ணங்களையும் வென்றுவிடலாம். விடுதலைப் புலிகளை தமிழ் மக்களிடம் இருந்து அந்நியப்படுத்தலாம் என ஜனாதிபதி சந்திரிகா



சங்குமான்கண்டி தற்காலிக குடில்

தலைமையிலான அரசு கணக்குப் போடுகிறது.

தென்னிலங்கையிலும் பார்க்க வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு நிவாரண நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதில் அக்கறை காண்பிக்கப்பட்டு உள்ளது. நிவாரண மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் வி.புலிகளுடன் இணைந்து செயற்படப் போவதாகவும் அறிவித்தார். நிவாரண நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். ஜனாதிபதி சந்திரிகா மட்டக்களப்புக்கு விஜயம் செய்து நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சுதந்திரப் பறவைகளையும் சந்தித்து உள்ளார். இதன் மூலம் அரசு தனது கடும்போக்கைத் தளர்த்தி தனது காய்களை நகர்த்தியதைக் காட்டுகிறது.

மறுமுனையில் வி.புலிகள் அரசாங்கத்துக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே தொடர்ந்தும் ஒரு பிளவை வைத்திருக்கவே விரும்புகின்றனர். அதனால் அனர்த்தம் இடம்பெற்ற நாள்முதல் அரசாங்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அழுத்தமாக வைத்தனர். இலங்கையில் காலத்துக்கு காலம் வந்த அரசுகளின் கடந்தகால வரலாற்றை எடுத்துக்காட்டி இலங்கை அரசு ஒரு இனவாத அரசு என்பதை நிரூபிப்பதில் கூடிய அக்கறை காட்டினர். அனர்த்தம் நிகழ்ந்த சில தினங்களில் பாதிக்கப்பட்ட பல பகுதிகளுக்கும் நிவாரணம் சென்றடையாத நிலையில் தமிழ் பகுதிகளுக்கு நிவாரணம் வரவில்லை என்ற வி.புலிகளின் வாதம் வெகுவாக எடுபட்டது. அரசாங்கம் பாரபட்சமாக நடந்துகொள்கிறது என வி.புலிகள் தமது பிரச்சாரப் பலத்தாலும் தமிழ் பா.உ களுக்கூடாகவும் அழுத்தமாகக் கூறினர்.

## உதவியும் அதிகாரமும் :

வடக்கு, கிழக்கின் நிவாரணப் பணிகள் தம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதில் வி.புலிகள் மிகத் தீவிரமாக இருந்தனர். தமது பொது அமைப்பான தமிழர் புனர்வாழ்வுக் கழகமே மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடும் என வி.புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்செல்வன் குறிப்பிட்டார். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை பலப்படுத்துவதில் வி.புலிகள் வெற்றி பெற்று உள்ளனர். மேலும் பிரபாகரன் நிதியிலிருந்து புனர்வாழ்வுக் கழகத்தக்கு $294,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைத் தவிர இந்நடவடிக்கைகளை கையாளக் கூடிய அமைப்புகள் அங்கு இல்லை. ஆயுதம் தரித்திருந்தால் வி.புலிகள். ஆயுதம் தரிக்காவிட்டால் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் என்ற நிலை அங்கு. டென்மார்க் அரசாங்கம் நேரடியாக வி.புலிகளிடமே நிவாரணத்தை கையளித்து உள்ளனர். வோசிங்டன் போஸ்ட் பத்திரிகையும் நியுஸ் வீக் சஞ்சிகையும் கூட வி.புலிகளின் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மிகவும் மெச்சி உள்ளமை குறிப்பிடத்தக்கது. அதனை பேச்சாளர் மங்கள சமரவீரவும் பாராட்டி உள்ளார். வடபகுதிக்கு விஜயம் செய்த நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்காரவும் நிவாரண மீள்கட்டுமான நடவடிக்கைகள் வி.புலிகளிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார்.

இந்நிலையில் இலங்கைக்கு வழங்கப்படும் சர்வதேச உதவிகளை தமிழ் பிரதேசங்களில் அரசாங்கம் வழங்குவதா? வி.புலிகள் வழங்குவதா? என்ற அதிகாரத்துக்கான போட்டி மிகத் தீவிரமாகி உள்ளது. 'உதவி - aid' என்பது 'அதிகாரம் - power' ஆகி உள்ளது. யார் உதவி வழங்குகிறார்களோ அவர்களே மக்கள் மீது ஆதிக்கம் செலுத்த முடியும். அவர்களை அதிகாரம் செய்ய முடியும். இதில் இரு தரப்புமே விட்டுக்கொடுக்கும் நிலையிலில்லை.

அரசாங்கம் நிவாரண நடவடிக்கைகளை பாதுகாப்புப் படையினரிடம் கையளித்து உள்ளது. வடக்கு கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் படையினரே நிவாரண விநியோகங்களை மேற்கொள்கின்றனர். முல்லைத்தீவு போன்ற தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வி.புலிகள் நிவாரண நடவடிக்கைகளை செய்கின்றனர்.

## தஞ்சம் அடைந்தவர்கள் தாயக்கட்டையாகினர் :

வி.புலிகளும் பாதுகாப்புப் படைகளும் சில இடங்களில் முறுகல் நிலையில் உள்ளனர். யாழ் குடத்தனை முகாம் எரிப்பு, அகதி முகாம்களில் இருந்து மக்கள் வெளியேற்றம் என்பன இந்த அதிகாரத்தை நிறுவும் போட்டியின் விளைவுகள். இந்தப் போட்டியினால் பாதிக்கப்பட்ட சில தமிழ் கிராமங்களுக்கு நிவாரணப் பொருட்கள் போய்ச் சேர்வதில் பெரும் தடைகள் ஏற்பட்டு இருந்ததாக கிழக்கு மாகாணத்தில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐநா உட்பட சர்வதேச அமைப்புகள் மற்றும் தலைவர்கள் இலங்கையில் இதுவரை நிவாரணப் பணிகள் பாரபட்சம் இன்றி நடைபெற்று உள்ளதாகவே தெரிவிக்கின்றன. இலங்கை அரசுக்கும் வி.புலிகளுக்கும் இடையே நடைபெறும் இந்தப் போட்டியில் சர்வதேச சமூகம் தாங்கள் மாட்டிக் கொள்ளவதை விரும்பவில்லை.

பாதிக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரை யார் குத்தியும் அரிசி வர வேண்டும். உலை பொங்க வேண்டும். அதை அமெரிக்கா தருகிறதா? அல்லது இந்தியா

தருகிறதா? இலங்கை இராணுவம் தருகிறதா? அல்லது வி.புலிகள் தருகிறார்களா? என்பதைப் பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை. சுனாமி தாக்கியதில் இருந்து நான்கு தினங்களாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் உணவும், உடையும் வழங்கி உதவியவர்கள்; மீட்புப் பணியில் ஈடுபட்டவர்கள்; பொது மக்களும் பெயர் தெரியாத உள்ளூர் அமைப்புகளும் தான்.

ஆனால் பின்னர் தங்கள் கொடியை நாட்டி, தங்கள் முத்திரையைக் குத்திக் கொள்ள வேண்டும் என்று வந்தவர்கள் நிவாரணத்தில் அரசியல் செய்ய முற்பட்டனர். பெரும் அமைப்புகள் நிவாரணப் பணியை தாங்கள் பொறுப்பெடுப்பதாக கூவினர். அதனால் உளூர் மக்களால் அவர்களுக்கு கிடைத்த நிவாரண உதவி நின்றது. அதனால் முதல் நான்கு நாட்களும் கிடைத்த உணவும் பின்னர் சில பகுதிகளுக்கு கிடைக்கவில்லை. மக்கள் முகாம்களுக்கு அங்கும் இங்குமாக இடமாற்றப்பட்டனர். அரசியல் தாயாக்கட்டைகள் போல் உருட்டப்பட்டனர்.

## சர்ச்சைக்குள்ளான சுனாமி விஜயங்கள் :

நிவாரண நடவடிக்கைகள் இவ்வாறு இருக்க இலங்கைக்கான சர்வதேசத் தலைவர்களின் விஜயமும் அரசுக்கும் வி.புலிகளுக்கும் இடையில் புதிய நெருக்கடிக ளைத் தோற்றுவித்து உள்ளது. சர்வதேச நாடுகள் நேரடியாக வி. புலிகளுக்கு உதவிகளை வழங்குவதும் சர்வதேச தலைவர்கள் வி.புலிகளைச் சந்திப்பதும் வி.புலிகள் அமைப்பை சர்வதேசரீதியில் ஒரு சட்டபூர்வ மான அமைப்பாக்கும். சர்வதேச ஊடகங்களினூடாக ஒரு அங்கிகாரத்தையும் அது ஏற்படுத்தும். இதனை சாத்தியமாக்குவது வி.புலிகளைப் பொறுத்தவரை பெரும் வெற்றி. ஓரே கல்லில் இரு மாங்காய்.

ஆனால் வி.புலிகள் எடுத்துக்கொண்ட அந்த முயற்சிகள் கைகூடவில்லை. சர்வதேச நாடுகள் வி.புலிக ளை பயங்கரவாத அமைப்பாக அறிவிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசாங்கமே முன்னின்று செயற்பட்டிருந்தது. ஆனால் இந்த சுனாமியால் அந்த பயங்கரவாத முத்திரை அழிந்து விடக்கூடாது என்பதில் ஆளும் கூட்டணி மிக அவதானமாக இருந்து வருகிறது. ஐ நா செயலாளர் நாயகம் கொபி அனன் வி.புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கு விஜயம் செய்வார், வி.புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திப்பார் என தமிழ்செல்வன் உறுதியாகத் தெரிவித்திருந்த போதும் அரசாங்கம் அனனின் பயண ஏற்பாட்டில் வி.புலிகளை வெட்டிவிட்டது. கனடியப் பிரதமரின் விஜயத்திலும் இதே எதிர்பார்ப்பை தமிழ்செல்வன் வெளியிட்டார். ஆனால் இதில் இலங்கை அரசுக்கு முதல் கனடிய வெளிவிவகார அமைச்சே வி.புலிகளை வெட்டிவிட்டுள்ளது.

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு :

அத்துடன் அரசியல்ரீதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சுனாமிக்கு முன்னும் பின்னும் வி.புலிகளுக்கு எந்த வகையிலும் பயன்படவில்லை. இந்தியாவுடனான உறவை வளம்படுத்தவோ சர்வதேச உறவை வளம்படுத்த வோ அல்லது பாராளுமன்றத்தில் எதையாவது வாதாடிப் பெற்றுக் கொள்ளவோ இந்த பா.உ க்களால் முடிய வில்லை. தமிழ் ஊடகங்களுக்கு கண்டன அறிக்கைகளை யும் குற்றச்சாட்டுகளையும் வழங்குவதே இவர்கள் இதுவரை சாதித்தது என்றால் மிகையல்ல. சில தமிழ் தேசியக் கூட்டமைப்பு பா உ க்கள் தமது ஓய்வூதியத்தை உறுதிசெய்து விடவேண்டும் என்பதிலேயே அதிக கவனம் செலுத்துவதாக அவர்களுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களும் காலத்துக்கு காலம் அதிகாரத்தில் உள்ளவர்களின் சம்பளப்பட்டியலில் இருந்தவர்கள். இவர்களிடம் பெரிதாக எதிர்பார்பதும் தவறு. தமிழ்செல்வன் மற்றும் அரசியல்துறையில் முன்நிற்பவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பா உக்களை பிரதியீடு செய்வது சிலசமயம் பொருத்தமானதாக இருக்கும்.

## ஆலமரமும் நாணற் புல்லும் :

பிரதமர் ராஜபக்சவுக்கு யாழ்ப்பாணத்தில் சோத்துப் பாசல் வீசியது, ஐக்கிய தேசியக் கட்சியை மட்டும் ஆதரிப்பது, அரசாங்கத்துடன் சில ராஜதந்திர உறவுகளை வைத்துக் கொள்ளாமல் இருப்பது போன்ற விடயங்களால் வி.புலிகள் ஆளும் கட்சியுடன் பகைமையை கூர்மைப்ப டுத்தி உள்ளனர். அதனால் ஒத்துழைப்பதன் மூலம் வென்றெடுக்கக் கூடியவையும் கை நழுவிச் செல்கிறது.

பன்மைத்துவ ஜனநாயகத்துக்கு இடமளிக்காதது, அரசியல் படுகொலைகளை மேற்கொள்வது, சிறுவர்களை படையணிக்கு சேர்ப்பது போன்ற அம்சங்கள் சமாதான காலத்திலும் தொடர்ந்தது. இது சர்வதேச சமூகத்தின் கண்டனத்துக்கும் உள்ளானது. சுனாமிக்குப் பின்னும் இவ்வாறான அம்சங்கள் இடம்பெற்று உள்ளன. ரொறன் ரோவில் வி.புலிகளின் ஆதரவாளர்கள் ஒன்ராரியோ மாநிலத்தின் முன்னாள் முதல்வர் பொப் ரேயை மனித உரிமைக் கூட்டத்தில் சிறுவர் இராணுவம் பற்றி பேசவிடா மல் கத்திக் கூச்சலிட்டு தடுத்தனர். ஆனால் ஐ நா சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து 18ம் நாள், 13 ஜனவரியில் வெளியிட்ட அறிக்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர் கள் தங்கியிருந்த முகாமில் இருந்து வி.புலிகள் சிறுவர்க ளைக் கடத்தி உள்ளதாக குற்றம்சாட்டி உள்ளது. அதற்கு தங்களிடம் தகுந்த ஆதாரம் இருப்பதாகவும் யுனிசெப்பின் இலங்கைத் தலைவர் Ted Chaiban தெரிவித்து உள்ளார்.

இந்த சுனாமியில் வி.புலிகள் ஆலமரமும் நாணற்புல்லும் கதையை படிப்பது பொருத்தமாக இருக்கும். யுத்தகாலத்தில் கடைப்பிடித்த அதே அரசியலை வி.புலிகள் சமாதான காலத்திலும் கடைப்பிடித் தனர். தற்போது சுனாமிக்குப் பின்னும் அதே அரசியலைத் தொடர்வது எவ்வளவுதூரம் நன்மை பயக்கும் என்பது சந்தேகமே. விரைவல் வி.புலிகள் தங்களிடையே ஒரு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவது தவிர்க்கமுடியாதது.



சங்குமான்கண்டி தமிழ் அகதி முகாமுக்கு தென்னிலங்கையில் இருந்து வந்த சிங்கள மருத்துவ தாதிகள்

# பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து ......

## புவிநாயகம் :

(விடுமுறைக்கு காரைதீவுக்கு குடும்பத்தினரிடம் வந்திருந்த ரயில்வே திணைக்கள ஊழியர்.)

"காலை 8:40 மணி இருக்கும் சனங்களின் அவலக்குரல் கேட்டு வெளியே வந்தபோது 20 அடி உயரமான கறுப்பு நிற அலை என்னைத் தாக்கியது. ஒருவாறு மனைவியையும் பிள்ளையையும் பிடித்துக் கொண்டு நீந்த முயற்சித்த போது மற்றுமொரு அலை வந்து என்னைத் தாக்கியது. மனைவியையும் பிள்ளையை யும் அவ்வலை கொண்டு சென்றது. திருப்பியொரு அலை வந்து என்னை கரையில் தள்ளியது. சிறுவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் மரங்களிலும் பற்றைகளிலும் தொங்கிய வண்ணம் அலறிக் கொண்டிருந்தனர்.

அதிரடிப்படை வீரர்களும் நானும் சேர்ந்து கரை ஒதுங்கிய தோணியைப் பயன்படுத்தி 100க்கும் மேற்பட்ட வர்களைக் காப்பாற்றினோம். துடுப்புகள் இன்றி கைகளால் வலித்தே நாங்கள் கரைசேர்ந்தோம். அதற்குப் பின்னரே எனது தாய் தெய்வானையும் சகோதரி மீனாட்சியும் சடலமாக ஒதுங்கியது தெரியவந்தது."

## ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் :

(சுனாமி அனர்த்தத்தை அடுத்து இலண்டனிலிருந்து அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றுக்கு ஜனவரி 2 - 10 வரை சென்று உதவிப்பணிகளில் ஈடுபட்ட நூலாசிரியை.)

"அம்பாறை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு உள்ளது. நான் அங்கு இருக்கும் போது இறந்தவர்களின் தொகை 10,000க்கும் அதிகம் எனக்கூறினர். தெற்கில் காலியும் வடக்கில் முல்லைத்தீவும் பேசப்பட்ட அளவுக்கு அம்பாறையின் அவலம் வெளிவரவில்லை. இன்னும் சொல்லப் போனால் 25 வருடம் வடக்கு கிழக்கு இணைந்த தமிழீழம் கேட்டு போராடினோம். ஆனால் அம்பாறையில் தமிழர்கள் வாழ்வது புலம்பெயர்ந்த பலருக்குத் தெரியாது.

சுனாமி அலைகளின் வேகத்தில் உடலில் ஒட்டுத்துணியும் இல்லாமல் உடல்கள் காணப்பட்ட போது அப்பகுதிகளில் இருந்த எஸ்ரிவ் படைவீரர்கள் தமது சீருடைகளை போர்த்துவிட்டதாக மக்கள் கூறுகின்றனர். அம்பாறைக்கு அயல் மாவட்டமான மொனராகலையில் இருந்து சிங்கள மக்களே முதலில் சீனிசம்பலும் பாணும் கொண்டு வந்தனர். முஸ்லீம்கள் பருப்பும் சோறும் வழங்கினர். மேலும் தமிழ், முஸ்லீம் கிராமங்களுக்கு தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் லொறிகளில் சிங்கள மக்கள் வந்துள்ளனர். அவர்கள் நிவாரணப் பொருட்களை வழங்கியதுடன் மீட்புப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர். ஜேவிபி யினர் மருதமுனை, சாய்ந்தமருது, திருக்கோயில் ஆகிய பகுதிகளில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். கோமாரியில் மக்களைத் தங்க வைக்க முகாம் அமைத்த எஸ்ரிவ் படையினர் தமது உணவுப்பொருட்களை மக்களுக்கு வழங்கியுள்ளனர்.

அங்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அநாவசியமான பதட்டத்தை உருவாக்குகிறது. நிவாரணப் பணிகளை தாமதப்படுத்துகிறது. ஏற்கனவே நொந்து போயுள்ள மக்களுக்கு மேலும் கஸ்டத்தை ஏற்படுத்துகிறது. மக்க ளுக்கு வழங்கப்படாமல் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சேமிப்பில் இருந்த உணவுப் பொருட்களை மக்கள் பலவந்தமாக பறிக்க வேண்டிய அவலங்களும் ஏற்பட்டு உள்ளது. இதற்குள் பிள்ளை பிடிப்பும் நிகழ்கிறது."

## வைத்திய நிபுணர் :

(சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த டிசம்பர் 26 முதல் ஜனவரி 2 வரை முல்லைத்தீவு, பளை, இயக்கச்சி ஆகிய பிரதேசங்களில் மருத்துவப் பணியாற்றிய இதய வைத்திய நிபுணர். வி.புலிகளின் மருத்துவக்குழுவிலும் பணியாற்றியவர். அவர் பெயரை வெளிப்படுத்த விரும்பவில்லை.)

"எனது மருத்துவக் குழுவில் இருந்த ஒரே தமிழர் நான் மட்டுமே. ஏனையவர்கள் அனைவரும் சிங்களவர்கள். அவர்களின் சேவை மிகவும் பாராட்டப்பட வேண்டும்.

மீட்புப் பணிகளில் விடுதலைப் புலிகள் உள்ளூர் மக்களுடன் இணைந்து திறம்பட செய்தனர். தற்போது பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிவாரணம் வந்து சேர்கிறது. தமிழர் பிரதேசங்களுக்கான விநியோகம் திட்டமிட்ட முறையில் தடுக்கப்படவில்லை. உடை, உணவு என்பன போதிய அளவு கிடைக்கின்றது. சில தனிப்பட்ட வழிமறிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம். ஆனால் நீண்டகாலத்தில் உதவிகள் பகிர்ந்தளிக்கப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

தமிழ் பிரதேசங்களில் புலிகளின் நிர்வாகம் கடந்த பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. தமிழ் பகுதிகளில் அரச அதிகாரிகளும் புலிகளுக்கு கட்டுப் பட்டே செயற்படுகின்றனர் எனவே இதில் அரசு நிவாரணப் பணிகளைச் செய்யவில்லை என்பது நியாயமற்றது."

# ஸ்ரீ அன் கோவை நம்ப நீதிமன்றம் தயாரில்லை

பிழையான காரணங்களுக்காக எம் கே ஸ்ரீ அன் கோ அண்மைக்காலமாகப் பிரபல்யம் அடைந்து வருகிறது. ஸ்ரீ அன்கோவின் நம்பகத்தன்மையை சந்தேகப்படுவதற் கான காரணங்கள் போதுமானதாக இருப்பதாக ஸ்ரீ அன்கோ, Law Society க்கு எதிராக தொடுத்த வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதி தெரிவித்து உள்ளார். ஸ்ரீ அன்கோவின் நம்பகத்தன்மை சந்தேகத்துக்கு உள்ளான தை அடுத்து Law Society இந்நிறுவனத்தின் மீது தலையீடு செய்து, 1974 Solicitors Act சட்டத்தின் கீழ் இந்நிறுவனம் இயங்குவதைத் தடை செய்துள்ளது. Law Society யின் இம்முடிவு தவறு என ஸ்ரீ அன்கோ உயர்நீதி மன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்தது. டிசம்பர் 10 ல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இவ்வழக்கில் Law Society எடுத்த நடவடிக்கை சரியானது என நீதிபதி ஹாட் தீர்ப்பளித்துள்ளார்.



ஹரோவில் இயங்கும் இந்நிறுவனம் 9,000 பேரை சட்டப் பிரதிநிதித்துவம் செய்கிறது. பெரும்பாலும் தமிழ் மக்களையே பிரதிநிதித்துவம் செய்யும் இந்நிறுவனத்தில் 32 பேர் பணியாற்றுகின்றனர். கணபதிப்பிள்ளை ஸ்ரீதரன் இந்நிறுவனத்தின் உரிமையாளர். சிவகலாநிதி சிவசந்திரன் சம்பளம் பெறும் பங்காளியாக உள்ளார். இவ்வழக்கில் வாதிகளான ஸ்ரீ அன் கோவினர் கணபதிப்பிள்ளை ஸ்ரீதரனையும் சிவகலாநிதி சிவ சந்திரனையும் Thakrar & Co சார்பில் கியூசி மன்ஜித் சிஞ் கில் மற்றும் கெனத் ஹமர் ஆகியோர் பிரதிநிதித் துவப்படுத்தினர். பிரதிவாதியான Law Society யை Wright Son & Pepper சார்பில் நிக்கலஸ் பீகொக் வாதிட்டார்.

Office for the Supervision of Solicitors (OSS) அமைப்பின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரிகள் நிக்கலஸ் அயர்லனட், சாரா ரெய்லர் ஆகியோர் 2004 நவம்பர் 9ல் ஸ்ரீ அன்கோவின் கணக்கியல் கோவைகளை சோதனையிட்டனர். ஒன்பது நாட்கள் நீடித்த சோதனைகளின் போது இந்நிறுவனம் பிரதிநிதித்து வப்படுத்துபவர்களின் வங்கிக்கணக்கில் (Client Account - கிளைன்ட் எக்கவுன்ட்) £1.2 மில்லியன் பவுண்கள் குறைந்திருந்தது. மேலும் 2002 யூலை முதல் கிளைன்ட் எக்கவுன்டில் இருந்து அலுவலகக் கணக்குக்கு (ஒபிஸ் எக்கவுன்ட்) பெரும் தொகைப் பணம் மாற்றப்பட்டு இருந்ததும் தெரியவந்தது.

சட்ட நிறுவனங்கள் இரு கணக்குகளைக் கொண்டி ருக்கும். ஒன்று கிளைன்ட் எக்கவுண்ட் மற்றையது ஒபிஸ் எக்கவுண்ட். வீட்டு விற்பனை மற்றும் முதலீடுகளுக்கு கிளைன்டினால் வழங்கப்படும் பணம் கிளைன்ட் எக்கவுண்டில் வைக்கப்படும். இது மிக மிக நம்பிக்கைக்கு உரியது. கிளைன்ட் எக்கவுண்டில் கை வைத்தால் அந்நிறுவனம் அதன் நம்பகத்தன்மையை இழப்பதுடன் தொடர்ந்து செயற்படுவதற்கான தகைமையையும் இழக்கி றது. மற்றையது ஒபிஸ் எக்கவுன்ட் சட்டநிறுவனத்துக்கான வங்கிக்கணக்கு. சட்டநிறுவனம் தனது சேவைகளுக்காக கட்டணத்தை அறவிடும் போது அதற்கான செலவுச்சீட்டை ( invoice ) ஆவணப்படுத்தி கிளைன்ட் எக்கவுன்டில் இருந்து பணத்தை ஒபிஸ் எக்கவுன்டுக்கு மாற்ற முடியும். இந்த நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படு வது மிக மிக அவசியம்.

ஆனால் உரிமையாளர் ஸ்ரீதரன் இந்நடைமுறைகள் எதனையும் கடைப்பிடிக் காமல் கிளைன்ட் எக்கவுண்டில் இருந்து பணத்தை ஒபிஸ் எக்கவுண்டுக்கு மாற்றி தனது சொந்த நோக்கங்களுக்கு பயன் படுத்தியுள்ளார். மேலும் ஸ்ரீதரன் சட்ட உதவியில் மோசடி செய்ததை அடுத்து அவருடனான சட்ட உதவி ஒப்பந்தத்தை உள்துறை அமைச்சு முறித்துக் கொண்டது. அதனால் ஸ்ரீ அன்கோ வின் ஒபிஸ் எக்கவுன்ட் இன்னும் பலவீனமானது. கிளைன்ட் எக்கவுண்டில் துண்டு விழுந்தது. செப்ரம்பர் 30 2004ல் கிளைன்ட் எக்கவுண்டில் £1.7 மில்லியன் பவுண் (£ 1,671,015.19) குறைந்திருந்தது.

துண்டு விழும் தொகையைக் குறைக்க தனது வீடொன்றை remortgage செய்து £550,000.00 யை கிளைன்ட் எக்கவுன்டில் போட்டுள்ளார் ஸ்ரீதரன். பின்னர் இன்னுமொரு remortgage செய்து £676,613.00 யை போட்டுள்ளார். இதன் போது வாங்குபவரினதும் விற்பவரினதும் சட்ட அலுவலை நடத்திய ஸ்ரீ அன்கோ ஏற்கனவே இருந்த mortgage தொகை £340,000.00யை கணக்கில் சேர்க்கத் தவறிவிட்டனர். அதனால் துண்டு விழும் தொகையும் அதே அளவால் அதிகரித்தது.

ஸ்ரீ அன்கோவைப் பிரதிநிதித்துவப்படுத்திய கியூசி கில் ஸ்ரீதரன் கிளைன்ட் எக்கவுண்டுக்கு பணத்தைப் போட்டு துண்டு விழும் தொகையை குறைக்க முற்பட்டதை ஸ்ரீதரனுக்கு சாதகமாக பயன்படுத்த முற்பட்டார். நம்பகத்

தன்மை பாதிக்கப்பட்டுள்ளது என்று சந்தேகப்படுவ தற்கான காரணங்கள் போதாது என அவர் தெரிவித்தார்.

இது பற்றி தீர்ப்பில் குறிப்பிட்ட நீதிபதி நம்பகத் தன்மையை சந்தேகிப்பதற்கான காரணங்கள் திருப்திகர மாக இருப்பதாகக் குறிப்பிட்டார். கிளைன்டின் பணத்தை தனி வங்கிக் கணக்கில் வைப்பது என்பது சட்டத்தரணிக ளின் கணக்கியல் விதிகளில் அடிப்படையானது என நீதிபதி குறிப்பிட்டார். மேலும் இந்த விதிகள் தெரிந்து கொண்டு, வேண்டுமென்றே மீறப்பட்டு உள்ளதாகவும் நீதிபதி குறிப்பிட்டு இருந்தார்.

கியூசி கில், ஸ்ரீதரன் கிளைன்ட் எக்கவுண்டுக்கு பணத்தைப் போட்டு அதனை சரிப்படுத்த முயற்சித்ததைச் சுட்டிக்காட்டி இருந்தார். தீர்ப்பில் அது பற்றிக் குறிப்பிடும் போது நேர்மையான மனிதராக இருந்திருந்தால் கிளைன்ட் எக்கவுண்டில் இருந்து சொந்த தேவைக்கு பணத்தை எடுக்காமல் ஆரம்பத்திலேயே தனது சொந்தப் பையில் இருந்து பணத்தை எடுத்திருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் தனது குறித்த சேவைக்காக ஸ்ரீதரனால் எடுத்துக் கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் தொகையும் நேர்மையானது அல்ல எனத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மேலும் Law Society இன் இந்நடவடிக்கையால் ஸ்ரீ அன்கோவால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் பல தஞ்ச வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் திருப்பி அனுப்பப்படும் அபாயம் இருப்பதாகவும் கியூசி கில் வாதிட்டார். அத்துடன் அலுவலர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் கியூசி கில் சுட்டிக்காட்டினார். இது பற்றி நீதிபதி குறிப்பிடுகையில் ஸ்ரீ அன்கோ தமிழர்களையே பெரும்பாலும் பிரதிநிதித் துவப்படுத்துகிறார் என்றும் தமிழர்களின் வழக்குகளில் தேர்ச்சி பெற்ற சட்டநிறுவனங்கள் அப்பகுதியில் இருப்பதால் ஸ்ரீ அன்கோ பிரத்தியேகமானது என்று குறிப்பிட முடியாது எனத் தெரிவித்தார். இக்காரணங்க ளின் அடிப்படையில் Law Society இன் தலையீட்டை யும் ஸ்ரீ அன்கோ மீதான தடையையும் தொடரத் தான் அனுமதிப்பதாக நீதிபதி தெரிவித்தார். இவ்வழக்கு Royal Courts of Justiceல் இடம்பெற்றது

பொதுவாக சட்ட நிறுவனங்களின் மீது Law Society மிக அருமையாகவே நடவடிக்கை எடுக்கும். இவ்வாறான நடவடிக்கைகளின் போது Law Society மிக ஆணித்தரமாகவே இருக்கும். ஸ்ரீ அன்கோவைப் பொறுத்தவரை அது மூடப்பட்டது ஒரு கௌரவப் பிரச்சினையாகிவிட்டது. ஆகவே ஸ்ரீ அன்கோவின் சட்ட நடவடிக்கைகள் தொடரும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.


**Low Cost Accomodations in London**

**LANGORF HOTEL & APARTMENTS**

20 Frognal, Hampstead, London, NW3 6AG

**Flats**
**Studios**
**Rooms**
**Hostels**

**Accomodation available form 1 day to 1 year**

**Accomodation for families or singles**

**We have various accomodation to fit your budget.**

**No DSS**

Tel : 079 1944 4994
Fax : 020 7281 6904

Email : tarrin@desilugroup.com
Web : www.desilugroup.com

Tarrin Constantine, Group Finance Director, Desilu Group of companies
Mercers Rd, London N19 9PU.

சுந்தரம் இப்போது யாரிடமும் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. குஷியும் கும்மாளமாகவும், கலகலப்பும் கலாட்டாவாகவும் இருந்த அவனது இயல்பான சுபாவம் கடந்த ஆறு மாதங்களாக முற்றாக மாறிவிட்டது.

வீட்டில் மனைவியோடு எரிந்து விழுந்தான். நண்பர்களைத் தவிர்த்தான். தனிமையை நாடினான். பிள்ளைகளோடு சிரித்துப் பேசியோ, கும்மாளமடித்தோ நாட்கள் பலவாகிவிட்டன. மனைவியோடு கொஞ்சிக் குலாவி மாதங்களாயின. உணவில் நாட்டமில்லாது உடல் மெலிந்து கொண்டே போயிற்று. அவனுக்குப் பிடித்தமான தொலைக்காட்சி நாடகத் தொடரைப் பார்ப்பதை நிறுத்திக் கொண்டான். காலையில் வெளியே வேலைக்குப் போய் மாலையில் வீடு திரும்பியதும் படுக்கையில் போய் விழுவான். படுக்கையில் நித்திரையின்றிப் புரண்டு கொண்டிருப்பான்.

சுந்தரம் இலங்கையின் போர்க்காலச் சூழ்நிலையில் - வேலை ஏதும் கிடைக்காத நிலையில் - இங்கிலாந்துக்குப் புலம்பெயர்ந்து வந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களில் ஒருவன். இங்கே ஒரு பெற்றோல் ஸ்டேஷனில் காசாளராக வேலைபார்த்து வருகிறான். "பிறக்க ஒரு நாடு, பிழைக்க ஒரு நாடு" என்ற கதைதான். சிறுகச் சிறுக சேர்த்து சிறிய வீடு வாங்கிக் கொண்டான்.

8 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைக்குச் சென்ற சமயம் சுசீலாவைத் திருமணம் செய்துகொண்டு திரும்பினான். கிடைத்த வருமானத்தை கவனமாகச் செலவிட்டு வாழ்க்கை சந்தோஷமாகக் கழிந்தது. இரு பிள்ளைகள் பிறந்தார்கள். ரவி 7 வயது. ராதிகா 5 வயது. குடும்பம் பெரிதாக செலவுகளும் அதிகரித்தன. செலவைச் சமாளிப்பதற்காக சுசீலாவும் நகரத்திலுள்ள "சுப்பர் மார்க்கெட்டில்" வேலை பார்க்க வேண்டியதாயிற்று.

ஆறு மாதங்களுக்கு முன்னர் சுந்தரத்தின் வயதான தாயார் யாழ்ப்பாணத்தில் காலமாகியிருந்தார். பணக் கஷ்டத்தால் அவனால் இலங்கை சென்று அவரது இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள முடியவில்லை.

சுந்தரத்தின் மாறிவரும் போக்கை அவதானித்த சுசீலா, சுந்தரத்தை வற்புறுத்தி டாக்டரிடம் அழைத்துச் சென்றாள். டாக்டர் அவனை ஒரு மனநல மருத்துவரைப் பார்க்கும்படி அனுப்பிவைத்தார். சுந்தரத்தைப் பரிசோதித்த மனநல மருத்துவர் அவனுக்கு மனச்சோகம் (Depression) என்ற மனோவியாதி பீடித்திருப்பதாகக் கூறி அதற்கான சிகிச்சை பெறுவதற்கு ஏற்பாடு செய்தார்.

எம்மில் பலருக்கும் சுந்தரம் குடும்பம் பரீட்சயமானவர்கள். இவ்வுளவியல் கட்டுரை பலருக்கும் உதவும்.

# இருண்ட எதிர்காலம்



கலாநிதி
எஸ் தியாகராஜா

## மனச்சோகம் (Depression, Melancholia) :

உலக மக்கள் தொகையில் இருபது சத விகிதத்தினர் தமது வாழ்நாளில் ஒரு தடவையாவது இந்த நோயினால் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கணிப்பு மனச்சோகம் எவ்வளவு சாதாரணமாகக் காணப்படும் மனநோய் என்பதைக் காட்டுகிறது.

பொதுவாக எதிர்பாராத அதிர்ச்சிதரும் துயர சம்பவங்கள், சாவுகள் என்பன எவர் மனத்தையும் சோகத்தில் ஆழ்த்தும் தன்மை கொண்டவை. ஆனாலும் ஓரிரு மாதங்களில் இவர்கள் தம் சுயநிலைமைக்குத் திரும்பிவிடுவார்கள். பொதுவாக இயல்பான சோகம் ஒரு மாத காலத்திற்கு மேல் நீடிப்பதில்லை.

ஆனால் மனச்சோகம் இரண்டு மாதங்களுக்கும் மேலாக சிகிச்சை பெறாவிட்டால் மாத, வருடக்கணக்காக நீடிக்கும்போது அது மனநோய் என்கின்ற பரிமாணத்தைப் பெறுகின்றது.

## மனச்சோகத்திற்கான காரணிகள் :

மனச்சோகத்தை ஏற்படுத்தும் காரணங்கள் பல. அவை ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் பலவகையான உருவங்களில் வருகின்றன.

### 1. எதிர்பாராத அதிர்ச்சிதரும் நிகழ்வுகள்.

போர்க்கால அகாலங்கள், இனக்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட மக்கள், பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்ட பெண்கள், எதிரிகளால் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்ட இளைஞர்கள், எரிக்கப்பட்ட உடைமைகள் என்பன.

### 2. வாழ்க்கைப் பிரச்சினைகள்.

கொடுமையாக நடத்தப்படும் பெண்கள், வேலையில் துன்பம் அனுபவிக்கும் தொழிலாளி, அரசியல் காரணங்களுக்காகப் பழிவாங்கப்படும் ஏழை மக்கள், குடும்பச் சுமைகளைத் தாங்கமுடியாத குடும்பத் தலைவன், விவாகரத்தான பெண்கள் முதலியோர்.

### 3. மன அழுத்தம் தரக்கூடிய சம்பவங்கள்.

எதிர்பாராத சாவுகள், இழப்புக்கள், அழிப்புக்கள், எரிப்புக்கள் போன்றவை.

### 4. மரபுவழிக் காரணங்கள்

மனச்சோகம் சில குடும்பங்களில் மரபுவழியாக, பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்கு தொடர்வழியாக ஏற்படுகின்றது. மனச்சோகத்தைத் தரக்கூடிய மரபணுக்களை இவர்கள் கொண்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

### 5. இளமையிற் பிரிவு.

இளமையிற் பெற்றோரைப் பிரிந்த பிள்ளைகள், பெற்றோரால் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள், மாற்றாந் தாயிடம் கொடுமை அனுபவித்த பிள்ளைகள் பலர் பிற்காலத்தில் மனச்சோகத்தினால் அவதிப்படுவர்.

### 6. மனித மூளையின் அமீன் குறைபாடுகள்.

நமது மூளையிலுள்ள ஸீரொரோனின் (Serotonin), நோர்-அட்றினலின் (Nor-Adrenaline) ஆகிய அமீன்கள் நமது மனநிலையைச் சீராக வைத்திருக்க உதவுகின்றன. இந்த அமீன்களில் ஏதாவது குறைபாடு இருப்பின் மனநிலை பாதிக்கப்பட்டு மனச்சோகம் ஏற்படுகின்றது.

அமீன் குறைபாடு இருவகையாக ஏற்படுவதுண்டு.
1.பிறப்பிலிருந்தே உள்ள அமீன் குறைபாடு
2.மேற்கூறப்பட்ட காரணங்களைத் தொடந்து ஏற்படும் மனத்தாக்கத்தினால் (Stress) உண்டாகும் அமீன் குறைபாடு.

மனச்சோகத்திற்கான நிவாரணம் வேண்டி உட் கொள்ளப்படும் மருந்துகள் இந்த அமீன்களை சமநிலைக்குக் கொண்டுவர உதவிசெய்கின்றன.

## மனச்சோகத்திற்கான நோய் அறிகுறிகள் :

### 1. துன்பமான மனோநிலை (Sadness)

இவர்களது துன்பமான மனோநிலை - சோர்வடைந்த மனநிலையிலிருந்து (Low mood), ஆழ்ந்த சோகம் வரை (Profound sadness) நோயின் கடுமைக்கேற்ப மாறுபடும்.

காலையில் விழித்தெழும் பொழுதே இன்னொரு நாளை எதிர்கொள்வது அச்சம் தரும். தினமும் இவர்களது மனநிலை சோகம் பொதிந்ததாகவே இருக்கும்.

### 2. இன்பம் பெற இயலாமை

இன்பம் தரக்கூடிய காரியங்களில் மனம் ஈடுபட மறுக்கும். முன்னொரு காலத்தில் இன்பம் தந்த இசை, சினிமா, விளையாட்டு, போன்ற கேளிக்கைகளோ களியாட்டங்களோ இன்பம் தராது.

### 3. பசியின்மை - பெரும்பசி

மனச்சோகம் கொண்டவர்களுக்குப் பசியிருக்காது. உணவில் விருப்பமிருக்காது. உணவுட் கொள்ளாமல் உடல் மெலிந்து போவார்கள். எடை குறையும்.

ஒரு சிலருக்கு உணவு ஒன்று தான் அவர்களது சோகத்திற்கான கொழுகொம்பாக - ஆதார சுருதியாக - ஆதார சுகமாக (comfort eating) இருக்கும். இவர்கள் அதிக உணவு உட்கொண்டு எடை கூடுவார்கள்.

### 4. நித்திரையின்மை

மனச்சோகம் கொண்டவர்களால் இரவில் நிம்மதியாக நித்திரைசெய்ய இயலாது. படுக்கையில் நித்திரையின்றிப் புரண்டுகொண்டேயிருப்பார்கள். அதிகாலையில் கண்விழித்து நித்திரையின்றிச் சோர்ந்த உடலுடனும் உள்ளத்துடனும் காணப்படுவர்.

### 5. மனப்பதட்டம், பொறுமையின்மை (Restlessness)

இவர்களுக்கு சோகமான மனோநிலையுடன் அங்கலாய்ப்பு, பரிதவிப்பு, மனப்பதட்டம் (Anxiety, Agitation) ஆகிய அறிகுறிகளும் சேர்ந்திருக்கும். எந்த விடயத்திலும் எவ்விதமான தீர்மானத்திற்கும் வரஇயலாமல் தவிப்பார்கள். அமைதியாக இருக்க முடியாமல் அங்கும் இங்கும் அலைந்த வண்ணமோ, கைகளைப் பிசைந்த வண்ணமோ இருப்பார்கள்.

### 6. உள் அடக்கம் (Retardation)

ஒருசிலர் உடலும் உள்ளமும் சோர்ந்துபோய் தன்னுள்ளே அடக்கமாகி (Psychomotor retardation), எந்நேரமும் படுக்கையிலேயே இருப்பார்கள்.

### 7. உடற் களைப்பு

உடல் களைப்புற்று, சோர்ந்து, எவ்விதமான தேக வேலைகளும் செய்ய இயலாத நிலை ஏற்படும். குடும்ப உறவில் அக்கறையிருக்காது. வீட்டைவிட்டு வேலைக்குப் போக உடல்நிலை இடம்தராது.

### 8. கவனக் குறைவு

மனச்சோகம் கொண்டவர்களால் மனதை ஒன்று படுத்தி செய்யும் வேலையில் கவனம் செலுத்த முடியாது. (Lack of concentration), இதன் காரணமாக வேலையில் பல தவறுகள் ஏற்படலாம். கவனம் செலுத்த முடியாமையால் ஞாபகசக்தி குறையும். சமீபகால நிகழ்வுகள் நினைவில் நிற்காது. (Poor short-term memory)

### 9. இருண்ட எதிர்காலம்

எதிர்காலம் இருண்டுபோய் விட்டதாக எண்ணி, தன்னால் எவருக்கும் எந்தவித உபயோகமும் இல்லை என்ற நிலைப்பாடு (Sense of Worthlessness) கொண்டு தன்னைத் தானே நொந்து கொள்வார்கள் தான் ஒரு பற்றாக்குறையாக (inadequate), உதவாக்கரையாக (Useless), விமோசனமற்ற (hopeless) பிறவியாக இருப்பதாக எண்ணுவார்கள். வாழ்க்கை வெறுமையாகி அவர்கள் செயலிழந்து, பொம்மையாக நிற்க (Depersonalisation) — வாழ்க்கை

## சுனாமி ஏற்படுத்திய இருண்ட காலம்

டாக்டர் மைதிலி ஜெயசுந்தரம் :

(லண்டனில் இருந்து சென்று மட்டக்களப்பில் நாவலடி, முகத்துவாரம், டச் பார், கல்லடி முகத்துவாரம், அமிர்தகழி ஆகிய பரிதேசங்களில் ஜனவரி நடுப்பகுதி வரை உளவியல் பணிகளில் ஈடுபட்டவர்.)

சுனாமி தாக்கி மாதம் ஒன்றாகிவிட்டது. ஆனால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் அந்தக் கொடூர நிகழ்வில் இருந்து மீளவில்லை. கவலையான மனநிலையில் இருந்து தற்கொலை செய்யும் அளவுக்கு அவர்களது உள்ளம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. சிதைந்துள்ளது. இவர்கள் இழுந்து தவிப்பது தமது அன்புக்குரிய உறவுகள். ஈடுசெய்ய முடியாத இழப்புகள்.

இவர்கள் சாதாரணமாக இடம்பெயர்ந்தவர்களல்ல. இவர்களை மென்மையாகக் கையாள வேண்டும். ஆனால் அங்கு நிலமைகள் அவ்வாறில்லை. பரும்பும் சோறும் மட்டும் தான் கிடைக்கக் கூடியதாகவுள்ளது. உள்ளம் சிதைந்த இம்மக்கள் அங்கும் இங்குமாக அலைக்களிக்கப் படுகிறார்கள். முகாம்கள் மாற்றப்படும் போது சொந்த பந்தங்களுடன் சேர்த்தே அவர்களை மாற்ற வேண்டும். அபபோது தான் அவர்கள் தங்கள் துயரத்தை சொந்த பந்தங்களுடன் பகிர்ந்து தங்களை ஆற்றுப்படுத்த முடியும்.

தம் குழந்தைகள் அனைவரையும் இழந்த பல தாய்மார்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டுள்ளனர். இவர்கள் இப்போது மருத்துவர்களிடம் பிள்ளைவரம் கேட்கின்றனர். மேலும் சிறார்களின் மனநிலைமையும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. உடனடியாக இவர்களுக்கு வேண்டியது ஆறுதல். அரவணைப்பு. வாழ்க்கை பற்றிய நம்பிக்கை.

இவர்களுக்கான நிவாரணமும் புனர்வாழ்வும் உளவியலுடன் இணைக்கப்பட வேண்டும். அதனை வழங்கக் கூடிய பயிற்சி பெற்றவர்கள் தாயகத்தில் மிக அரிது இத்துறையில் உள்ளவர்கள் தமது உதவிக் கரத்தை வழங்குவது மிக அவசியம்.

அவர்களை விட்டுவிட்டு வெகுதூரம் போய்விட்டதாக உணர்வார்கள்.

### 10. தற்கொலை பற்றிய எண்ணங்கள்

இவர்கள் இறப்பைப்பற்றி அடிக்கடி நினைத்துக் கொள்வார்கள். தன்னைத் தானே வருத்தித் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவார்கள்.

## சிகிச்சை முறைகள் :

### 1. மருந்து வகைகள்

மனச்சோகத்தினால் அவதிப்படுபவர்களுக்கு நிவாரணம் தரக்கூடிய மருந்துவகைகள் இக்காலத்தில் ஏராளமாக வெளிவந்திருக்கின்றன. இவற்றை குடும்ப மருத்துவரிடமிருந்தோ (General Practitioner) அல்லது மனநல மருத்துவ ஆலோசகரிடமிருந்தோ (Psychiatrist) பெற்றுக்கொள்ளலாம்.

முக்கியமான சில மருந்துவகைகள்:

- ஸேட்ரலின் (Setraline)
- சிப்ரமில் (Cipramil)
- ஃபுளூ ஒக்சிரின் (Fluoxetine or Prozac)
- வென்லஃபக்ஸின் (Venlafaxine)
- அமிரிப்ரிலின் (Amitriptyline)
- புரோதயடின் (Prothiaden)
- பெனெல்ஸின் (Phenelzine)

### 2. மின்காந்த சிகிச்சை (Electro Convulsive Therapy)

தீவிர மனச்சோகத்தினால் பாதிக்கப்பட்டு தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கும், ஆகாரமேதும் உட்கொள்ளாது பட்டினியால் வாடுபவர்களுக்கும் அவர்களை உயிராபத்திலிருந்து காப்பாற்றும் முகமாக கொடுக்கப்படும் சிகிச்சை இது.

## சில ஆலோசனைகள் :

### 1. தேற்றும் பேச்சு

மனச்சோகம் கொண்டவர்களிடம் குடும்பத்தவரும், நண்பர்களும் அனுதாபத்துடன் நடந்துகொள்ள வேண்டும். அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளை விசாரித்தறிந்து - நல்லெண்ணம் ஏற்படும்வகையில் பேசி - அவர்களுக்கு ஆறுதல் கூறவேண்டும். அவர்களைக் கேலிசெய்தோ, கிண்டல் பண்ணியோ பேசக்கூடாது.

தங்கள் பிரச்சினைகளில் பங்குபோட்டுக்கொள்ள சில மனிதர்கள் இருக்கிறார்களே என்ற நம்பிக்கையே இந்நோயாளர்களைக் குணப்படுத்த உதவும். நம்பிக்கையே மனித வாழ்வின் ஆணிவேர்.

### 2. மனோதத்துவ ஆலோசனை

மனச்சோகத்தால் பீடிக்கப்பட்டிருப்பவர்கள் அனுபவசாலியான ஒரு மனோதத்துவ ஆலோசகரை (Psychologist, Psychotherapist) பார்ப்பது நல்லது. நோயாளர்களின் உள்மனத்தில் என்ன இருக்கிறது என்பதை ஆழமாகப் பேசி வெளியில் கொண்டுவந்து பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அவர்கள் உதவுவார்கள்.

### 3. குடும்ப ஆலோசனை (Family Therapy)

கணவன்- மனைவிக்கிடையே உள்ள உறவுநிலைகளில் ஏற்படும் பிரச்சினைகளால் யாராவது ஒருவரின் மனோநிலை பாதிக்கப்படலாம். அவர்களுக்கிடையேயுள்ள ஆணவ நிலைகள் (Ego Problems), உறவினர் பிரச்சினைகள், பாலியல் உறவுகள் அவர்களின் மனோநிலைகளைப் பாதிக்கலாம்.

கணவனும் மனைவியும் மனம்விட்டுப் பேசி தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும். ஒருவரோடொருவர் மனம்விட்டுப் பேச இயலாவிட்டால் ஒரு குடும்ப ஆலோசகரைப் பார்ப்பது நல்லது. குடும்பம் மகிழ்ச்சியாக இருந்தாலே மனம் சம்பந்தப்பட்ட நோய்கள் தூரவிலகும்.

மாற்றக்கூடிய இம்மனோவியாதிக்கு ஆளானவர்கள் கட்டாயம் மனோவியல் ஆலோசகரை பார்ப்பது அவசியம்.

# மகுதூம் சாயபு

# ஆசிரியர் : சிங்கை நேசன்



ஜே எம் சாலி
சிங்கப்பூர் தமிழ் தொலைக்காட்சி.
சிங்கப்பூர் தமிழ் முரசு.
ஆனந்தவிகடன் முன்னாள் ஆசிரியர்

நல்ல பத்திரிகையாளர் எப்படி இருக்க வேண்டும்? என்று இலக்கணம் எதுவும் எழுதப்படவில்லை. ஆனால் இலக்குகள் உண்டு. கணனி, இணைய அனுபவம் இன்றைக்குத் தேவைப்படலாம். இவை இல்லாத ஒரு நூற்றாண்டுக்கு முந்திய காலத்தில்...?

முன்னோடி இலட்சிய தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர் சிங்கப்பூர், மலாயாவில் சரித்திரம் படைத்துள்ளார். கடல்கடந்த நாட்டில் தமிழ்ப் பத்திரிகை நடத்தி சாதனைச் சுவடுகளைப் பதித்திருக்கிறார்.

பத்திரிகை ஆசிரியர் நல்ல எழுத்தாளராகவும் இலக்கியவாதியாகவும் இருக்க வேண்டும். பலதுறை வித்தகராக, தேர்ந்த விமர்சகராக இருக்க வேண்டும். பன்மொழி அறிந்தவராக இருக்கவேண்டும். பல சமய, சமூகஞானம் பெற்றவராக இருக்கவேண்டும்.

இன்னும் என்னென்ன தேவையோ, அவை அனைத்திலும் தேர்ந்து முதிர்ந்த ஒரு பத்திரிகை ஆசான் மகுதூம் சாயபு, மறக்க முடியாதவர். சிங்கை நேசன், தங்கை நேசன் ஆகிய இதழ்களை 19ஆம் நூற்றாண்டில் நடத்தினார். அச்சகத்தையும் இயக்கினார். படைப்பாளர்கள் அணியை உருவாக்கினார்.

சோழமண்டலத்தைச் சேர்ந்த சி.கு.மகுதூம் சாயபு சிங்கப்பூரில் 1887 ஜுன் மாதம் சிங்கைநேசன் வார இதழைத் தொடங்கி சில ஆண்டு காலம் சிறப்பாக நடத்தியிருக்கிறார். சிங்கப்பூர் தேசிய நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுவரும் சிங்கைநேசன் இதழ்கள் சிந்தனைக்கு விருந்து படைத்துக் கொண்டிருக்கின்றன.

கடல்கடந்து திருக்குறளை பரப்பியவர் மகுதூம் சாயபு.
"தன் குற்றம் நீங்கி பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றமாகும் இறைக்கு"
இந்தக் குறள் தான் சிங்கைநேசன் வார இதழின் முதல் பக்கத்தை அலங்கரித்த முழக்க வாசகம்.

விக்டோரியா மகாராணி அரியணை ஏறிய ஐம்பதாம் ஆண்டு பொன்விழா கொண்டாட்டம் நடைபெற்ற நாட்களில் இந்த இதழைத் தொடங்கியதால் அதன் நினைவாகத் தாமே ஒரு குறளை எழுதி வாரம் தோறும் அச்சிட்டு வந்தார் மகுதூம் சாயபு.
"தேரும் விக்டோரியா சேர்ஜுபிலித் தினத்தை
சாரும் இப்பத்திரிகை தான்"
அவருடைய குறள் - குரல் இது!

பல இன, பல மொழி நாடு என்பதால் முதல் பக்கத்திலேயே தமிழிலும், ஆங்கிலத்திலும் சமர்ப்பணம், பத்திரிகையின் நோக்கம் பற்றிய விளக்கம். இரண்டாம் பக்கத்தில் கடவுள் வாழ்த்து.

"எக்காரியத்தைத் தொடங்கினும் அக்காரியம் இடையூறின்றி இனிது முடியும் பொருட்டு கடவுளை வாழ்த்துவது மரபாகலின் யாமும் கடவுளை வாழ்த்தி இப்பத்திரிகையை ஆரம்பம் பண்ணுதல் முறைமையாகும்" என்ற பீடிகையுடன் அவர் எழுதியுள்ளார்.

"சிங்கப்பூரிலே தமிழ் பாஷை பேசும் பல சாதியார் அனேகம் இருந்தும் மற்றைச் சாதியார்போல நமக்கென்று ஒரு பத்திரிகை இல்லாதிருப்பது ஏன்?" என்ற கேள்வியை எழுப்பி விடையாக விளக்கம் எழுதுகிறார் மகுதூம் சாயபு.

"முன்னர் பத்திரிகைகள் வெளிப்பட்டும் மடிந்து போயின ஆகவே, இதுவும் அப்படித்தானென்று சிலர் எண்ணுவார்கள். அவை மடிந்து போனதற்கு காரணம் நம்முடைய விளம்பரத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றோம். இம்முறை பொது நன்மைக்குரிய விஷயங்களை பிரசுரிக்கிறதேயொழிய தனித்தனி ஆட்களையிகழ்ந்தும் புகழ்ந்தும் வீண் காரியங்கள் வெளிப்படுத்தப்படா. படித்தவர்களும் படியாதவர்களும் வாசிக்க விளங்கத் தக்க பாஷையிலே எழுதி வருவோம்."

"எழுதிவரும் காரியங்கள் எவர்களையும் பிரியப்படுத்தவும் எழுப்பிவிடவும் முயற்சிபண்ணவும் சோம்பலினின்று விழிக்கவும் செய்ய கூடியளவு பிரயாசப்படுவோம். வாசிப்பவர்கள் அருவருத்து வெறுக்கத்தக்க காரியங்களை நீக்கிவிடுவோம்."

சிங்கை நேசனுக்கு இரண்டு நோக்கமுண்டு என மேலும் விளக்குகிறார் ஆசிரியர். பத்திரிகை எழுதுகிறவர் நோக்கம் ஒன்று, பத்திரிகைக்குக் கையொப்பராகி வாங்கி வாசிப்பவருடைய நோக்கம் மற்றொன்று எனக் குறிப்பிடுகிறார்.




"பேனாவைப் பிடித்து பத்திரிகை எழுதுகிறவர் தம்முடைய மனச்சாட்சிக்கு சற்றேனும் மாறாமல் பொதுநன்மையையே எப்போதும் நோக்கமாய்க் கொண்டிருக்க வேண்டும்."

"பத்திரிகை வாசிப்போர் பலராகையால் அவர்கள் நோக்கமும் பலவிதமாயிருக்கும். ஒருவருக்கு கசப்பிலேயே பிரியம். ஒருவருக்கு இனிப்பிலே பிரியம். ஒருவருக்குப் புளிப்பிலே பிரியம். ஒருவருக்குக் காயிலே பிரியம். ஒருவருக்குப் பழத்திலே பிரியம். எவ்வஸ்துவிலே பிரியமாயிருப்பினும் அவ்வஸ்து அவரவர் இரைப்பைக்கு இணங்கியதாகவும் சீரணிக்கத் தக்கதாகவும் இருக்க வேண்டும்."

"ஆகையால் வஸ்து எவ்வளவு ருசியுடையதாயினும் சீரணிக்கத் தக்கதோ என்று மாத்திரம் கவனிக்கவேண்டும். அதாவது ஒருவருக்கு விசேஷ நயங்கொடாவிடினும் பொதுவாகப் பார்க்கும்போது நன்மைக்குக் காரணமாகாதா என்று கவனித்தல் வேண்டும்."

ஆசிரியர் மகுதூம் சாயபு அடுத்து கையொப்பர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறார். யார் அந்த கையொப்பர்கள்? சந்தாதாரர்களைத் தான் அப்படி அழைக்கிறார்.

"கனவான்களே! நான் தங்களுக்கனுப்பிய விளம்பரத்திலே கையொப்பம் வைத்தனுப்பியதற்கு அனேக வந்தனம். இன்னும் தங்கள் இஷ்டர்களையேவி இந்த ஊரிலே இப்பத்திரிகையை வாங்கி வாசிக்கும்படி பண்ணுவதுங்கள் கடமை.

"இதுவரையில் 150 கையொப்பங்கள் வரையில் சேர்ந்திருக்கிறபடியால் இன்னும் அதிகம் சேருமென நம்பியிருக்கின்றோம். பத்திரிகையானது சீர்திருத்தத்திற்கு ஒரு முக்கிய கருவியாகவும் கல்விக்குக் காரணமாகவும், செல்வத்துக்கு வழியாகவும் இருக்கின்றதினாலல்லவா, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களிலே ஒரு பாஷையிலே ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் நாடோறும் வெளிப்படுகின்றன. அப்பத்திரிகையின் கிரயம் வருஷம் ஒன்றுக்கு **$30, $40, $50** ஆக இருக்க, வருஷம் ஒன்றுக்கு **$3** கொடுத்து தங்கள் சொந்த பாஷையிலே உள்ளூர், புறவூர் வர்த்தமானங்களை அறியவும், அவற்றிற்கிணைய நடப்பதும் எவ்வளவு பிரயோசனமாகும். ஆகையால் தயவுசெய்து தாங்கள் ஒவ்வொருவரும் இது தங்கள் சொந்தப் பத்திரிகையென்றே கருதி கைதூக்கிவிட வேண்டும்.

முதல் இதழில் வாசகர்களுடன் பல உணர்வுகளையும் செய்திகளையும் பகிர்ந்து கொண்ட மகுதூம் சாயபு, சிங்கைநேசன் இரண்டாம் இதழில் மேலும் பல சிந்தனைகளை சுவையாக எழுதினார். சந்தைப் பொருட்களின் விலை, புடவை விலை, பேங்க் நாணயமாற்று விகிதம். விளம்பரக் கட்டணம், வாசகர் கடிதம் எழுதும் முறை, சிங்கப்பூர் நடப்புகள், தலையங்கம் முதலான பகுதிகள் இதழை அலங்கரிக்கின்றன.

"... இன்னும் இரண்டு மூன்று கிழமைகளுக்குள்ளே இந்தியாவிலே நாகப்பட்டணம், நாகூர், காரைக்கால், தஞ்சாவூர், மதுரை, சென்னப்பட்டணம், யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலே இருந்துவரும் பிரதான சமாசாரங்களை அவ்வூரார்களே அறிய வேண்டியவற்றை விவரமாயெழுதி வருவோம்.

"...ஊர் நன்மைக்காகவே யாம் இதை ஆரம்பித்து இருப்பதால் நீங்கள் அனைவரும் இந்த நோக்கத்துடனே செய்ய வேண்டிய ஒழுங்குகளையும் தங்கள் அபிப்பிராயங்களையும் இடைக்கிடை எழுதி அனுப்புவீர்களாக."

பத்திரிகையாளர் மகுதூம் சாயபு 117 ஆண்டுகளுக்கு முன் எழுதிய வாசகங்கள் அவருடைய தனி முத்திரைகள்.

அவர் முன்னோடி இதழ் ஆசிரியர் மட்டுமல்லர். முன்னோடி எழுத்தாளர். கதாசிரியர். நாவல், கற்பனை என்ற சொற்களுக்கு விளக்கம் தந்து படைப்புக்களையும் வழங்கினார். அவை தனி அத்தியாயங்கள்!

## பத்திரிகைஇயலில் சில பொன் மொழிகள் :

**1. பத்திரிகை திருத்தப்பட வேண்டிய வரலாற்றின் முதற் பிரதி.**

**2. வரலாற்றினைப் பதிவு செய்யும் முதலாவது வரலாற்றாசிரியன் பத்திரிகையாளன்.**

**3. பத்திரிகைகள் சமுதாயத்தின் காவல் நாய்கள்.**

**4. உண்மையற்ற செய்திகள் உயிரற்ற செய்திகளாகும்.**

**5. பயிற்சியும் அனுபவமுமே முழுமையான பத்திரிகையாளனை உருவாக்கும்.**

**6. படம் சொற்களுக்காகப் பயன்படும் ஒரு மௌன மொழியாகும்.**

**7. பத்தாயிரம் சொற்கள் சொல்வதை ஒரு புகைப்படம் சொல்லிவிடும்.**

# இஸ்லாமிய பயங்கரவாதம் அமெரிக்காவுக்கு விருப்பமானது




தோழர் ச வேலு

மனிதகுல வரலாற்றில் எப்பொழுதுமே பயன் படுத்தாத மிகக் கொடூரமான வழிகள் மூலம் அமெரிக்கா ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தைக் கைப்பற்றி பல மாதங்கள் கடந்துவிட்டன. உலகைப் பலமுறை அழிக்கும் கொடிய ஆயதங்களை, உடைமையாகக் கொண்டிருக்கும் அமெரிக்கா, 12 ஆண்டுகளாக ஈராக் மீது பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது. அதன்மூலம் ஏற்பட்ட உணவு மற்றும் மருத்துவ முடக்கத்தினால் ஏற்கெனவே 1.5 மில்லியன் மக்களை படுகொலை செய்ததுடன், நிராயுதபாணியான ஈராக்மீது "ஆயுதங்கள் மேற்பார்வை" என்னும் பெயரில் ஐ.நா.சபையின் மூலம் ஈராக் வைத்திருந்த சில A1 சௌமன்ரக ஏவுகணைகளையும் கூட அழித்து அதன் இராணுவத் திறமைகளையும் பறித்தெடுத்து அந்நாட்டை செயலிழக்கச் செய்துள்ளது.

இந்நாட்டின் மீதான அமெரிக்க - பிரிட்டிஷ் ஆக்கிர மிப்பானது நம்பிக்கைத் துரோகம், வெடிகுண்டு வீசுதல், மக்களைப் படுகொலை செய்தல், மக்கள் தொடர்பு சாதனங்களின் பொய்ப் பிரச்சாரம் என்பவற்றின் மூலமாக பூர்த்தியடைந்தது. இக்கொடூரமான தாக்குதலை அமெரிக்கா ஆரம்பித்தபோது ஒரு சில மணி நேரங்களில் முடியாவிட்டாலும், ஒருசில நாட்களில் விரைவில் ஈராக்கைக் கைப்பற்ற முடியும் என எதிர்பார்த்தது. ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் எதிர்பாராத வகையில் ஈராக்கியர் களின் தீவிரமான எதிர்ப்பினால், ஆக்கிரமிப்பின் முதல் வார இறுதியில் கூட அவர்களால் எந்த நகரத்தையும் கைப்பற்ற முடியாமல் போயிற்று. இது ஆக்கிரமிப்பாளர்க ளுக்கு அதிக வெறுப்பூட்டுவதாக அமைந்தது. இதனால் அவர்களின் வழியில் குறுக்கீடாக இருந்த அனைத்தின் மீதும் வெடிகுண்டு வீச ஆரம்பித்தனர்.

ஆயிரமாயிரம் வெடிகுண்டுகள், மற்றும் ஏவுகணை கள் மூலம் அந்நாட்டின் அடிப்படைக் கட்டமைப்புகள், மருத்துவமனைகள், குடியிருப்பு கட்டிடங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதிகள், கழிவறைகள், உணவுக் கிடங்கு கள், தண்ணீர்க் குடியிடங்கள், மின்சார வளங்கள், மின் இணைப்புகள் ஆகியவற்றைத் தரைமட்டமாக்கி, ஈராக் தலைநகரை தூள் தூளாக்கி அடித்து நொறுக்கியதையும், நடைபாதைகளில் எல்லைக்கோடுகளில் தப்பியோடும் பொது மக்களையும் கொல்லும் அளவிற்கு கொடூரமாக



இருந்ததையும், உலகம் முழுவதும் உதவி செய்யவியலாமல் அவநம்பிக்கையுடன் பார்த்திருப்பது வேதனையானது.

இப்போரைப் பற்றி ஒருசில யதார்த்தத்தைப் பற்றி அறிவிப்பதில் தீவிரமாக இருந்த பத்திரிகையாளர்களைக் கூட ஆக்கிரமிப்புப் படைகள் விட்டுவைக்கவில்லை. அவர்களின் விடுதி அறைகளுக்கு வெடிகுண்டுவைத்து "நட்பான துப்பாக்கிச் சூட்டில்" அவர்களைக் கொன்றது.

ஒட்டுமொத்த மக்கள் மீதான இந்தப் படுகொலையின் பின்னணியில் அமைந்த அதன் மோசமான நோக்கம் உலகின் எந்தப் பகுதியிலுள்ள சாதாரண மக்களுக்கும் புரியும். ஈராக்கின் எண்ணெய் வளங்களைப் பறிப்பது, பொருளாதார நெருக்கடியில் இருக்கும் அமெரிக்க மக்களைத் திசை திருப்புவது, எந்தவிதத் தடையுமின்றி உலக அதிகாரத்தை நிறுவுவது போன்றவையே இவ்வாக்கிரமிப்புக்கான காரணங்களாகும். பெருமளவு அழிவிற்கான எந்தவித ஆயுதத்தையும் கண்டெடுக்காமல் மிகப்பெரிய பொய்யைக் கூறியதன் மூலம் இப்போரின் உண்மையான நோக்கம் வெளிப்படையாக தெரிகின்றது.

ஆங்கில - அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளுடன் சேர்ந்து சமூக விரோதிகள் மற்றும் அரசியல் ரவுடிகள் பாக்தாத் மற்றும் ஈராக் நகரங்களைக் கொள்ளையடித்தனர். தேசிய அருங்காட்சியகம், பழைய நாகரீகத்தின் விலைமதிப்பற்ற கல்வெட்டு, சுவடிக்கூடம் போன்றவைகூட சூறையாடப்பட்டன. இதுவே இவ்வாக்கிரமிப்புப் படைகளின் 21ஆம் நூற்றாண்டின் கொள்ளைப் பண்பாடாகும்.

அடாவடித்தனமான இத் தாக்குதல் போரை எதிர்த்து கண்டனங்களும், மாபெரும் போர் எதிர்ப்புப் போராட்டங்களும், இலட்சக்கணக்கான மக்கள் பங்களிப்புடன் உலகெங்கும் நடைபெற்றன. "அமெரிக்கர்களே உங்கள் நாட்டிற்குத் திரும்பிச் செல்லுங்கள்" என்னும் கோரிக்கையுடன் ஈராக்கிய மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சதாமின் ஒடுக்குமுறையான ஆட்சியிலிருந்து ஈராக் "விடுதலை" அடைந்துள்ளது என்று லண்டனிலும் வாஷிங்டனிலும் உட்கார்ந்துகொண்டு புதிய கருத்துக்கு வடிவம் கொடுத்துக்கட்டவிழ்த்து விடப்படும் பிரச்சாரத்திற்கு எந்த ஈராக்கியர்களும் ஏமாறமுடியாது. முதல் நகரமான "உம்குசாரை" கைப்பற்றியபின் அமெரிக்கக் கொடி ஏற்றியது முதல், சதாம் உருவச்சிலை மீது அமெரிக்கக் கொடியைச் சுற்றிப் போர்த்தியது வரை, ஆக்கிரமிப்பின் கடைசிக்கட்டமாகக் கூறப்பட்ட அமெரிக்க பீரங்கியொன்றினால் அமெரிக்க கொடியுடன் சதாம் உருவச்சிலை இடித்து வீழ்த்தியது வரை விடயம் தெளிவாகவே தெரிகின்றது. அமெரிக்கர்கள் பழைமைவாதப் பாணியில் காலனிமயமாக்குவதைக் குறிக்கோளாய் கொண்டுள்ளனர் என்பதும் தெளிவாகியுள்ளது.

வரலாற்றில் எந்தப் பெரிய நாடும் பலவீனமான நாடுகளை நீண்டகாலத்திற்கு காலனியாக வைத்திருப்ப

JR Universal Exchange
Foreign Exchange & Cheque Cashing

**JR Universal Exchange**
**10 Queensway, London W2 3RX**
(Opposite of Queensway Station, Central Line)

Don't lose your earnings in paying commission by exchanging. We never charge commission. Our rate makes the different. Better deal for large amounts. Visit us today and you will realise how much you could save with our exchange rates.

**தரகு கொடுப்பதனால் உங்கள் வருமானத்தை இழக்கத் தேவையில்லை.**
**ஏனெனில் நாம் தரகு எதுவும் பெற்றுக் கொள்வதில்லை.**
**உங்கள் நாணயங்களுக்கான உரிய பெறுமானத்தை வழங்குவதில் எமது அணுகுமுறை வேறானது.**

**எந்த அளவு பணமும் கைமாற்றப்படலாம்.**
**ஒரு முறை விஜயம் செய்து எமது அணுகுமுறையை தேர்ந்து கொள்ளுங்கள்**

We open 7 days a week, from 8:30 a.m - 10:00 p.m

Tel : 020 7243 1884
Mobile : 07956 305 870 (Ravi)

**யுத்தமும் மனிதமும் :**

1.1890 - 2001 அமெரிக்கா ஆரம்பித்த யுத்தங்கள் 134

2. அமெரிக்காவின் தலைமையில் ஈராக்குக்கு எதிரான பொருளாதாரத் தடையால் கொல்லப்பட்ட 5 வயதுக்குக் குறைந்த சிறார்கள் 500,000

3. வளைகுடா யுத்தத்தில் சரணடைந்த ஈராக்கிய வீரர்கள் அமெரிக்கத் துருப்புக்களால் கொல்லப்பட்டனர். அவர்களின் எண்ணிக்கை 150,000

4. அமெரிக்கா வைத்துள்ள இரசாயன ஆயுதங்கள் 30,000 தொன்கள்

5. ஆண்டுக்கு இராணுவத்துக்கு ஒதுக்கப்படும் நிதி £565 பில்லியன் பவுண்கள்

6. பிரித்தானியா ஈராக்கை தாக்க செலவிட்ட நிதி £3 பில்லியன் பவுண்கள்.

7. 1.75 பில்லியன் மக்களுக்கு 10 ஆண்டுகளுக்கு சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு தேவையான நிதி £6.6 பில்லியன் பவுண்கள்

8. 10 ஆண்டுகளுக்கு உலகில் பட்டினியை இல்லாமல் செய்வதற்கு தேவையான நிதி £12.6 பில்லியன் பவுண்கள்

தில் வெற்றியடைய முடியாது. அவர்கள் மக்களின் கோபத்திற்கு இரையாக வேண்டியிருக்கும். ஈராக்கியரின் தொடர்ச்சியான போராட்டம்கூட இதையே நிருபிக்கின்றன.

சிலியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி அலெண்டே CIA சதித்திட்டத்தில் 1973இல் கொல்லப்பட்ட பின்பு ஆட்சிக்கு வந்த பாசிச ஆட்சியில் இலட்சக்கணக் கான மக்களைக் கொன்ற பினோசிட், 1960களில் வாஷிங்டன் வழிகாட்டி, செயலூக்கத்துடன் உதவியபோது பல இலட்சத்திற்கும் மேலான கம்யூனிஸ்டுக்கள் மீது படுகொலைகளை நிறைவேற்றிய இந்தோனேசியாவின் சுகார்ட்டோ, அனைத்து ஜனநாயக உரிமைகளையும் நசுக்கி ஆயிரக்கணக்கான மக்களை கொன்று நாட்டின் பணத்தைக் கொள்ளையடித்த பிலிப்பைன்ஸ் மார்க்கோஸ், நாட்டைச் சீரழித்து சின்னாபின்னமாக்கி கொடுமைகள் செய்துவந்த சயரின் மொபுடு, துவாலியர், படிஸ்டா, போத்தா, நொரிஜா, புயுஜிமோரி... என்று ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்கச் சார்பாளர்க ளின் விபரம் முடிவற்றது. மனிதகுலத்தை எதிர்த்து மேற் கொள்ளப்பட்ட இவர்களின் குற்றங்கள் அதிக அளவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1945இல் ஹிரோசிமா, நாகசாக்கி மீது குண்டுகளையும், வியட்நாமில் ஏஜென்ட் ஆரஞ்சு, நேபாம் மற்றும் பல வேதியல் ஆயதங்களையும் பயன்படுத்திய "பெருமையும்" அமெரிக்காவையே சாரும். (400 பொதுமக்களை மைலாய் படுகொலையில் கொன்றது போன்ற அமெரிக்கப் படையின் போர் குற்றங்களை வியட்நாமில் மறைக்க முயற்சித்தது இந்தக் கொலின் பாவெல் தான்.)

1991ற்குப் பின் 1996 - 98 இடைப்பட்ட காலத்தில் ஈராக்கில் யுரேனியத்தை போட்டதனால் ஆயிரக்கணக்கான ஈராக்கிய குழந்தைகளுக்குப் புற்றுநோய் வந்ததும், உலகில் எந்த நாட்டையும்விட அதிக எண்ணிக்கையில் (பதிவுசெய்யப்பட்டுள்ள) இரண்டு மில்லியன் மக்களை சிறைக்குள் வைத்து, சொந்த நாட்டையே சிறைக்கூடமாக மாற்றியுள்ளதும் இந்த அமெரிக்காவே. அமெரிக்காவின் ஒட்டுமொத்த கறுப்பின மக்கள் தொகையில் 12சதவீதத்தினர் 20-30 வயதுகளில் இனவெறி, கிரிமினல் மற்றும் ஆட்சியாளர்களின் பழிவாங்கல் காரணமாகச் சிறைகளில் உள்ளனர். இந்நிலையில், அமெரிக்காவிற்கும் அதன் எடுபிடிகளுக்கும் சதாம் அல்லது வேறு எவரினதும் ஒடுக்குமுறை ஆட்சி பற்றிப் பேச உரிமையில்லை.

வடகொரியாவை "ஆயுதமற்றதாக்கவும்", அமெரிக்க கட்டளைகளுக்கு அடிபணியமறுக்கும் ஈரான், லிபியா, சூடான், யேமன், மற்றும் ஏனைய நாடுகளை அழிக்கவும் அமெரிக்கா சூழ்ச்சி செய்கிறது.

"எதிர்காலத்தில் எந்த நேரத்திலும் அமெரிக்க நலன்களுக்குத் தடையாக இருப்பதாகச் சந்தேகம் வருமாயின், "ஆட்சிமுறை மாற்ற" பாதிப்பு எந்த நாட்டிலும் வருமாயின், எந்த ஒரு நாடும் அமெரிக்காவுடன் இல்லாமல் எதிராக இருக்குமாயின் எந்த நாட்டையும் எந்த நேரத்திலும் ஆக்கிரமிக்கும் உரிமை உண்டு" என்று வெளிப்படையாகவே அறிவித்துள்ளது. (Project for New American Century- PNAC) புதிய அமெரிக்க நூற்றாண்டுக்கான திட்டக் குழுவின் அறிக்கை. (பார்க்க: Aspects of Indian Economy No. 33 & 34. மும்பையிலிருந்து வெளிவரும் முற்போக்கு பொருளியல் ஏடு). இதன் மூலம் அமெரிக்கா மிகப்பெரிய மிக அபாயகர மான பயங்கரவாதியாக இயங்கவும், அடாவடியாக மற்றவர்களின் உரிமைகளைக் கைப்பற்றி ஒருதலைப்பட்ச மாகச் செயற்படவும், சர்வதேச அமைப்புக்கு அடிபணிய மறுப்பதுடன், தாங்களே நீதிபதிகளாகவும், செயற்படுத்துப வர்களாகவும் மாறியுள்ளது.

பாலஸ்தீன இளைஞர்கள், பெண்கள், குழந்தைகளை ஆயிரக்கணக்கில் கொன்றும், அவர்களின் நிலப் பகுதியிலேயே முடக்கியும் வைத்துள்ள ஏரியல் ஷரோன் கீழான இஸ்ரேலிய சியோனிய ஆட்சியாளர்க ளுக்கு அமெரிக்கா இரசாயன ஆயுதங்களை வழங்கியுள்ளது. பேரழிவு ஆயுதங்கள் இல்லையெனினும் அதன் பெயரில் ஈராக்கைத் தகர்த்தெறிந்ததன் மூலம் அமெரிக்காவின் இரட்டைவேடம் அம்பலமாகியுள்ளது.

அமெரிக்காவின் வியப்பூட்டும் அழிக்கும் சக்தியை ஏற்றுக்கொள்ளவும், எதிர்கொள்ளவும் இயலாமல், எந்தவொரு மாற்றுப்பாதையும் தெரியாததனால் அராபியர்களும் முஸ்லீம்களும் பயங்கரவாதப் பாதையைத் தேர்ந்தெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதுவுமகூட அமெரிக்காவின் விருப்பமாகவே இருக்கின்றது. ஏனெனில் அமெரிக்காவின் பொருளாதார சமூகப் பிரச்சினைகளில் இருந்து மக்களை திசைதிருப்ப இத்தகைய பயங்கரவாத வடிவில் எதிரியை உருவாக்கு வது என்பது அமெரிக்காவின் அவசியங்களில் ஒன்றாகும்.

மலேசிய மண்ணில் கோலாலம்பூரில் இயங்கும் பெரியார் பகுத்தறிவுப் பாசறையின் வெளியீடாக 1987இல் வெளியான 'தாலி' என்ற கல்லச்சுப் பிரதியாக்கம் செய்யப்பட்ட சிறுநூல் அண்மையில் எமக்குக் கிடைத்துள்ளது. பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர் திருமுல்லை என்ற மலேசியப் பெண் எழுத்தாளரின் எண்ணத்தில் உதித்து குடத்துள் விளக்காக இருந்துள்ள அரியதொரு கட்டுரை நூல் எம்மை வந்தடைய 17 ஆண்டுகள் எடுத்துள்ளன. மலேசியத் தமிழர்களின் தரமான இலக்கியங்கள் சர்வதேசத் தமிழர்களை எட்டத் தொடர்ந்தும் முயல்வோம். இந்நூலின் சாராம்சத்தை தேசம் வாசகர்களுக்காக தருகின்றோம்.

# தமிழர் வாழ்வியலில் : தாலி ஒரு வரலாற்றுப்பார்வை

**திருமுல்லை**

கோலாலம்பூர், மலேசியா

ஒரு காலத்தில் நாகரீகம் என்று கருதப்படுவது, பின்னொரு காலத்தில் காட்டுமிராண்டித்தனமானது என வெறுத்துக் கண்டிக்கப்படுகின்றது. உடன்கட்டை ஏறுதல் முன்பு புனிதமான கடமை என்று கருதப்பட்டது. ஆனால் அது இன்று கொடுமையானதும் காட்டுமிராண்டித்தன மானதுமாகக் கருதப்படுகின்றது. இருப்பினும், இன்றும் அவ்வழக்கத்தைக் கடைப்பிடிப்போரால் அதற்குப் புனிதக் காரணங்களும், மகிமைகளும் கற்பிக்கப்படுகின்றன.

தாலி கட்டுவதும், கணவன் இறந்தபின் அதை அறுத்து, பூவும் பொட்டும் நீக்கி, பெண்ணின் வாழ்வையே பொசுக்குவதும் உடன்கட்டை ஏறுவதை விட எவ்வகை யிலும் குறைந்ததல்ல. முன்னவள் உயிரோடு எரிக்கப்படு கின்றாள். பின்னவள் உயிரோடும் உடலோடும் வதைக்கப்படுகிறாள். நாமோ மாங்கல்யத்திற்கு காரண மும் மகிமையும் கற்பிக்கின்றோம். நாகரீக உலகு நாம் செய்வதை கொடுமை, முட்டாள்தனம் என்கின்றது.

திருமணத்தில் தாலி அணிவதும், கணவன் இறந்ததும் தாலியை அறுப்பதும் பழந்தமிழரிடையே இல்லாத வழக்கம். 500 ஆண்டு காலத்துக்குள் தான் இவ்வழக்கம் தமிழரிடையே பரவியுள்ளது.

தாலி - மாங்கல்யம் - மங்கல நாண் என்று பலவாறாக அழைக்கப்படும் அணி, தமிழரின் திருமணத் தில் இன்றியமையாததாகி இன்று எமது சமூக வாழ்வில் பெரும்பங்கு வகிக்கின்றது. இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் உட்பட அனைத்துத் தமிழர்களும் தாலி கட்டிக் கொள்கின்றனர். எனவே இது தமிழர்களின் பாரம்பரியமான அணிகலன் என்றும் கூறப்படுகிறது.

திருமணம் ஆகிவிட்டதற்கு அறிகுறியாக, திருமணத் தன்று மணமகன், மணமகள் கழுத்தில் தாலியை அவள் திருமணம் ஆகிவிட்டவள், இனி அவள் தன்னுடையவள் என்பதற்கு ஒரு உரிமைகோரும் அடையாளமாகக் கட்டிவி டுகின்றான். ஆனால் அதே கருத்தை மணமகளும் மனதளவில் கொண்டிருந்தாலும், தாலியையோ அது போன்ற வேறு அடையாளத்தையோ காட்டக்கூடிய சின்னத்தை மணமகனுக்கு அவள் கட்டிவிடுவதில்லை.

நேரகாலம் பார்த்துக் கட்டப்படும் இந்தத் தாலி, கணவன் இறந்துவிட்டால் அவளது கழுத்திலிருந்து சில கைம்பெண்களால் அறுக்கப்பட்டு பால்குடமொன்றினுள் இடப்படும். பின்னர் அவள் விதவை அல்லது கைம்பெண் ஆகிவிடுவாள்.

## தாலி என்பது என்ன?

பழந்தமிழர் தம் வீரத்திற்கு அடையாளமாகப் புலியின் பல்லை ஒரு கயிற்றில் கோர்த்து தம் அன்புக்கு உரியோருக்கு முன்னாளில் அணிவித்தனர். தாலி என்பதன் தொடக்கம் அதுவேயாகும். தால் என்பது நாக்கு. நாக்கின் அமைப்பிலும் புலிவாய் போலும் நாக்கினோடு தொடர்புடைய பல்லாலும் - பல்போன்ற அமைப்பிலும் செய்யப்பட்ட அணியே தாலி.

"கொடும்புலி வாய் பிளந்து பெற்ற வெண்பல் தாலி" என்பது பொருள்விளக்கமாகும்.

"புலிப்பல் தாலி புன்றலைச் சிறார்" எனச் சிறுவர் அணிந்த தாலியை புறநானூறு கூறுகின்றது.

"பொன்னோடு புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி" என அகநானூறு இயம்புகின்றது. இது சிறுமியின் தாலி.

சிறுவர் ஒரு குறிப்பிட்ட காலம் வரை தாலியை அணிந்திருந்தனர். பாண்டியன் நெடுஞ்செழியன் சேர சோழர்களையும் பிற குறுநில மன்னர்களையும் போரில் வென்றபோது அவன் தாலி கழற்றாத இளையோனாக விளங்கினான் என்பதை "தாலி களைந்தன்றும் இலனே" என இடைக்குன்றூர்க் கிழார் என்ற புலவர் பாடுவதன் வழி அறிகின்றோம்.

பழந்தமிழ் நாட்டில் சிறுவர் சிறுமியரும் தாலி அணிந்திருந்தனர். ஒரு குறிப்பிட்ட காலம் வரை அணிந்திருந்து பின்னர் அகற்றியிருக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது.

## தாலி வகைகள்:

இன்று சாதிக்கொரு தாலி வகை வந்து எம்மை நகையுறச் செய்கின்றது. ஆனால் பழந்தமிழகத்தில் கீழ்க்கண்ட தாலி வகைகள் இருந்திருக்கின்றன என்பதை அறியமுடிகின்றது.

புலிப்பல் தாலி :
புலிப்பல்லால் ஆனது
ஐம்படைத் தாலி :
ஐந்து வகைப்படைக்கலன்களை சிறிய அளவாகச் செய்து கோர்க்கப்பட்டது.
பின் தாலி :
முதுகை மறைக்கும் ஒருவகைத் தாலி
ஆமைத் தாலி :
ஆமை வடிவில் செய்யப்படுவது
மாணிக்கத் தாலி :
மாணிக்கப் பரல்களால் ஆனது
சின்னமணித் தாலி :
சின்ன மணிகள் கோர்க்கப்பட்ட தாலி

மேற்கண்ட தாலி வகைகள் பழந்தமிழர்களால் அணிகலன்களாக அணியப்பட்டுவந்துள்ளன.

## குதிரையின் தாலி :

உதயணன் கதையில் அவனுடைய குதிரையும் தாலி அணிந்திருந்தது என்பதை "வலியுடையுரத்தின் வான்பொற்றாலி" என்ற செய்யுள் உணர்த்துகின்றது. இன்று பெண்களால் மகிமை மிக்கது எனப் போற்றப்படும் தாலியை அன்று குதிரையும் அணிந்திருந்தது. தாலி பண்டைய நாட்களில் அணியப்பட்ட ஒரு அணிகலன். அழகுக்காக அணியப்பட்ட நகை என்பதைத் தவிர வேறு எவ்வகைச் சிறப்பும் அதில் இருந்ததில்லை. எனவே தான், உதயணனும் தான் அன்போடு வளர்த்த குதிரைக்கு அதை அழகுபடுத்தும் பொருட்டு தாலியை அணிவித்தான்.

## பண்டைத்தமிழர் மணவாழ்வில் தாலி :

தமிழரின் மணவாழ்வு களவியல், கற்பியல் என இருவகைப்படும். இவை சீர்குலைந்து ஒழுக்கம் கெட்ட பின்னர், "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்ற தொல்காப்பியர் கூற்றுப்படி சான்றோர் (தொல்காப்பியர் காலத்தில் ஐயர் என்ற பதம் சான்றோரைக் குறிப்பிடவே பயன்படுத்தப்பட்டது) சடங்கு முறைகளை வகுத்தனர். மணமக்களை மணல்பரப்பிய இருக்கையில் இருத்தி, குடத்தில் புதுநெல்லும் மலரும் இட்டு நீர் நிறைத்து அதை மணமக்கள் மேல் ஊற்றி நீராட்டுவர். பெண்கள் குலவையிட்டுப் பாடுவர். விருந்து உண்ணலோடு மணவிழா இனிதே முடிவுறும்.

சிலப்பதிகாரம் "மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலம் வந்ததை" குறிப்பிடுகின்றது. கோவலன் கண்ணகிக்கோ மாதவிக்கோ திருமணத்தில் தாலி கட்டவில்லை. கோவலன் இறந்தபின் கண்ணகி தாலியை அறுத்ததாகத் தகவலும் இல்லை. ஆனால் இவள் "தொடி களைந்தாள்" என இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். அதன்வழி தொடி எனப்படும் அணிகலனை அவள் நீக்கினாள் என்பதை அறிகின்றோம். இத்தொடியும் திருமணத்தன்று போடப்பட்டதற்கான ஆதாரம் சங்க இலக்கியங்களில் இல்லை.

ஆய் அண்டிரன் என்பவர் கடையேழு வள்ளல்களுள் ஒருவர். அவர் இல்லையென்று கூறாது அனைத்துச் செல்வத்தையும் ஏழைகளுக்கும் இரப்போர்க்கும் வாரி வழங்கினார். தம் மனைவியரின் நகைகளைக் கூட இழந்தார். அந்த ஆய்மகளிர் ஒரே நகையை மாத்திரம் கழற்றாது அணிந்திருந்தனர் என்பதை முடமோசியார் என்ற புலவரின் இப்பாடல் வழி அறியலாம்.

"மஞ்ஞை கண்ணொடு சேப்ப
ஈகை அரிய இழையணி மகளிரொடு
சாயின்று — என்ப ஆஅய் கோயில்" (புறம் 127)

புறம் 227 ஆம் பாடலில் கருங்குழல் ஆதனார் என்னும் புலவர், மாமன்னன் கரிகாலன் இறந்தபோது,

"மெல்லியல் மகளிரும் இழை களைந்தனரே" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன்வழி மணமான மகளிர் இழையணி என்னும் அணியை அணிந்திருந்தனர் என்றும் துணைவன் இறந்தபின் அதனை நீக்கினர் என்றும் தெரியவருகின்றது.

இந்த இழையணி மாங்கல்யமன்று. திருமணத்தன்று அணிவிக்கப்பட்டதுமன்று என்பதை உரையாசிரியர்களின் கருத்தின் வழியும் அறியமுடிகின்றது. துணைவன் இறந்தபின் நீக்கப்பட்ட இழையணி என்று பாடிய புலவர் பெருமக்கள் வாழ்வின் முக்கிய நிகழ்வான திருமணத்தில் தாலி கட்டப்பட்டிருந்தால் அதுபற்றி குறிப்பிட்டுப்பாடாது விட்டிருப்பாரா?

இழை தொடி என்பவற்றை அருங்கலம் என்றும் கூறுவர். அருங்கலம் என்பது பரிசப்பொருளாக மண மகனால் திருமணத்தன்று மணமகளுக்குத் தரப்படும் ஒரு பொருள் என்று பிற்பட்ட காலத்தில் பாடப்பட்ட பாடல்வழி அறிகின்றோம்.

12ம் நூற்றாண்டில் அருங்கலம் பெற்றோர், அந்தணர், சான்றோர் முன்னிலையில் மணமகளுக்குத் தரப்பட்டதை, இவ்வாறு பாடல் கூறுகிறது.

"கிழவோன் அந்தணர் சான்றோர் முன்னிட்டருங்கலந்
தந்து வரைதல் தகுதியென்ப"

தமிழரின் ஐம்பெருங் காப்பியங்களான வளையாபதி, குண்டலகேசி, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை ஆகியவற்றில் மணமகள் தாலி அணிந்ததா கக் கூறப்படவில்லை.

சமணர்களின் நூல் என்று கருதப்படும், தமிழரின் பொதுமறையான திருக்குறளில் தாலியைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லையென்பதை யார் மறுக்கமுடியும்?

சீவக சிந்தாமணி 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. சீவகன் செய்யும் ஒன்பது திருமணங்களிலும் அவன் தாலி கட்டவில்லை.

சமணர்கள் என்போர் மகாவீரர் என்ற அறிஞரால் தோற்றுவிக்கப்பட்ட மதமான சமணமதத்தைச் சார்ந்தவர்கள். மிக உயரிய கோட்பாடுகளைக் கொண்டு பிற உயிர்களுக்குத் துன்பம் தராத வாழ்வை மேற்கொண்டிருந்த இவர்களுக்கு தெய்வநம்பிக்கை இல்லை. நமது முன்னோர்களில் பலர் சமணர்களாகவே வாழ்ந்திருந்தனர்.

இவர்கள் தமிழ்த்தாயின் அணிமணிகளாகக் கருதப்படும் சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பன போன்ற சமண நெறிநூல்களை இயற்றி தமிழுக்கு அருந்தொண்டாற்றினர்.

இந்தச் சமணர்களை மதுரையில் சைவரான திருஞானசம்பந்தர் வாதில் வென்றாராம். அதன் தொடர்பாக மதுரையில் எண்ணாயிரம் சமணர்கள் வரையில் கொலை செய்யப்பட்டனர். தப்பியோடிய சமணர்களைக் கூட சூலாயுதம் தாங்கிய சிவனடியார்கள் விரட்டிப்பிடித்துக் கொன்றதாக சைவசமய ஏடுகள் கூறுகின்றன. தமிழ்ச் சமணர்கள் அன்று ஒழிக்கப்படாதிருந்தால் தமிழர் வாழ்வில் தாலி மட்டுமென்ன சாதியும் கூட நுழைந்திருக்குமா என்பது சந்தேகமே.

# துப்பாக்கி தூக்கியிருக்கக் கூடிய இன்னொரு பாலனின் கேள்விகள்

வின்சென்ற் புளொரன்ஸ்
கிளிநொச்சி

என்னருமைச் சோதரனே
எட்டு வயதிருக்குமா உனக்கு?
தொப்புள் கொடி விழுந்தாயிற்றா?
வறுமையின் கொடுமையில்
காவிக்குள் புகுந்து நீ
சமனேரா[1] ஆனாயா?
இருக்காது
நீயாக அதற்குள் புகுவதற்கு
உனக்கு வயது காணாது
வலிந்து புகுத்தியிருப்பார்கள்
அப்படித்தானே? ஒரு வேளை...

கிருஷாந்தி போல்
உன் சோதரியும் கிழிபட்டாளா?
உன் அம்மாவின் குறிக்குள்
என்ன குண்டு வெடித்ததா?
உன் வீடு முழுவதையுமே
கிபீர் சிதைத்துத் தொலைத்ததா?
சவப்பெட்டிக்குள் இருக்கும்
நவீன ஓவியமாய்[2]
உன் அப்பனைப் புதைத்தாயா?

பதினாறே வயதில் நாங்கள்
துப்பாக்கி தூக்க
நிச்சயமாய்
வறுமை காரணமில்லை....
குருதி வெறிபிடித்தலையும்
சப்புமல்குமாரர்களையும்,
ஏவிவிடும்
உன் குருநாதர்களையும்
கேட்டுப்பார்
காரணம் தெரியவரலாம்
அவர்கள் சொல்லமாட்டார்கள்
சொன்னார்களென்றால்
அவர்கள் வக்கிரங்களுக்கு
வடிகாலாய் பலியாக
காவிக்குள்
நீ இருக்கமாட்டாய்...

எங்களுக்கான
மனித உரிமை பற்றி
எங்களைக் காணாமலே
அறிக்கையிடுவோர் கண்களுக்கு
முன்பக்கத்தில்[3] வந்திருக்கும்
உன் பிஞ்சு முகம்
தெரியாதிருக்க நியாயமில்லை
காவிக்குள் புதைக்கப்படும்
உன் பால்மணக் காலங்களை
காணாமல் இருக்க
டொலர்கள் கண்ணை
மறைத்திருக்கும்

சுவரில் முதுகு முட்டும்வரை
விரட்டப்பட்ட எங்களுக்கு
துப்பாக்கி தூக்குதல் தவிர
வேறுவழி இருக்கின்றதா?

காவியை உதறிவிட்டு வா
காவிபோர்த்த காமுகர்க்கும்
இரத்தவெறிப் பேய்களுக்கும்
மனித உரிமைப் போலிகளுக்கும்
சமாதி கட்டுவோம்
வருவாயா....?

[4] சமனேரா — பயிலுநர் பிக்கு
[2] நன்றி - நிலாந்தன்
[3] Daily News 25.5.2002,
Sunday Times 17.11.2002.

# மலேசியாவில் தமிழ் நூல்கள்: ஆவணப்படுத்தல்



என். செல்வராஜா
நூலகவியலாளர்

பிரித்தானியரின் ஊடுருவல் மலேயா மண்ணில் ஏற்பட்ட 1874க்குப் பின்னர் இந்தியப் பெரு நிலப்பரப்பில் இருந்து தமிழர்கள் இரப்பர், எண்ணெய் மரப் பயிர்ச் செய்கைகளுக்காக மலேயாவுக்கு அழைத்து வரப்பட்டுக் குடியேற்றப்படும் போதே தமிழ் இலக்கியமும் அவர்களு டன் நுழைந்துவிட்டது. மலேசிய தமிழ் நூல் வெளியீட்டுத் துறையைப் பொறுத்தவரையில் தமிழகம், இலங்கை ஆகிய நாடுகளின் வெளியீட்டுத்துறை வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது பாரிய பாய்ச்சலை வெளிப்படுத்தி இருப்பதை தெளிவாக அறியமுடியும்.

பெருமிதம் கொள்ளத்தக்க இந்த வளர்ச்சி துரதிர்ஷ்ட வசமாக தமிழ்நூல் விநியோகமுறைகள் சர்வதேச மட்டத்தில் வளர்ச்சியுறாதமையால் வெளியுலகிற்குத் தெரியாத நிலையில் குடத்துள் விளக்காக உள்ளன. மலேசிய மண்ணில் கால் பதிக்கும் அண்டைய நாட்டுத் தமிழர்கள் எவரும் இதனை தெள்ளெனப் புரிந்துகொள்ள முடிந்தாலும், எத்தனைபேர் இத்தகவலை வெளியுலகிற்கு எடுத்துச்செல்றார்கள் என்பது சிந்தனைக்குரிய கேள்வி.

மலேசிய தேசிய நூற்பட்டியலானது (Malaysian National Bibliography), 1966ம் ஆண்டு நூல் பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் (Book Preservation Act 1966) பெர்புஸ்த்தகான் நெகரா மலேசியா (Perpustakaan Negara Malaysia) என்று அழைக்கப்படும் மலேசிய தேசிய நூலகத்தின் இருப்புக் களை தொகுப்பதன் மூலம் 1967இல் பருவ வெளியீடாக ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1986இல் இயற்றப்பட்ட வைப்பகங்களுக்கான சட்டத்தின் பிரகாரம் (the Deposit of Library Material Act 1986) அதன் ஆவணக் காப்பகத்திற்கு சட்டபூர்வமாக பதிப்பகங்களினால் வழங்கப்படும் வைப்பக நூல் பிரதிகளையும் உள்ளடக்கியதாக 1987 முதல் விரிவான முறையில் தொகுக்கப்படுகின்றது.

இலங்கை இந்தியா போன்ற நாடுகளின் தேசிய நூற்பட்டியல் போலவே மலேசிய தேசிய நூற்பட்டியலும் முழுமையான மலேசியத் தமிழ் நூல்களை பதிவுக்கு உள்ளாக்குவதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றன. அரசாங்க வெளியீடுகள், பல்கலைக்கழக வெளியீடுகள் ஓரளவு சுவடிகள் காப்பகத்திற்கு ஒழுங்காக அனுப்பி வைக்கப்பட்டாலும், வர்த்தக நோக்கில் தனிப்பட்டவர் களால் மேற்கொள்ளப்படும் நூலாக்கங்கள் அனைத்தும் மலேசிய தேசிய நூலகத்தை அடைந்து நூற்பட்டியலில் இடம்பெறுவதில்லை.

இதற்கு அடிப்படைக் காரணம் மலேசிய தமிழ் நூல்க ளில் பெரும்பாலானவை மலேசியாவுக்கு வெளியே தமிழகத்தில் அச்சிடப்படுவதாகும். இதைவிட பதிப்பகங் கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தவறுவதும் இதற்கோர் காரணமாகும். இந்நிலையில் மலேசிய தமிழ்நூல்களை ஆவணப்படுத்தும் முயற்சியில் பல்வேறு நிறுவனங்களும், தமிழறிஞர்களும் தத்தமது வசதிக்கும் வாய்ப்புகளுக்கும் ஏற்ப இறங்கியுள்ளமையை இங்கு அவதானிக்க முடிகின்றது.

மலேசிய மண்ணில் பிறந்த முதலாவது தமிழ் நூல்பட்டியல் என்ற வகையில் 1969ல் மலாயாப் பல்கலை கழகத்தின் நூலக வெளியீடாக இராம சுப்பையா அவர்கள் தொகுத்திருந்த தமிழ் மலேசியானா (Tamil Malaysiana: a checklist of Tamil Books and Periodicals published in Malaysia and Singapore) என்ற நூல் அமைகின்றது. மலேயா நாட்டுக்கோட்டைச் செட்டியார்க ளின் நிதியத்தின் பண உதவியுடன் இந்நூல் 77 பக்கங்க ளில் வெளியிடப்பட்டிருந்தது. அமரர் இராம சுப்பையா அவர்கள் 1964ம் ஆண்டு முதல் தொடர்ந்து மூன்று வருடங்களாகப் பல இடங்களுக்கும் திரிந்து தேடித் தொகுத்த இந்த நூலியல் பதிவு முயற்சி அவர் விபத்தில் சிக்கி அகால மரணமடைந்த பின்னர் இன்றுவரை எவராலும் முன்னெடுத்துச் செல்லப்படவில்லை. இந்நூற்பட்டியலின் பதிவுகள் மூன்று பிரிவுகளில் தொகுக்கப்பட்டுள்ளன.

முதற்பிரிவில் 1968 வரை வெளியான 401 தமிழ் நூல்களின் நூலியல் விபரங்கள் ஆசிரியர் பெயர் ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் பெயர், நூலின் தலைப்பு, வெளியிட்ட இடம், வெளியிட்ட ஆண்டு, பக்கங்களின் எண்ணிக்கை ஆகிய அடிப்படை நூலியல் தகவல்களைக் கொண்டுள்ளன. இரண்டாவது பகுதியில் மலேசிய மண்ணில் முளைவிட்ட 271 தமிழ் சஞ்சிகைகள் (Periodicals) பற்றிய பட்டியல் சஞ்சிகையின் பெயர் ஒழுங்கில் தரப்பட்டுள்ளது. இங்கு சஞ்சிகையின் பெயர், ஆசிரியர் பெயர், வெளியிட்ட இடம், ஆண்டு என்பன

தரப்பட்டுள்ளன. பன்மொழிச் சஞ்சிகையாயின் அது பற்றிய குறிப்பும், பருவக்குறிப்பும் தரப்பட்டுள்ளன. மூன்றாவது பிரிவில் (பின்னிணைப்பாக) பல்வேறு நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைச் செய்திகளில் காணப்பட்ட 25 படைப்பாளிகளின் 51 மலேசிய நூல்கள் பற்றிய வெளியீட்டுச் செய்திகளிலிருந்து தொகுத்த விபரங்களைக் கொண்ட ஒரு பட்டியல் காணப்படுகின்றது.

மலேசிய தமிழ் நூல்களின் வெளியீட்டு வரலாறு இன்றைய சிங்கப்பூரின் (1965வரை மலேசிய எழுத்தாளர் களாக இனம் காணப்பட்டவர்கள்) தமிழ் படைப்பாளிகளை யும் இணைந்ததாக இருக்கின்றது. மலேசிய மண்ணில் வெளியான முதல் நூலாக க.வேலுப்பிள்ளையின் "சிங்கை முருகேசர் பேரில் பதிகம்" என்ற நூலை அடையாளம் காண தமிழ் மலேசியானா உதவுகின்றது. சிங்கப்பூரில் 1893இல் வெளியான இச்சிறுநூல் 12 பக்கங்களைக் கொண்டது.

அமரர் இராம சுப்பையாவின் தொகுப்பில் இடம்பெற்றுள்ள பதிவுகள் மலேசியத்தமிழர்களால் மலேசிய மண்ணிலேயே வெளியான நூல்களை மாத்திரம் கொண்டிருக்கவில்லை. சிங்கை, மலேசியத் தமிழர்கள் இந்தியாவில் வெளியிட்ட நூல்களும், இந்திய இலங்கைத் தமிழர்கள் மலேசியா, சிங்கப்பூரில் வெளியிட்ட நூல்களும் இடம்பெற்றுள்ளன. அரசாங்க வெளியீடுகளும், சிறப்பு மலர்கள், நிறுவனங்களின் அறிக்கைகள் என்பன தவிர்க்கப்பட்டுள்ளன.

மலேசியாவில் ஜுலை 1984இல் உருவான Indians in Peninsular Malaysia: A Study and Bibliography என்ற நூல் மலேசிய நூலியல் பதிவில் ஒரு தனித்துவமான இடத்தினை வகிக்கின்றது. ராஜகிருஷ்ணன் இராமசாமி, ஜே.ரவீந்திர டானியல் ஆகிய இருவரும் இணைந்து தொகுத்த இந்நூல் மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறையின் மற்றொரு வெளியீடாகும்.

அக்காலகட்டத்தில் இந்திய ஆய்வியல் துறையின் தலைவராக பேராசிரியர் தேவபூபதி நடராஜா அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார். மலேயாவில் வாழும் இந்திய சமூகத்தவரின் 19ம் 20ம் நூற்றாண்டுக்காலத்து வரலாறு, சமூகவியல், பொருளாதாரம், அரசியல், கல்வி, பண்பாட்டு விழுமியங்கள், குடித்தொகைப் பரம்பல், மொழி, இலக்கியம், சுகாதாரம் பற்றிய விடயங்களைத் தாங்கி சர்வதேசஅறிஞர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு மலேசியாவில் பதிப்பிக்கப்பட்டு வெளியான படைப்புக்கள் இதில் இடம்பெற்றுள்ளன. வெளியிடப்படாத (கையெழுத் துப்பிரதியாக பல்கலைக்கழகங்களுக்குச் சமர்ப்பித்த ஆய்வுகள்) ஆய்வேடுகள், தனிநூல்கள், பத்திரிகை, சஞ்சிகைகள், ஆய்வு நிறுவனங்களின் ஏடுகள் போன்றவற்றில் இடம்பெற்ற ஆங்கிலக் கட்டுரைகள் என்பன பற்றிய நூலியல் விபரங்கள் இவ்வரிய நூலில் தேடித் தொகுத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச அரங்கில் உலகளாவிய அளவில் "மலேசியவியல்" தொடர்பான நூல்கள், ஆய்வுகள்,

IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

SOLICITORS

Rengan N Devarajan

Immigration & Nationality
Employment
Land Lord & Tenant
Housing
Welfare Benefits
Matrimonial

Tel : 020 8478 5797
Fax : 020 8478 4486

1ST Floor
128 Ilford Lane, Ilford
Essex, IG1 2LE

அறிவியல் ஏடுகளில் இடம்பெற்ற கட்டுரைகள் என்பன இலங்கை, இந்திய ஐரோப்பிய நாடுகளில் வெளியாகி உள்ளன. இந்திய ஆய்வியல் துறை இத்தகைய தகவல் களை பன்னாட்டு நூலியலாளர்களுடனும் பல்கலைக் கழகங்களுடனும் இணைந்து ஒரு தொகுப்பு முயற்சியை மேற்கொள்ளலாம். இந்த நூலின் இரண்டாம் பாகத்தை வெளியிட நிறுவனரீதியில் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்வது பயனுள்ளதாகவிருக்கும்.

இலண்டனில் தேசம் சஞ்சிகையின் ஆதவரில் மிக அண்மைக்காலத்தில் மலேசியத் தமிழ் இலக்கிய கருத்தரங்கும் மலேசிய நூல்கள், சஞ்சிகைகளின் கண் காட்சியும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இலண்டன் ஸ்ட்ரட்போர்ட் (Stratford Library) நூலகத்தில் 5.4.2003இல் இடம்பெற்றிருந்தது. இந்நிகழ்வின் போது தேசம் சஞ்சிகையின் சிறப்பிதழாக "மலேசியத் தமிழ் இலக்கியம்" என்ற மலரும் வெளியிடப்பட்டுள்ளது. இதில் மலேசிய இலக்கியம் தொடர்பான கட்டுரைகளுடன் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த சுமார் 100 மலேசிய தமிழ் நூல்களின் நூற்பட்டியலும் இடம் பெற்றிருந்தது.

உலகத் தமிழராராய்ச்சி மகாநாட்டை ஆரம்பித்து வைத்த பெருமை மாத்திரமல்ல, பல்வேறு தமிழியல் முயற்சிகளுக்கும் அடித்தளமாகி நின்றுள்ள பெருமை இந்த மலேசிய மண்ணுக்கு உரியது. உலகத் தமிழா ராய்ச்சி மாநாடு, உலகத் தமிழ்ப் பண்பாட்டு விழா, உலகத் திருக்குறள் மாநாடு, உலகத் தமிழர் மாநாடு, உலகத் தமிழாசிரியர் மாநாடு, உலகத் தமிழ் எழுத்தாளர் தினம் என உலகளாவிய நிலையில் சிந்திப்பதற்கும் சந்திப்பதற்கும் செயல்படுத்துவதற்கும் முதல் கால்கோள் விழாவை மலேசிய மண்ணில் இடம்பெறச்செய்த மலேசியத் தமிழர்களின் இலக்கிய வளத்தை உலக அரங்கிற்கு எடுத்துச் செல்லவேண்டிய கடமை உலகத் தமிழர் அனைவருக்கும் உள்ளது.

தனிநாயகம் அடிகள் தொடக்கி வைத்த இந்த தமிழியல் பாலத்தை அண்மையில் மாத்தளை சோமு அவர்கள் மீள்நினைவு கூரவைத்துள்ளார். மலேசியச் சிறுகதைகள் சிலவற்றை தொகுத்து நூலுருவில் அவர் வெளியிட்டிருக்கின்றார். அண்மையில் மலேசியச் சிறுகதைகள் சிலவற்றைத் தேர்ந்து அவை ஆங்கி லத்துக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. சர்வதேச சமூகத்துக்கு மலேசிய மண்ணின், அதன் மக்களின் வாழ்வியல் கோலங்களை அறியும் வாய்ப்பு மொழி பெயர்ப்பின் வாயிலாகக் கிட்டியுள்ளது.

மேலும் ஒரு முழுமையான மலேசிய தமிழ் நூல்களுக் கான நூற்பட்டியல் ஒன்றின் தேவை பற்றிய விழிப்புணர்வு மலேசியாவில் ஏற்பட்டு உள்ளது. இது மேலும் விரிவாக வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். அதற்கு மலேசிய தமிழ் ஊடகங்களின் பணி அவசியமாகின்றது. அச்சில் வெளியிடப்பட்ட மலேசிய தமிழ் நூல்கள் அனைத்தினதும் தொகுப்பொன்றை அமரர் இராம சுப்பையாவின் பணியின் தொடர்ச்சியாக மேற்கொண்டு, அதன் மூலம் இன்று மலேசியாவுக்குள்ளும், வெளியிலும் மலேசியத் தமிழர்க ளால் பிரசுரமாகும் நூல்கள் அனைத்துக்குமான பதிவை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிக்கு உதவும் கரங்கள் அனைத்தும் அன்புடன் வரவேற்கப்படுகின்றன. மலேசிய எழுத்தாளர்கள், உலகின் எப்பாகத்திலும் தாங்கள் வெளியிடும் நூல்கள் பற்றிய விபரங்களுடன் தொகுப்பாளருடன் தொடர்பு கொண்டால் இப்பணி விரைவில் கைகூட வாய்ப்பேற்படும்.

N.Selvarajah, Editor - Noolthettam,
48 Hallwicks Road, Luton LU2 9BH, U K

நிமிர்ந்து நடப்பவர் எல்லாம் ...... 32ம் பக்கத் தொடர்ச்சி

அனஸ் ஒருபுறம் இருக்க அன்று புத்தகம் பற்றி விமர்சனம் செய்ய வந்து அதை விட்டு மற்ற எல்லா வற்றையும் பற்றிப் பேசிய ஒருவரைப் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும. கரவைக் கவி என்று அறிமுகம் செய்து வைத்தவர் இவரை ஒரு பெரிய பேச்சாளர் என்று கூறிவைக்க நாங்களும் நிமிர்ந்து அமர வந்தவர் உயரத்தின் அடிப்படையில் உயர்ந்த பேச்சாளர் என்பது அப்போது தான் தெரிந்தது. மசூதியில் ரத்தம் கசிந்ததை சொன்ன நித்தி தேவாலயத்தில் கோயிலில் படிந்த ரத்தத்தையும் பற்றி முன்னுரையில் எழுதியிருக்க வேண் டும் என்று சபைபோருக்கு சொன்னார். முன்னைய குருதி யாரால் பின்னையது யாரால் என்பது அறுவை மன்னிக்கவும் கரவைக் கவிக்குத் தெரியவில்லையோ?

அனஸின் கவிதைகளில் ஆத்திரம் இருப்பதைக் கண்டுகொண்ட கவிக்கு காரணத்தைக் கண்டுகொள்வதில் அக்கறை இருக்கவில்லை.நித்தி அடக்கி வாசித்திருக்கலாம் என்று வேறை புத்திமதி. நல்ல ஞாயம். ஒருமணி நேரம் வாகன நெரிசலில் நின்று போன எங்களுக்குத் தேவையான அட்வைஸ். அன்ரன் பாலசிங்கம் இது ஒரு வரலாற்றுத் தவறு என்று ஏற்றுக் கொண்ட பின்னரும் கரவை விடுறபாடில்லை. அடுத்த முறை ஆரும் செய்தி வெளியிடறதாய் இருந்தால் யாரிடம் அட்வைஸ் கேட்க வேணும் எண்டு தெரியுது தானே.

கரவையின்ரை அட்வைஸ் எப்படி இருக்கிறதென்ப தற்கு ஒரு உதாரணம். பக்கத்து வீட்டுக்காரனின் மனைவி யுடன் உடலுறவு கொள்ளும் போது (வார்த்தையை அளந்து பாவிக்கவில்லை என்ற குற்றசாட்டுக்கு இனி இடமில்லை என்று நினைக்கிறேன்) கணவனிடம் பிடிபட்ட வன் நான் தெரியாமல் செய்திட்டன். உன் மனைவியுடன் உறவு வைப்பது தவறு என்று எனக்குத் தெரியாது. இப்ப உணர்ந்திட்டன். மன்னிப்பும் கேட்கிறன் என்று சொன்ன பின் கணவன் கோபப்படுவதை கொஞ்சம் குறைத்துக் கொள்வது நியாயம் என்பது போல் இருக்கிறது அட்வைஸ். அடுத்த முறை கரைவ ஐயாவைக் கண்டா காலிலை விழுந்து கும்பிடுங்கோ. என்னே! அட்வைஸ்.

# நிமிர்ந்து நடப்பவர் எல்லாம் துணிந்தவர் என்றால்?



ஆர் புதியவன்

அண்மையில் லண்டனில் ஒரு கவிதைத் தொகுப்பு ஒன்று வெளியிடப்பட்டது. ஈழவர் திரைக்கலை மன்றம் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. வெளியிடப்பட்ட நூலின் பெயர் 'பிணம் செய்யும் தேசம்'. எழுதியவர் அனஸ். இளைய அப்துல்லா என்ற புனைபெயரில். இது ஒரு கவிதைத் தொகுப்பு என்று கூறுவதிலும் பார்க்க கவிதைத் தொகை(ப்பு) என்று குறிப்பிடுவது பொருத்தம் என்று நினைக்கின்றேன்.

மண்டபம் நிறைந்த கதிரைகளின் மத்தியில் ஒரு பதினைந்து இருபது பேருடன் நிகழ்வு ஆரம்பமானது. (வழமை போல லேட்ராய்த் தான்) நிகழ்வுக்கு அழைத்திருந்தவர்கள் பாரம் தூக்கி சகிதம் வரவேண்டும் என்று கூறியிருக்கவில்லை. அதனால் கார் வரை புத்தகத்தைக் கொண்டு செல்ல நாலு ஐந்து பேர் வரை தேவைப்பட்டது. ஆறாம் வகுப்புத் தமிழ் மலர் புத்தகத்தின் பருமன் அளவு இருந்த கவிதைத் தொகுப்பு அல்லது அவிதைத் தொகுப்பு பற்றி பேச வந்தவர்கள் கவிதை தவிர்த்து மற்றைய எல்லாம் பற்றிப் பேசினார்கள்.

புத்தகம் சிறிதாக இருந்திருந்தால் வாசிக்கவும் நன்றாக இருந்திருக்கும். கொஞ்ச மரங்களையும் காப்பாத்தியிருக்கலாம். (திடீர் என்று சூழல் மீது என்ன அக்கறை என்று கேட்பது புரிகிறது.)

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வசனங்களை அங்கங்கே முறித்து (தாறுமாறாய் முறித்தால் பின் நவீனத்துவக் கவிதையென்றும் அழைப்பர்) ஒன்றன் கீழ் ஒன்றாக வரிசைப்படுத்தி (ஒழுங்கு முக்கியமில்லை) ஒருதலைப்பும் போடுவது (மனிதம் - அராஜகம் - ஜன நாயகம் என்று அப்பப்போ சொற்களை விளாசினால் புத்திஜீவிக் கவிஞனாய் கூட வரலாம்) கவிதை என்றால் அனஸ் எழுதிய அத்தனையும் கவிதைகளே. என் கணிப்பு என்னவென்றால் புத்தகத்தை மொத்தம் இருபது முற்பது பக்கத்துக்கு டயற்றிங் செய்திருக்கலாம். ஒரு அழகான அளவான தொகுப்பாய் வந்திருக்கும்.

புதுக் கவிதைக்கு எனக்கு வரைவிலக்கணம் தெரியாது. ஏன் மரபுக் கவிதைக்கும் தெரியாது. ஆனால் மற்றைய படைப்பிலக்கியங்களில் இருந்து கவிதை மாறுபடுவதற்கு சில காரணங்கள் உள்ளன. சொல்லாடல். நயம். உவமான உவமேயம். ஆகியவை அவற்றுள் சில. பினவரும் பந்தியையும் கவிதையையும் படித்தால் கவிதைக்கும் ஒரு கட்டுரைக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.

"கால் நூற்றாண்டுக்கு மேலாக எங்கள் புல்தரைகளுக்கு மேல் மனிதர்கள் வசிப்பதில்லை. மனங்களைச் சுமந்த நெஞ்சுக் கூடுகள் மரணங்களைச் சுமந்து சுமந்தே பழக்கப்பட்டுள்ளது. சோகங்கள் மட்டும் தான் எங்கள் தலைவிதி. . . . . . . . . " இனிக் கவிதையைப் படியுங்கள்.



எம் என் எம் அனஸ்



மு நித்தியானந்தன்



கரவைக்கவி

யுத்தத்தின்
கொடூர வெம்மையால்
மனிதம் கருகிற்று
இருப்புக்கள் குலைந்தன.......

தெருக்களில்
வயல்வெளிகளில்
கடற்பரப்பில்
பாடசாலைகளில்
சிறைச்சாலைகளில்
இராணுவ முகாம்களில்
மசூதிச் சுவர்களில்
ரத்தம் வழிந்தது.

மனிதர்கள்
காணாமல் போனார்கள்.

இராணுவம்
கைது செய்தமைக்கு
ரசீது கொடுத்தன.
..................
..................
சமாதான வெண்புறாக்கள்
செத்து
வீழ்ந்தன.

விடுதலை அரசியல்
அபத்த
நாடகமாகியது... .. ..

கட்டுரையை எழுதியவர் அனஸ். ஆனால் கட்டுரையாக அல்ல. காயப்பட்ட பூமி என்ற தலைப்பில் கவிதையாய்.(பிணம் செய்யும் தேசம் பார்க்க)

கவிதையை எழுதியர் மு.நித்தியானந்தன். கவிதையாய் அல்ல. பிணம் செய்யும் தேசம் புத்தகத்திற்கு முன்னரையாக. இருப்பினும் நித்தியின் முன்னுரை கவித்துவமானது. அனசின் கவிதை அவித்துவமானது. சிலவேளை கவிதை இப்படித்தான் எழுத வேண்டும் என்று மறைமுகமாக அனஸிற்கு நித்தியானந்தன் கொடுத்த அடிதான் முன்னுரையோ தெரியவில்லை. இனிமேல் கவிதை எழுத முனைபவர்களுக்கு நித்தியின் முன்னுரை ஒரு முன்னுதாரணமாக இருக்கும் என்னபதில் சந்தேகம் இல்லை. (31ம் பக்கம் பார்க்க)

# காஞ்சிப் பெரியவர் ஜெயந்திரர்
# சாமியா? ஆசாமியா?

பா ஜெயராஜன்


இந்துக்களின் திருநாளாம் தீபாவளி நாளில் அந்தக் கைதுச் செய்தியைக் கேட்ட அனைவருமே ஒரு கணம் ஆச்சரியத்தால் திகைத்தனர். அப்படி நடக்க வாய்ப்பில்லை என நம்ப மறுத்தனர். ஏனெனில் கைது செய்யப்பட்டிருப்பதாக கூறப்பட்டவர் சாதாரண ஆளல்ல. அவர் பெரும்பான்மை இந்துக்கள் போற்றிக் கொண்டாடும் மிகப்பெரிய இந்து மடமான காஞ்சி மடத்தின் தலைமைப் பீடாதிபதியான ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள். அதுவும் அவர் கொலைக்குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அன்பும் பண்பும் அறனும் தழைக்க தரணி முழுவதும் சுற்றுப் பயணம் செய்து வரும் மாமனிதர். வேதங்கள் கற்றவர். இறை தியானத்தில் தன்னை அர்ப்பணித்து சாமான்ய மக்களுக்கு ஆசி வழங்கும் நிலையில் இருப்பவர் என்றெல்லாம் போற்றப்பட்டு வந்தவர் மீது கொலைக் குற்றமா? மடத்தில் வாழ்ந்த மக்களுக்கு ஆசி வழங்கி வந்தவரை சிறையில் அடைப்பதா? என அவரை நம்பிய பலருக்கும் குழப்பம்.

அதேவேளை இவர் இலங்கை அரசுக்கு ஆதரவாக தனது செல்வாக்கை இந்திய மத்திய அரசில் செலுத்தி இலங்கைத் தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்தவர். இலங்கைத் தமிழ் மக்களில் பெரும்பான்மையோர் இந்து மதத்தினராக இருந்தும் ஒரு இந்து மடத்தின் தலைவரான ஜெயந்திரர் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவு வழங்கியதில்லை. மாறாக பார்ப்பணியத்தின் தலைவராக பார்ப்பணிய நலன் காப்பவராகவே இருந்து வந்துள்ளார். எனவே இவரின் கைது குறித்து இலங்கைத் தமிழ் மக்கள் கவலை கொள்ளத்தேவையில்லை எனக் கருதுகின்ற இலங்கைத் தமிழர்களும் உண்டு.

பார்ப்பணர் சங்கரராமன் என்பவரை பார்ப்பனர் ஜெயந்திரர் கூலிப் படைமூலம் கொலை செய்துள்ளார். அவரை பார்ப்பனரான ஜெயலலிதா கைது செய்து சிறையில் அடைத்துள்ளார். எனவே இது பார்ப்பனர்களுக்கிடையேயான பிரச்சனை. நாம் கவலைப்பட எதுவும் இல்லை எனப் பார்பனீயக் கண்ணோட்டத்தில் கூறுவோரும் உண்டு.

கொலை செய்யப்பட்ட சங்கரராமன் மகா பெரியவர் சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள் உயிரோடு இருந்த காலத்திலேயே மடத்தில் பணியாற்றி வந்தவர். ஜெயந்திரருக்கும் இளைய மடாதிபதி விஜயேந்திரருக்கும் மிகவும் நெருக்கமாக இருந்திருக்கிறார். கடும் உழைப்பின் மூலம் மடத்தின் மேலாளராக பதவி உயர்வு பெற்றிருக்கிறார். இக் காலகட்டங்களில் ஜெயேந்திரர் சமூக காரியங்கள் செய்வதில் அக்கறை காட்ட ஆரம்பித்தார். மடத்தின் மூலம் மருத்துவமனைகள் கட்டுவது பள்ளிக் கூடங்கள் கட்டுவது கோயில் திருப்பணிகள் என நிறைய.



மகாபெரியவர் சந்திரசேகர சரஸ்வதி உயிருடன் இருந்தவரை மடத்தை விட்டு வெளியே வந்ததில்லை. இறைப்பணியோடு நிறுத்திக்கொள்ளவேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். ஆனால் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதில் ஜெயந்திரருக்கு உடன்பாடு. விளைவு ? மடத்தில் இருந்தபடியே சமூக காரியங்களில் ஈடுபட ஆரம்பித்தார்.

மதமாற்றம் நிகழ அனுமதிக்கக் கூடாது என்பதில் ஜெயேந்திரரின் உறுதி அசாத்தியமானது. தமிழகத்தில் தென்மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறிய போது அங்கே நேரடியாக சென்றார். அதனை எதிர்த்து கட்சித் தலைவர்களுடன் நேரடியாகப் பேசினார். விளைவு? மதமாற்றம் கட்டுப்படுத்தப்பட்டது. தமிழகஅரசு மத மாற்றத் தடைச்சட்டம் கொண்டு வந்தபோது அதற்கு மூல காரணமே ஜெயேந்திரர் என்று சொல்லப்பட்டது. நவீனத்தைப் புகுத்துவதிலும் ஜெயேந்திரர் சளைக்கவில்லை. கம்பியூட்டரைக் கையாளும் திறன் தனக்கு உண்டு என்பதை ஜெயேந்திரர் நிரூபிக்கவும் தவறவில்லை. "தாழ்த்தப்பட்ட மக்களும் இந்துக்கள்தான் அவர்களை வேறுபடுத்திப் பார்ப்பதில் அர்த்தம் இல்லை" இப்படிச் சொல்லியதோடு குப்பங்களுக்கும் கிராமங்களுக்கும் விசிட் அடித்து அசத்தினார் ஜெயேந்திரர்.

ஜெயேந்திரரின் இந்த நடவடிக்கைகள் சங்கராமனுக்குப் பிடிக்கவில்லை என்று கூறப்படுகிறது. ஒரு மடத்தின் துறவி மடத்திற்குள்ளேயே இருக்க வேண்டும். வெளியில் வரக்கூடாது. பக்தர்களுக்கு காட்சி தருவதும்

ஆசி வழங்குவதும் மட்டுமே அவர்களது பணி. சமூக காரியங்களில் ஈடுபடுவது துறவிகளின் வேலையல்ல. பெரியவர் சரஸ்வதி சுவாமிகள் இப்படி இருந்ததில்லை. ஜெயேந்திரர் இப்படி மாறவேண்டிய அவசியம் என்ன? இவற்றைப் பற்றியெல்லாம் ஒருமுறை ஜெயேந்திரரிடம் நேரிலேயே கேட்டாராம் சங்கர ராமன். ஆனால் அவரது பேச்சு எடுபடவில்லை என்று கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து தமிழக அரசின் உயர் அதிகார வட்டத்திற்கு மடத்தின் செயல்பாடுகள் குறித்து சோமசேகர கனபாடிகள் என்ற புனைபெயரில் மொட்டைக் கடிதங்கள் போட்டிருக்கிறார். இது ஜெயேந்திரருக்குப் பிடிக்கவில்லை. மடத்தைப் பற்றிய விடயங்கள் இரகசியங்கள் வெளியே தெரியக்கூடாது. அதற்கு அவசியமும் இல்லை என்று அவர் கருதினார். ஆனால் சங்கரராமன் இளைய மடாதிபதி விஜயேந்திரர் பற்றியும் மொட்டைக் கடிதங்கள் போட்டிருக்கிறார். தொடர்ந்து கடிதங்கள் போடுவதை நிறுத்த ஜெயேந்திரரிடம் பெரும் தொகை (ஒரு கோடி ரூபா) கேட்டதாகவும் இது ஜெயேந்திரரை எரிச்சல் படுத்தியதாகவும் கூறப்படுகிறது. பல முறை எச்சரிக்கை செய்தும் சங்கரராமன் கேட்கவில்லை. இந்நிலையில் சங்கரராமன் கூலிப் படையினரால் கொல்லப்பட ஜெயேந்திரர் மீது கொலைப்பழி விழுந்திருக்கிறது. அவரை முதல் குற்றவாளியாக கைது செய்து பொலிஸார் வேலூர் சிறையில் அடைத்துள்ளனர்.

உடனே "இது ஜோடிக்கப்பட்ட வழக்கு. அரசியல் காரணங்களுக்காகவே ஜெயேந்திரர் மீது கொலைப்பழி சுமத்தப்பட்டிருக்கிறது. இதனை மத்திய அரசு விசாரிக்க வேண்டும்" என்றார் பா.ஜ.க தலைவர் அத்வானி.

தமிழகமுதல்வர் ஜெயலலிதா பெரும்தொகை ஒன்றை ஜெயேந்திரரிடம் கொடுத்து மடத்தில் பாதுகாத்து வைக்கச் சொல்லியிருக்கிறார். அதனை ஜெயேந்திரர் மறுக்கவே அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இப்படி ஒரு குண்டை பா.ஜ.க தலைவர்களில் ஒருவரான முரளி மனோகர் ஜோசி சொல்ல விவகாரம் சூடு பிடித்தது.

கைது செய்யப்பட்ட ஆரம்பத்தில் பொலிசாரைப் பாராட்டிய கலைஞர் கருணாநிதி பின்னர் இக்கைதில் மர்மம் இருப்பதாக கூற குழப்பம் இன்னும் அதிகரித்தது. இந்நிலையில் "சங்கரராமன் கொலையில் ஜெயேந்திர சுவாமிகளுக்கு நேரடியாகத் தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. அதனால்தான் அவரைக் கைது செய்தோம் என்று முதல்வர் ஜெயலலிதா சட்டசபையிலேயே இதனை அறிக்கையாக வாசித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஆர்.வெங்கட்ராமன் இதுபற்றி குறிப்பிடுகையில் "ஜெயேந்திரரை தமிழகஅரசு திட்டமிட்டு இவ்வழக்கில் சிக்க வைத்துள்ளது. மற்றுமொரு வழக்கையும் அவர் மீது போட்டுள்ளது ஆனாலும் அதையும் மீறி ஜெயேந்திரர் வெளியே வருவது உறுதி" என்கிறார்.

அப்பு ரவிசுப்பிரமணியம் போன்றோர் முக்கிய குற்றவாளிகள். அவர்கள் கைது செய்யப்பட்டால் முக்கிய தகவல்கள் கிடைக்கும் என்றனர் பொலிஸார். ஆனால் அவர்கள் கைது செய்யப்பட்ட பின்பும் உருப்படியான எந்தத் தகவலும் பெறப்பட்டதாக தெரியவில்லை. ஏனெனில் உச்ச நீதிமன்றில் தலைமை நீதிபதி தமிழகஅரசு வழக்கறிஞரிடம் ஜெயேந்திரர் கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதற்கு நேரடி சாட்சியம் ஏதும் உண்டா எனக் கேட்டபோது திருப்தியான பதில் அளிக்கப்படவில்லை. இதனால் உச்ச நீதிமன்றம் ஜெயேந்திரருக்கு ஜாமீன் வழங்கியது. ஜெயேந்திரர் ஜாமீனில் விடுதலையாகிறார் என்றதும் இளையவரான விஜயேந்திரை அவசரம் அவசரமாக கைதுசெய்து சிறையில் அடைத்தது தமிழக பொலிஸ்.

இக் கொலைவழக்கில் இதுவரை 27பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் விசாரணைக்கென முக்கிய பிரமுகர்கள் உட்பட பலருக்கு சம்மன் அனுப்பப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஜெயேந்திரருக்கு எதிராக வாக்குமூலம் கொடுத்த கதிரவன் என்பவர் பொலிஸார் கொடுத்த சித்திரவதையாலேதான் வாக்குமூலம் கொடுத்திருப்பதாக பல்டி அடித்துள்ளார். இனி வழக்கு விசாரணையின் போது யார் யார் பல்டி அடிக்கப் போகிறார்களோ தெரியவில்லை.

இவ்வழக்கு அரசியல் காரணங்களுக்காக ஜோடிக்கப்பட்ட வழக்கோ என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதாக சில அரசியல் நடுநிலையாளர்கள் சொல்கின்றனர். இதே கருத்தையே தற்போது கலைஞர் கருணாநிதி அவர்களும் கொண்டிருக்கின்றார். இதனால் ஜெயேந்திரருக்கு எதிராக போடப்பட்ட வழக்குகளில் மர்ம முடிச்சுகள் அவிழுமா என்பதே பொதுமக்கள் கருத்தாக உள்ளது.

## நிவாரணப் பணிகள் கிழக்கு இலண்டன் முதல் கிழக்கு மாகாணம் வரை







# கடலே கடல் அலையே

விஜி





நோவு செய்த கடலே!
காவு வேண்டிய கடலே!
சாவு கண்ட கடலே!
நாவு நடுங்கிய கடலே!

உலையே பொங்கியது எம் வீட்டில்
உன்னால் தானன்றோ கடலே!
விலையே அற்றவனாய் நீ நின்று
விருந்தோம்பல் செய்தாய் கடலே!
மலையே என வந்தெம்மைக் காவுகொண்டு
அகங்காரம் காட்டினாயோ கடலே!

முத்துக்குளித்தோம் உன்னிடம் - நீ
சத்தம் செய்ததில்லையே!
சத்துணவு பெற்றோரும் உன்னிடம் - நீ
சித்தம் மறுத்ததில்லையே!
பித்தம் பிடித்தவனாய் எம்மை - நீ
வித்துடல் ஆக்கிவிட்டாயே!

ஐந்தில் நான்கு பெரும்பகுதி
தந்திரக் கடல்தானென்று
பிந்தியுணர்ந்திட்டதில்லை - நாம்
முந்தியே ஏற்றிட்ட பின்பும்
சந்தி சிரிக்கும்படியாய் - தான்
பந்தி போட வைத்தாயே!
நிந்தனை இவ்வாறு ஏன் செய்தாய்
சங்கப் பேரலைகளால் கடலே!


வரண்ட மனிதனின் வாழ்வை
வளமாய் ஆக்கித் தந்தாய் நீ!
இருண்ட உலகின் தரத்தினை
இயல்பாய் உருவாக்கித் தந்தாய் நீ!

மிரண்டவனாய் வடிவெடுத்து
மீட்பர்கள் தான் இல்லாததாக்கி
திரண்டு வந்து கொன்றாற் போல்
கல்லறைகள் ஆக்கிவிட்டாயே!

ஓடித்திரிந்த கடற்கரை தனில்
தேடித்திரிய வைத்தாய் - உடல்களைத்
தேடித்திரிய வைத்தாய்!
பாடித் திரிந்த கடல் மடிமீதினில்
நாடி அலைய வைத்தாய் - அனாதையாய்
நாடி அலைய வைத்தாய்!

கூடித்திரிந்தோம் உன்னுடன்
இன்பமாய்
குதுகலமாய்தானே!
கேடி போல் செயற்பட எங்கனம் - நீயும்
கெட்டவனானாயோ!





## நீங்களும் ஒருக்கா திங் பண்ணுங்கோ :

* மற்றவர்களின் வேதனையில் நாங்கள் குளிர் காய்வது கூடாத காரியம் தான். ஆனால் இந்த மனுசனுக்கு இது கட்டாயம் தேவைதான். தான்தான் பெரியவரின் நம்பிக்கைக்குரியவர், தான் தான் தலைவரின் நேரடித் தொடர்பில் இருப்பவர் என பெரிய மைலேஜ் செய்தவர் இப்போது வன்னியில் சிக்கிவிட்டாராம். பாவம் தான். ஆனால் பூரிக்காமல் இருக்க முடியவில்லை. லண்டனில் இருக்கிறேன், கோயில் நடத்துகின்றேன், Housing Director என்ற இறுமாப்பில் அட்வைஸர் பாலவுக்கே சாணி பூசி நோட்டீஸ் அடித்த பெரியவர் இவர். வாய்ப்பேச்சும் மொட்டைக் கடிதமும் எவ்வளவு தான் வேலை செய்யும். சவுத்தோல் சிவநேசன் ஒரு நாளைக்காவது வெளிச்சத்திற்கு வர வேண்டாமோ?

* இந்த புலி எதிர்ப்பு கோஸ்டிகள்ள உள்ள சிலபேருக்கு முல்லைத்தீவில் சுனாமி அடிச்சதிலை கொஞ்சம் அறுதல். அவங்கள்ளையும் எக்கச்சக்கமா போயிருக்கும் எண்டு தங்களுக்குள் சொல்லிக் கொளீனம். என்னதான் புலியைப் பிடிக்காட்டிலும் இப்படி சீப்பா திங் பண்ணலாமோ. பிழை சரி இருக்கலாம் அதுகளும் உசிர்தானே. பெத்தவள் என்ன பாடுபடுவாள். அது போலத்தான் ஆமிக்காரண்களும். சண்டையும் கொலையும் கூடி எங்கட திங்கிங் எங்க போகுது பார்த்தியளே.

* வயது 40ஐத் தாண்ட என்னை கடவுள் பயம் ஆக்கிரமித்துக் கோண்டே இருக்குது. இப்பவெல்லாம் கோயில் திருவிழா என்டு கிளம்பிவிடுறன். கிட்டத்தில ஆச்வே கோயிலுக்குப் போனா சகல கோயில்காரர்களும் சைவ முன்னேற்றச் சங்க உறுப்பினர்களும் வேட்டி சால்வை காலில் சுற்ற அங்கும் இங்குமாக படு பிசியாக திரிந்தார்கள். ஏதோ எல்லா சைவ பெரியார்களும் சேர்ந்து சுனாமி நிதிக்குத் தான் ஏதோ செய்கிறார்கள் என்ற நினைப்பில் எட்டி மண்டபத்தினுள் கண்ணோட்டம் விட்டேன். சாமத்தியப்பட்ட பிள்ளையைப் போல சிதம்பரப்பிள்ளை நடுவில் குந்தி இருக்க அனைவரும் அவரைச் சுற்றி நிற்க நான் உண்மையில் ஏங்கிப் போனேன். என்ன விசயம் என்று விசாரிச்சா, அவர் சொன்னார் ஐயா சிதம்பரப் பிள்ளைக்கு 60 வயதாம், அவர் நல்லா இருக்க விழா எடுக்கிறார்களாம் என்று. இந்த கோயில்காரர்கள் தம்மை பிசியாக்க என்னவெல்லாம் செய்கிறார்கள். நம்பவே முடியவில்லை. வாழ்க! சைவத்தொண்டு.

* சனங்கள் அல்லோலகல்லோலப்படேக்க வளர்த்துவிட்ட அந்த சனத்தை தலைவர் ஒரு எட்டுப் போய் பார்த்திருக்க வேணும். ஒண்டே இரண்டே பல ஆயிரம். குஞ்சு குறுமன், பெண் புரசுகள் எண்டு பார்க்காம எல்லே கடல் கொண்டு போயிட்டுது. இவ்வளவுக்கும் கோடிக்குள்ள இருந்த நீங்கள் எல்லா இடமும் போய் பார்த்திருக்க வேணும். அதைவிட்டுப் போட்டு துக்கம் விசாரிச்சு உதவ வந்தவையை சோத்துப் பாசலாலை எறிஞ்சு விரட்டியது கொஞ்சம் கூட நல்லா இல்ல. வந்தாரை வரவேற்பது தமிழர் பண்பாடெல்லோ. நீங்களும் வெளில வந்து சனத்தைப் பார்க்கேல்லை. வந்தவையை கலைச்சு கலைச்சு விரட்டிப் போட்டு ஐ.நா அன்னன் வந்து பார்க்கேல்லை என்று குழம்பினால் என்ன நியாயம்.

புத்தம் புதிய கணனிகள் £199 முதல்
உங்கள் தேவைகளுக்கு ஏற்ப
வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
**Viveq Computers**
Tel : 020 8422 3422
155 Greenford Rd
Sudbury Hill
HA1 3QN

# POLICE APPEAL FOR ASSISTANCE

**Young Tamil men from your community are being intimidated, seriously assaulted, and in extreme cases, murdered. The Metropolitan Police Service wants your assistance to help stop the violence.**

Today's operation is part of tackling this crime. We are committed to making communities safer.

Without your help it is very difficult for us to know who the criminals targeting your community are.

If you have any information on people who may be involved in criminal gangs, violence, financial fraud or other crime please phone the confidential Tamil hotline on:

# 0800 587 2935

where you can leave a message in Tamil or English. Alternatively please speak to your local police.

உங்களது சமூகத்தை சேர்ந்த தமிழ் இளைஞர்கள் மிரட்டப்பட்டும், கடுமையாக தாக்கப்பட்டும், சில வேளைகளில் கொலை செய்யப்பட்டும் இருக்கிறார்கள். இந்த வன்முறையை தடுத்து நிறுத்த மாநகர காவல் துறை உங்களது உதவியை நாடுகிறது.

இந்த குற்றச்செயல்களை தடுத்து நிறுத்துவது இன்றைய எமது நடவடிக்கையின் ஒரு அங்கமாகும். சமூகங்கள் பாதுகாப்புமிக்கதாக மாறவேண்டும் என்பதில் நாங்கள் சிரத்தையாக இருக்கிறோம்.

உங்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் உங்களது சமூகத்தை இலக்குவைக்கின்ற குற்றவாளிகள் யார் நாங்கள் கண்டறிவது மிக கடினம்.

குற்றக்கும்பல்களுடன் தொடர்புகொண்டவர்கள், வன்முறையில் ஈடுபடுபவர்கள், பணம் சம்பந்தப்பட்ட ஏமாற்று வேலைகள் மோசடிகளை செய்பவர்கள், வேறு குற்றங்களில் ஈடுபடுபவர்கள் ஆகியவர் எவர் பற்றியேனும் உங்களிடம் தகவல் இருந்தால், தயவுசெய்து நீங்கள் தமிழில் தகவல் வழங்கக்கூடிய சிறப்பு சேவைக்கு 0800 587 2935 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ளவும். தமிழிலோ ஆங்கிலத்திலோ பேசி நீங்கள் செய்தியை பதியவிடலாம். மாறாக உங்கள் பகுதி பொலீசாரையும் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

METROPOLITAN POLICE

*Working for a safer London*

30 06 04/G16541-A54

## நிவாரணப் பணிகளில் தேசம் :

நியூஹாம் கவுன்சிலர் போல் தலைமையில் தேசம் சஞ்சிகையினர் நிதி தவிர்ந்த சேகரிப்புப் பணிகளில் ஈடுபட்டனர். இதற்காக ஈஸ்ற்ஹாம் ஹை ஸ்ரீற் நோத்தில் ஒரு உதவி மையம் ஆரம்பிக்கப்பட்டது. சதா அன்கோ சொலிசிற்றேஸ் நிறுவனம் இவ்விடத்தை தற்காலிகமாக வழங்கி இருந்தது. இங்கு சேகரிக்கப்பட்ட பொருட்கள் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயம், சைவமுன்னேற்றச் சங்கம், ஈஸ்ற்ஹாம் தமிழ் தேவாலயம், Uniwest International, Trico International (Shipping) Ltd ஆகிய அமைப்புகள் சேகரிக்கப்பட்ட பொருட்களை அனுப்பி வைக்க உதவின. சேகரிக்கப்பட்ட மருந்துப் பொருட்கள் விமானமூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டு அக்கரைப் பற்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. போதுமான உடைகள் அனுப்பப்பட்டதை அடுத்து உடைகள் அனுப்புவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. விளையாட்டுப் பொருட்கள், சமையல் உபகரணங்களுக்கே தற்சமயம் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இவற்றை வழங்க விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

இப்பேரழிவு இடம்பெற்ற சில மணி நேரங்களிலேயே நிவாரணப் பணிகளையும் மீட்புப் பணிகளையும் மேற்கொண்ட பெயர் தெரியாத உள்ளூர் அமைப்புகளினதும், வர்த்தக ஸ்தாபனங்களதும் தனிநபர்களதும் பங்களிப்பு மிக அபாரமானது. சர்வதேச உதவிகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சென்றடையும் வரை ஒரு வாரகாலமாக உள்ளூரில் செயற்பட்டவர்களின் உழைப்பு, மனிதாபிமானம் பாராட்டப்பட வேண்டும். அதற்கு ஈடு இணை எதுவும் இல்லை.












படங்கள் :

1. நிவாரண பொருட்கள் குவிகின்றன.
2.. பொருட்களைத் தரம் பிரித்து அனுப்ப உதவிய இளைஞர்கள்.
3. பிரித்தானிய அரச அமைப்புகளை மீள்கட்டுமானப் பணியில் பங்கெடுக்கச் செய்வதற்கான சந்திப்பு.
4. அமைச்சுச் செயலாளர் ஸ்ரீபன் ரிம்ஸ் தேசம் நிவாரண மையத்தில் மக்களை சந்தித்து தனது அனுதாபத்தை தெரிவிக்கிறார்.